மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

www.aatrupadai.com

ஜூன் – 2024 இதழ் – 06 வைகாசி – ஆனி



மண்ணும் மக்களும் – பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஆற்றுப்படை வெளியீடு

(2024 – **ஜூன்** – இதழ் – 06)

ஆக்கம்

வே. பார்த்திபன்

தொகுப்பு

பா. பிரபாகரன்

அ.சி. நடராஜன்

தொடர்புக்கு - 97900 76772 / 90255 16415

பொருளடக்கம்


பொருளடக்கம்



கோயில் கட்டிடக் கலைக்கான வாஸ்து முறை:

பிரசாத வாஸ்து எனப்படுகிறது.

இதில் பல்வேறு வழிமுறைகள் ஆலய நிர்மாணத்தில் கைக்கொள்ளப்படுகின்றன.



1. அளவு முறை
2. திசை அறிதல் (சங்கு ஸ்தாபனம்)
3. ஆயாதி கணிதம்
4. வாஸ்து
5. பதவின்யாசம்
6. மனைத் தேர்வு
7. பிரமேஷ்டிகா ஸ்தாபனம்
8. கருவறை பதவின்யாசம்
9. பிரகார லட்சணம்



விஜய்பட்
மென்பொறியாளர்
கோவில் கட்டிடக்கலை ஆய்வாளர்
சென்னை

1.அளவு முறை

அளவு முறைகள் - நீட்டல் அளவை:

அளவை முறை ஏழு வகைப்படும், அவை

- **எண்ணல் *(Counting or Computation):***

  ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்ணாகவோ, வீசம், அரைக்கால், கால் என்ற இல்லகமாகவோ அல்லது பதாதி, சேனாமுகம், குமுதம் எனத் தொகையாகவோ எண்ணிக் கணக்கிடுவது **எண்ணல்** அளவை ஆகும்.

- **நிறுத்தல் *(Weights):***

  குன்றிமணி, வராகனெடை, பலம், வீசை, துலாம் எனப் படிக்கல் கொண்டத் தராசிலிட்டு நிறுப்பது **நிறுத்தலளவை** ஆகும்.

- **முகத்தல் *(Liquids):***

  பால், மோர், நெய் போன்ற நீரியல் பொருளை உழக்கு, படிகளால் மொண்டு எடுத்து அளப்பது **முகத்தலளவை** ஆகும்.

- **பெய்தல் *(Grain Measure):***

  நெல் முதலியவற்றை படி, மரக்கால்களில் சொரிந்து அளப்பது **பெய்தலளவை** ஆகும்.

- **நீட்டல் *(Liner Measure):***

  விரல், சாண், முழம் என நீளத்தை கை அல்லது கால்களால் அளப்பது **நீட்டலளவை** ஆகும்.

- **தெறித்தல் *(Time Measure):***


  நொடி, நாழிகை, நாள் எனக் காலத்தை கணித்து அளப்பது **தெறிப்பளவை** ஆகும்.

- **சார்த்தல்**

  சுரம், ஒலி, நிறம், உரு முதலியவற்றை கூறி "இப்படி", "அதைப்போல்" என்று ஒப்பிட்டு அளப்பது **சார்த்தலளவை** ஆகும்.

1.1 நீட்டல் அளவில் - மானாங்குலம்

அளப்பதற்கு பொதுவானது அங்குலம், எட்டு நெல் (யவை) அகலம் கொண்டது. விரல் அளவு அல்லது அங்குல அளவு மானாங்குலம் என்று சொல்லப்படும் (மானம்-அளவை) எட்டு நெற்களை அகலவாட்டில் ஒன்றோடொன்று நெருங்க அமைத்து அதன் மொத்த அகலம் ஒரு அங்குலமெனக் கணக்கிடப்படுகிறது.



மானாங்குலம்

ஓர் செந்நெல் குறுக்களவு -"**யவை** "

எட்டு "யவை" - ஒரு மானாங்குலம்

24 மானாங்குலம் – ஒரு கிஷ்கு முழம்

25 மானாங்குலம் – ஒரு பிரஜாபத்ய முழம்

26 மானாங்குலம் – ஒரு தனுர் முஷ்டி முழம்

27 மானாங்குலம் – ஒரு தனுர் கிரகம் முழம்

28 மானாங்குலம் – ஒரு பிராச்யம் முழம்

29 மானாங்குலம் – ஒரு வைதேகம் முழம்

30 மானாங்குலம் – ஒரு வைபுல்யம் முழம்

31 மானாங்குலம் – ஒரு பிகீர்ணம் முழம்


தஞ்சை பெரிய கோயில், அண்ணாமலையார் கோயில் போன்றவை கிஷ்கு முழத்தை அடிப்படையாக கொண்டு எடுப்பிக்கப்பட்டுள்ளன.



5.1.1 கிஷ்கு முழம்:



முழக்கோலை 24 பாகங்களாக பிரித்து அதில் அரை முழம், கால் முழம், அரைக்கால் முழம் வரையிலும், ஒரு விரல், அரைவிரல், கால் விரல், அரைக்கால் விரல் அளவுகளைக் குறித்தல் வேண்டும்.



முழக்கோல்

முழக்கோல் செய்வதற்குரிய மரங்கள் - சந்தனம், தேவதாரு, கருங்காலி, தேக்கு, முருக்கு, மா, பனை, வேங்கை, செண்பகம் ஆகிய மரங்களும், பொன், வெள்ளி, தாமிரம், இரும்பு ஆகிய உலோகங்களும் முழக்கோல் செய்வதற்கு ஏற்றவையாகும்.

கோல் சோழர் காலத்திய ஓர் நில அளவைக்கான ஒரு கருவியாகும். நிலத்தை அளந்து நிலவரி விதிக்கப் பயன்படுத்தப்பட்ட பதினாறு சாண் நீளமுடைய கோல் **“உலகளந்தான் கோல்”** என்றழைக்கப்பட்டது. சோழநாட்டின் நிலம் அனைத்தையும் துல்லியமாக அளக்கவும், அவற்றின் தரத்தை நிர்ணயிக்கவும் உலகளந்தான்குறவர் என்பவர் தலைமையில் இராசராச சோழன் ஒரு குழு அமைத்தார்.

ஒவ்வொரு ஊரின் நிலம், கோயிலுக்குத் தானமாக தரப்பட்ட நிலத்தின் அளவு, நிலத்துக்கான வரி, கோயிலுக்கு நெல் மற்றும் பொன்னாகக் கொடுக்கப்பட வேண்டிய வரி என அனைத்து விவரங்களும் பட்டியல் இடப்பட்டது

திருவாலங்காட்டில் உள்ள கோவில் கோபுரத்தில் இக்கோல் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. தஞ்சை கோவிலில் காணப்படும் உலகளந்தான் கோலின் சம அளவுள்ள படி எனும் பொருள் தருகிறது இக்கல்வெட்டு.

கல்வெட்டிற்கு சற்று தூரம் தள்ளி குறியீடொன்று காணப்படுகிறது. இது கோவிலின் முடிவாக இருக்கலாம்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருவுலகளந்த கோலுக்கு தஞ்சாவூர் உடையார் ஸ்ரீ இராஜராஜீஸ்வரமுடையார் கோவில் கல்வெட்டுப்படி ஒப்பிட்டு வந்த கோல் படி"

நன்றி: வரலாறு விரும்பிகள் சங்கம்





உலகளந்தான் கோல் கல்வெட்டு



ஸ்ரீநிவாஸ்
மென்பொறியாளர்
வேலூர்



யானை குத்திபட்டான் நடுகல்

இன்று நாம் வாழ்கின்ற பெருநகரங்கள் நூற்றாண்டுகளுக்கு முன்னர் காடுகள் சூழ்ந்த பகுதியாக காட்சியளித்தது. கால மாற்றத்தின்போது இந்த காடுகள் யாவும் கட்டிடங்கள் ஆக மாறியுள்ளது,

முக்கிய தொழிலாக கருதப்பட்டது, குறிஞ்சி முல்லை மருதம் நிலப்பரப்பில் விளைநிலங்கள் மிகுந்து காணப்பட்டன. காடுகளை நம்பி மனிதன் இருந்தான், காட்டு மிருகங்களிடம் தன்னை தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழல் இருந்தது, புலிகள், காட்டு பன்றிகள் உடன் போரிட்டு



ஓர் நகரத்தின் தோற்றத்திற்கும் அமைப்பிற்கும் தொன்மைக்கும் மிக முக்கிய சான்றாக அமைவதும் நடுகறக்களும் கல்வெட்டுகள் தான். வணிக பெருந்தெருக்கள், பெருவழிகள், ஏரி, குளங்கள் வாய்க்கால்கள் இருந்த செய்தியை கல்வெட்டுகள் தருகின்றன.

அன்று நமது வாழ்வியல் முறை இயற்கையை நம்பியிருந்தது, வேளாண்மை மிக

இறந்தவர்களின் நினைவாக நடுகற்கள் உள்ளன, இதேபோன்று யானையுடன் போரிட்டு உயிர் துறந்த வீரர்களுக்கும் நடுகற்கள் அமைத்து வழிப்பட்டனர் என்பதற்கு சான்றாக இந்த யானை குத்திப்பட்டான் நடுகல் உள்ளது.

போர்களத்தில் பகை நாட்டு அரசன் அமர்ந்திருந்த யானையை வீழ்த்தியவர்களுக்கு பட்டப்பெயர்கள் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன,

போர்களில் பகைவர்களின் யானைகளை கைப்பற்றினர், போர்களத்தில் யானை மேல் அமர்ந்தபடியே உயிர் துறந்த அரசர்களும் உண்டு யானைகளை பழக்கி அதனை போருக்கு பயன்படுத்தியும் சுமை தூக்க பழகியும், சுபநிகழ்வுகள் என மனிதர்கள் யானைகளை பயன்படுத்தி கொண்டனர். பாறை ஓவியங்கள் மூலம் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான தொடர்பு பல நெடுங்காலமாக இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

காட்டு யானைகள் கூட்டம் ஊருக்குள் வந்தன, யானைகளை விரட்டும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர் என்ற செய்தியை கண்டிருப்பீர்கள், இன்று யானைகளை மீண்டும் காட்டிற்குள் விரட்ட வனத்துறையினர் இருப்பது போன்று யானைகள் உடன் போரிட பயற்சி பெற்ற வீரர்கள் அன்று இருந்தனர்.

யானைகளுக்கு மதம் பிடித்தால் அதனை அடக்குவது மிக கடினம் மற்றும் ஆபத்தானது, இன்று மதம்பிடித்த காட்டு யானைகளை அடக்க கும்கி யானைகள் உள்ளன, மயக்க ஊசிகள் உள்ளன, ஆனால் அன்று யானைகள் உடன் போரிட வீரர்கள் இருந்தனர், வாள், வேல் வீராங்குசம் போன்ற கருவிகளை கொண்டு யானையுடன் போரிட்டனர். சற்று எண்ணிபாருங்கள் எத்தனை துணிவு இந்த வீரர்களுக்கு இருந்திருக்கும் மதம் பிடித்த யானையை நேருக்கு நேர் எதிர்கொண்டு போரிட.

ஒசூர் சுற்றுவட்டார பகுதிகளில் இன்று காட்டுயானைகளின் நடமாட்டம் அதிகம், கிருஷ்ணகிரி ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் பல இடங்களில் யானைகள் செல்லும் பாதை மெதுவாக செல்லவும் என்ற அறிவிப்பு பலகைகள் இருக்கும். சாணமாவு காடுகள் தேன்கனிக்கோட்டை பகுதிகளில் யானைகளின் வழித்தடத்தை காணலாம்.

யானைகள் நகரத்திற்குள் வரும் நிகழ்வுகள் நூற்றாண்டுகளாக நடக்கும் ஓர் நிகழ்வின் தொடர்ச்சி தான் இந்த யானை குத்திபட்டான் நடுகல்.

16 அல்லது 17 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இந்த யானை குத்திப்பட்டான் நடுகல் அருகிலேயெ மேலும் மூன்று நடுகற்கள் ஒரே சிற்ப அமைப்பில் உள்ளன, இந்த மூன்று வீரர்களும் யானையுடன் போராடி வீர மரணம் அடைந்திருக்க கூடும். நடுகல் கல்வெட்டுகள் இல்லாத காரணத்தினால் வீரர் உடைய பெயர் மற்ற விவரங்களை அறிய முடியவில்லை.

தற்போது இந்த நடுகல் **ஒசூர் சந்திர சூடேஸ்வரர் கோவில் மலைஅடிவாரத்தில் தர்மராஜா கோவிலுக்கு எதிரே வழிபாட்டில் உள்ளது**. விசேஷ நாட்களில் படையல்கள் படைத்து மக்கள் வழிபடுகின்றனர்.



கொம்பன் ஆந்தை





சரவணமணியன்.ப.அ
பொறியாளர்
சூழலியலாளர், வரலாற்று ஆர்வலர்
காளையார்கோவில்





INDIAN EAGLE OWL - ROCK EAGLE OWL - BUBO BUBO | ARITTAPATTI | TAMILNADU

CONSERVATION STATUS: LEAST CONCERN (POPULATION STABLE)

TAMIL NAME - உடல் முழுவதும் பழுப்பு நிறத்திலும், அவற்றுள் திட்டுகள் வெளிர் மஞ்சளும் - நல்ல பழுப்பும் சேர்ந்த நிறத்திலும், கூர்மையான வளைந்த அலகும், வலுவான கால்களும், கூர்மையான நகங்களும், அனைத்திற்கும் சிகரம் வைத்தார் போல தலையில் கொம்பு முளைத்தது போன்ற இறகு கற்றைகளும், காண்போரை மிரள செய்யும் செந்நிற கண்களையும் உடைய கிட்டத்தட்ட இரண்டு அடி உயரமுள்ள கம்பீரமான இவர்தான்ங்க “**கொம்பன் ஆந்தை**”.

பல இடங்களில் இவரை படம்பிடிக்க பாறைக் குன்றுகள், மலையடிவாரங்கள் என தேடிச்சென்று குரலோசை மட்டும் கேட்டு ஏமாற்றத்துடன் திரும்பிய எனக்கு இந்த முறை அரிட்டாபட்டிக்கு சபரியுடன் சென்று அழகு ரவிச்சந்திரன் அண்ணனை சந்தித்ததும் மூன்று மணிநேர தேடலுக்கு பின்னர் இவரை காணும் வாய்ப்பு கிட்டியது.

இவரின் கண்களை வைத்து அடையாளம் தெரிந்த கொண்டதும் படவியில் கவர்ந்து சபரியிடம் அங்கே உயரமான இடத்தில் உள்ள பாறை இடுக்கின் மரத்தின் கிளையில் அமர்ந்துள்ளது பார் என காட்ட அட என் கண்ணுக்கு தெரியவே இல்ல அண்ணே எங்க எடுத்த படத்தை காட்டுங்க னு பார்த்ததுக்கு அப்பறம் தான் அங்க இருக்கு னு நம்பினார் நம்ம தம்பி😂. பல நேரங்களில் இவர் நமது கண்ணெதிரே இருந்தாலும் சாதாரணமாக நம் கண்களுக்கு அவ்வளவு எளிதாக புலப்படுவதில்லை. அந்த அளவிற்கு தான் வாழும் பகுதிக்கேற்ப, சூழலுக்கேற்ப தன்னை



உருமறைத்துக் கொள்ளும்(Camouflage) ஆற்றல் மிக்கவர் னு படித்திருந்தாலும் நேரில் பார்த்த அனுபவத்தின் மூலமே அதனை முழுமையாக உணர முடிந்தது.

இரவாடியான இவர் காலை மற்றும் மாலை வேளைகளிலும் வெளி வந்து எலி, சுண்டெலி, தவளை என தனது இரையை சுவைக்க ஆரம்பிச்சுடுறாப்ளங்க. இருளில் ஊடுருவி பார்க்கும் இதன் அசாத்திய பார்வை திறன் காரணமாக தன்னை விட வலுவான இரையை கூட தன் கூர்மையான நகங்கள் மற்றும் அலகால் தாக்கி வீழ்த்தும் ஆற்றல் பெற்றவர்ங்க இவர்.

பகல் நேரங்களில் புதர் நிறைந்த பாறைகளோடு கூடிய மலைப்பக்கங்கள், ஆள் நடமாட்டம் இல்லாத புதர்க்காடுகள், கைவிடப்பட்ட பாறை குழிகள், பாறை குன்றுகளில் மற்ற பறவைகளிடமிருந்து மறைந்து ஓய்வெடுக்கும் இயல்புடையவர்.

ப்பூப்ப்... பூஊப்ப்ப்... என ஆழ்ந்த தொனியில் பேரொலி எழுப்புவதை மாலை நேரங்களில் பலமுறை கேட்டிருந்தாலும் தற்போது தான் அவரை படவியில் கவர வாய்ப்பு கிட்டியது. முதன் முறையாக பார்த்ததும் என்னை அறியாமல் புன்னகைக்க தொடங்கிவிட்டேன் காலம் மறந்து.

சங்க இலக்கியங்களில் குடிஞை என அழைக்கப்பெற்ற இவரின் குரலை உவமையாக பொன் செய்கின்ற தட்டான் ஊதுகுழல்க்கொண்டு தணலை ஊதும்போது பூம் - பூம் என்ற ஓசை எழுப்புவதை போல பேராந்தையின் குரலோசை இருந்ததாக நற்றினையின் பின்வரும் பாடல் எடுத்துரைக்கிறது.

"மரந்தலை மணந்த நனந் தலைக் கானத்து,

அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை,

பொன் செய் கொல்லனின், இனிய தெளிர்ப்ப"

"திசையெங்கும் பரந்து கிடக்கும் அந்தக் காட்டுக்கு மரங்கள்தான் தலை. அங்கே தலை விரித்து நிற்கும் ஞெமை மரத்தில் இருந்துகொண்டு

கோட்டான் (குடிஞை) குழறுகிறது. பொன்னில் அணிகலன் செய்யும் தட்டான்

பொன்னைத் தட்டும் ஓசை

இனிமையாகக் கேட்பது போல்

அந்தக் கோட்டானின் குழறல்

இனிமையாகக் கேட்கிறது."

இவருக்கு பின்வரும் வழக்கு பெயர்கள் தமிழில் உண்டுங்க.

கொம்பன் ஆந்தை - பாறைக் கழுகு ஆந்தை - கோட்டான் - குடிஞை - பேராந்தை - கொம்பன் முங்கா - பெரிய ஆந்தை - கழுகு ஆந்தை | அரிட்டாபட்டி | தமிழ்நாடு

காப்பு நிலை - தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்

அன்பன்,

ப.அ.சரவண மணியன்


PA Saravana Manian
PHOTOGRAPHY

லெய்டன் செப்பேடு



செப்பேடுகள் வழி சோழர் வரலாறு

பாகம் – 6

முகப்பு இலச்சினை.



மா.மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வுசங்கம் காரைக்கால்



முகப்பு இலச்சினையில் இரு மீன்கள், புலி, இரு பக்கமும் விளக்குத் தாங்கிகள், இதன் மேல் தீபம், கொடை, இருபுறமும் சாமரம், கிடைமட்டமாய் வில், இவைகள் உள்ளன..

முகப்பு இலச்சினையில் இராஜேந்திரசோழனின் சாசனம் உள்ளது.

பெரிய லெய்டன் செப்பேடு.

இராஜராஜனின் 21 ம் ஆட்சியாண்டு.

கி.பி. 1005.

தற்போது இச்செப்பேடு ஹாலந்து நாட்டில் உள்ள லெய்டன் பல்கலைக் கழகத்தில் உள்ள லெய்டன் அருங்காட்சியகத்தில் உள்ளது.

இச்செப்பேட்டு விபரங்களை ***Epigraphy indica vol 22 இல் Page 213 - 266 வரை பதிப்பிக்கப்பட்டு 1933 ம் ஆண்டு வெளிவந்தது. பதிப்பித்தவர் K.v. சுப்பிரமணி ஐய்யர்.*** இச்செப்பேட்டு எவ்வாறு யாரிடமிருந்து கிடைத்தது என்ற விபரங்கள் கிடைக்கவில்லை..

நாகப்பட்டினத்திலிருக்கும் சூடாமணி பௌத்த விஹாரத்திற்கு ஆனைமங்கலம் என்னும் ஊரை தானமாகக் கொடுத்ததால் இச்செப்பேடு **ஆனைமங்கலச் செப்பேடு** என்றும் அழைக்கப்படும்.

இராஜராஜனின் 21 ஆம் ஆட்சியாண்டில் இந்தக் கொடை வழங்கப்பட்டது. இராஜராஜன் மறைவிற்குப் பிறகு அவரது மகன் இராஜேந்திரன் காலத்தில் இச்செப்பேடு வெளியிடப்பட்டது.

இந்த செப்பேட்டில் 21 ஏடுகள் உள்ளன.

111 வரிகள் வடமொழியிலும் 332 வரிகள் தமிழ் எழுத்துக்களிலும் உள்ளன.

" ராஜத் ராஜன்ய மகுட ஸ்ரேனி ரத்னேஷூ ஸாஸநம் இதி ராஜேந்திர சோளஸ்ய பரகேசரி வர்ம்மண."

அரசர்களின் முடிகளின் வரிசையில் ரத்னம் போன்று திகழும் இது பரகேசரி வர்மனான இராஜேந்திர சோழனின் சாசனம்."


சத்திரியசிகாமணி வளநாட்டில் பட்டினக்கூற்றத்தில் நாகப்பட்டினம் என்னும் ஊரில் கடாரத்து அரசன் மாரவிசயோதுங்க வர்மனால் அவனது தந்தையின் பெயரில் சூளாமணி விஹாரம் ஒன்று எடுக்கப்பட்டது. அந்த புத்த விஹாரத்துக்கு



ஆனைமங்கலம் என்னும் ஊரை பள்ளிச்சந்தமாக இராஜராஜன் வழங்கிய ஆணையே இச்செப்பேட்டு விபரங்களாகும்.



The royal Chola insignia mounted on the copper ring that holds the plates together. Photo:A. Rangarajan/Leiden University Library (special collections)



No. 34.] THE LARGER LEIDEN PLATES OF RAJARAJA I. 213

No. 34.—THE LARGER LEIDEN PLATES (OF RAJARAJA I).

By K. V. Subrahmanya Aiyer, B.A., Coimbatore.

The Leiden University Museum in Holland preserves two sets of copper-plate charters of the Chōḷas of which the larger contains 21 leaves or plates and the smaller 3 leaves. These are popularly known as the Large and Small Leiden Grants. They were edited nearly half a century ago, *i.e.*, in 1886 by Pandit Natesa Sastri and Burgess in Volume IV of the *Archæological Survey of Southern India*.[1] The provenance of the plates is not noticed by the authors: but regarding the larger set they say that it is engraved in Chōḷa-Grantha characters on 21 plates each measuring 14" by 5". They also note:—" The plates are held together by a massive ring bearing a seal about $4\frac{1}{2}$" in diameter with 16 knobs at about equal distances from each other round the margin. The central field contains, on the left, two fishes—the scales, fins, gills, eyes and mouth, of which are all clearly expressed; and on the right, an animal, seated dog-fashion, with its tail brought forward to touch the nearer of the fishes:—from the large tusk in its mouth, it is probably intended for a tiger—the Chōḷa symbol. Over it is a *chhatra*, with a *chāmara* on each side, the handles resting on the heads of two small pillars resembling lamp-stands,—each stand having a cloth knotted round the middle of it. The tops of these resemble lamp flames. A well-raised circle, double below, surrounds all this; and outside it, in raised characters of the Chōḷa-Grantha type, is the legend beginning at the bottom:—

Iti Rājēndra-Chōḷasya Parakēsarivarmmaṇaḥ rājarājanyamakuṭaśrēṇi-ratnēshu śāsanam ||"

The following additional information is found in the note recently received from Leiden, by Dr. Chakravarti, and kindly forwarded to me by him[2]: —" The plates are $\frac{1}{8}$" in thickness. On the left side there is a hole (diameter 1") by means of which the plates are fastened to a massive copper-ring having an outward diameter of 13". The ring has a circular section with diameter of $\frac{3}{4}$" and has been soldered into a cylindrical tube with raised rims. This tube, measuring $5\frac{1}{2}$" in length and $1\frac{1}{2}$" in section, contains a short inscription which contains the name Āṇaimaṅgalam in Tamiḷ. On the top of the tube there is a massive conical projection in the form of a lotus flower, with eight pointed leaves turned downward and sixteen pointed leaves turned upward. On the upper surface of this lotus is the seal" described above. The note further informs that " the writing has not been engraved: was written first on wax tablets and from these the copper-plates have been cast *à cire perdue* ".

To the careful observations of Messrs. Burgess and Natesa Sastri I would only add that the inner one of the double line at the bottom of the raised circle is intended to denote the bow emblem of the Chēras whom the Chōḷas had subdued, and that the legend requires slight emendation. Rājēndra-Chōḷa's legend is given in two stone inscriptions published in the *South-Indian Inscriptions (Texts)*, Volume V,[3] and also in the seal of the Tiruvālaṅgāḍu plates.[4] With the help of their readings the legend on the **seal** of the Leiden plates given by Burgess and Natesa Sastri may be corrected into—

Ētad-Rājēndra-Chōḷasya Parakēsarivarmmaṇaḥ [|*]
rājad-rājanya-makuṭa-śrēṇi-ratnēshu śāsanam [||*]

[1] Pp. 204 ff.
[2] [At my request Lt.-Col. Th. van Erp of Rijks Ethnographisch Museum, Leiden, kindly sent, through the good offices of Prof. J. Ph. Vogel, excellent ink-impressions of the grant from which the facsimiles accompanying this article are prepared—Ed.]
[3] General Nos. 578 and 579.
[4] *A. S. R.*, for 1903-04, p. 234.

வடமொழிப்பகுதி..

செய்யுள் *1 - 5*

விஷ்ணுவின் தோள்கள் உங்களுக்கு செல்வத்தைப் பெருக்கட்டும். சோழவம்சம் முழு உலகத்தையும் காக்கட்டும். அரசர்களுள் முதல்வனான மனு சூரியனுக்குப் பிறந்தான் பிறகு இட்சுவாக பிறகு மாந்தாதா. இவனது மகனாக முசுகுந்தன். அவன் மகனாக வளபன். அந்தக் குலத்தில் புகழ் பெற்ற சிபி தோன்றினான். பிறருக்காக தன் வாழ்க்கையைக் காத்தவன்.

செய்யுள் *6*

அந்தக் குலத்தில் சோழன் என்னும் மன்னன் பிறந்தான். அதற்குப்பிறகு தோன்றிய அரசர்கள் அவன் பெயரான சோழனென்னும் பெயரை பூண்டனர்.

செய்யுள் *7 - 8*

அதன் பிறகு எல்லா எதிரிகளையும் வென்ற இராசகேசரி பிறந்தான். பிறகு பரகேசரி பிறந்தான். இராசகேசரி மற்றும் பரகேசரி என்னும் இந்த மன்னர்களின் பெயரை மாறி மாறிச் சூடிய மற்ற அரசர்களின் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

செய்யுள் *9 - 12.*

அதன் பிறகு கூற்றுவனை வென்றவனான மிருத்யுசித் தோன்றினான். பிறகு வியாக்கிரகேது, பஞ்சபன் பிறந்தான். அந்தக்குலத்தில் காவிரிக்கு கரை எடுத்த கரிகாலன் தோன்றினான். அந்தக்குலத்தில் கோச்செங்கணான் என்னும் புகழ் பெற்ற அரசன் பிறந்தான்.

செய்யுள் 13 - 17.

சோழர்குலத்தில் எல்லா அரசர்களையும் வெல்லும் திறன்பெற்ற விஜயாலயன் பிறந்தான். அவனுக்கு மகனாக அளவிடமுடியாத ஒளிபொருந்திய ஆதித்தன் பிறந்தான். அந்த ஆதித்தனிடமிருந்து பராந்தகன் என்னும் அரசன் பிறந்தான். சூரியகுலத்தின் கொடியைப் போன்ற அந்த அரசன் சிதம்பரத்தில் பிறை சூடிய பெருமாள் கோவிலுக்கு பொன் வேய்ந்தான்.

செய்யுள் 18 - 20

பராந்தகனுக்கு முத்தீயைப் போன்ற மூன்று புதல்வர் பிறந்தனர். இராசாதித்தன். கண்டராதித்தன். அரிஞ்சயன். பராந்தகன் சுவர்க்கத்தை அடைந்தப்பிறகு இராசாதித்தன் தலைவனான். கிருஷ்ணராஜனோடு நடந்தப் போரில் அவனை படையோடு சேர்ந்து கலங்கடித்தான்.

கூறான அம்புகளால் நெஞ்சு பிளக்கப்பட்டு யானையின் மீது அமர்ந்தவாறே சொர்க்கம் சென்றான்.

செய்யுள் 21 - 23

அதன்பிறகு இராசாதித்தனின் தம்பியும் பெரும் புகழ் பெற்றவனுமான கண்டராதித்தன் அரசன் ஆனான். அவன் மதுராந்தகன் என்னும் பெயரையுடைய மகனைப் பெற்றான். காவிரியின் வடகரை பூமியில் தன் பெயரால் ஒரு கிராமத்தை உருவாக்கினான். அவன் சுவர்க்கம் சென்ற பிறகு எதிரி என்னும் காட்டுக்கு காட்டுத்தீ போன்ற அரிஞ்சயன் ஆண்டான்.

செய்யுள் 24 - 25.

அந்த அரிஞ்சயனுக்கு பராந்தகன் (சுந்தரச்சோழன்) பிறந்தான். சேவூர் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தன் கூரிய அம்புகளின் தொகுதியால் திசைகளை நிரப்பினான்.

செய்யுள் 26 - 30

அவன் கரிகாலன் என்னும் மறுபெயருடைய ஆதித்தனையும், சூரியகுலத்திற்கு சிரோமணி போன்ற இராசராசனையும் பெற்றான். அந்த பராந்தகன் இறந்த பிறகு ஆதித்தன் ஆண்டான். அவன் போரில் வீரபாண்டியனோடு இலீலையாய் விளையாடினான். அந்தப்போர் கர்வபட்ட யானையோடு சிங்கக்குட்டி மோதுவது போல் இருந்தது. ஆதித்தனுக்குப் பிறகு கண்டராதித்தனின் மகனும் பெரும் தோள் வலிமையுடைய மதுராந்தகன் ஆண்டான். இவன் இந்திரனைப்போல் புகழையுடையவன். அந்த மதுராந்தகன் வானுலகம் சென்றபிறகு சோழர் குலத்தின் விளக்கைப்போன்ற இராசராசன் அரியணை ஏறினான்.

செய்யுள் 31 - 34

இராசராசன்.. பாண்டிய , துளு, கேரளா, சிங்கள அரசர்களையும், சத்யாச்சரன் முதலான அரசர்களையும் வென்றான். எல்லா அரசர்களும் தங்களைக் காத்துக்கொள்ள நித்யவிநோதனான இராசராசனின் திருவடிகளில் அடைக்கலமானார்கள். இராசராசனை அவர்கள் இராசாச்சரயன் என்று போற்றினார்கள்.

செய்யுள் 35

ஒளிபெற்ற பாதபீடத்தை உடைய இராசகேசரிவர்மரான இராஜராஜனின் 21 ம் ஆட்சியாண்டு. சத்ரியசிகாமணி வளநாடு, பட்டினக்கூற்றம் நாகப்பட்டிணத்தில்.

ஸ்ரீவிஜயநாட்டின் தலைவனும் கடாகத்தின் அதிபதியும் சைலேந்திர வம்சத்தில் பிறந்தவனும் சூளாமணி வர்மனின் மகனான மாராவிஜயோதுங்க வர்மனால் , தனது தந்தையின் பெயரால் எடுக்கப்பட்ட உயர்ந்த பெருமையுடைய மிக அழகானதுமான சூளாமணி விஹாரத்தில் வீற்றிருக்கும் புத்தபகவானுக்கு ஆனைமங்கலம்

என்னும் கிராமத்தைக் தானமாக இராஜராஜன் கொடுத்தான்.

செய்யுள் 35 - 40.

இந்த சக்கரவர்த்தி தெய்வத்தன்மை அடைந்தபிறகு, இவனது மகனான மதுராந்தகன் (இராஜேந்திரன்) இந்த சாசனத்தை செய்தான்.

இந்த விஹாரம் வைபத்தோடு இவ்வுலகில் விளங்கட்டும்.கடார அதிபதி தனக்கு பிறகு வரும் மன்னர்களை இந்த அறத்தை காக்குமாறு வேண்டுகிறான். அனந்தநாரயணன் என்பவன் இந்த பிரசஸ்தியை யாத்தான்.


செய்யுள் 41 - 48

அரசனின் பெருந்தன அதிகாரியான தில்லயாளியின் ஆணைப்படி எழுதப்பட்டது. கிருஷ்ணன் என்பவனுடைய இரு புதல்வர்களான ஸ்ரீரங்கன், தாமோதரன், வாசுதேவனின் மகனான கிருஷ்ணனும், ஆராவமுதனின் மகனான புருஷோத்தமன். இவர்கள் ஐவரும் இந்த பிரசத்தியை செதுக்கினர்..

தமிழ்ப் பகுதியின் சுருக்கம்..

கோனேரிமை கொண்டான் 21 ஆம் ஆட்சியாண்டில், தஞ்சாவூர் புறம்படியில் இராசாச்ரய மாளிகையின் தெற்குப்பக்கம் உள்ள மண்டபத்தில் வீற்றிருக்கும் போது கடார அரசனான சூளமணிபன்பன் சத்திரியசிகாமணி வளநாடு பட்டணக்கூற்றம் நாகபட்டினத்தில் எடுத்த சூளாமணி பன்ம விஹாரபள்ளிக்கு 97 வேலி நிலப்பரப்புடைய ஆனைமங்கலம் என்னும் ஊரை பள்ளிச்சந்தமாக வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

விபரங்களை ஓலையில் எழுதியவர் அமுதன் தீர்த்தங்கரன். ஓலை எழுதுபவர்களின் தலைவர்



ஓலை நாயகமாக இருந்தவர் கிருஷ்ணன் ராமனான மும்முடிச்சோழ பிரம்மராயன்.

மேலும் பல அதிகாரிகள் ஆய்வு செய்து அரசனின் ஆணை ஸ்ரீமுகமாக பட்டினக்கூற்றத்திற்கு சென்றது. சபையோர் அரசனின் ஸ்ரீமுகத்தை தலையில் தாங்கி பிடிசூல் எல்லைகள் வகுக்கும் பணி தொடங்கியது.

இச்செப்பேட்டில் கிடைக்கும் சில அவசியத்தரவுகள்..

பராந்தகச் சோழன் தில்லை சிற்றம்பலத்திற்கு பொன்வேய்ந்த செய்தி.

பராந்தகனின் பிள்ளைகளாக இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், என்ற மூவர்தான் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஏனோ உத்தமசீலியை பற்றிய குறிப்பு இல்லை.

பராந்தகன் இறந்தபிறகு இராசாதித்தன் ஆண்டான் என்னும் செய்தியும் சற்று ஆய்வுக்குரியது.

அதேபோல் சுந்தரச்சோழன் இறந்த பிறகு அவனது மூத்த மகன் ஆதித்த கரிகாலன் பதவியேற்றான் என்ற செய்தியும் சற்று வியப்புக்குரியது.

இச்செப்பேட்டின் மிக முக்கிய மைய நோக்கம்..

நாகப்பட்டினதில் உள்ள கடாரத்து அரசனால் எடுக்கப்பட்ட பௌத்த விஹாரமான சூடாமணி விஹாரதிற்கு இராஜராஜன் கொடை அளித்த நிகழ்வு.

செப்பேட்டில் இடம் பெறும் ஸ்ரீவிஜயமன்னனால் எழுப்பப்பட்ட சூடாமணி விஹாரம் 18ம் நூற்றாண்டு பிற்பகுதி வரை நாகப்பட்டினத்தில் இருந்தது.

சூடாமணி விஹாரம் பற்றிய குறிப்புகள்.

The Dutch traveler Wouter Schouten visited the Tamil coast in the 1660s and described a brick structure at Nagapattinam that he termed the "Chinese Pagoda;" an account repeated by a Dutch priest François Valentyn in his 1724 publication. The structure was extant until the nineteenth century. Sir Walter Elliot visited the Chinese Pagoda in 1846 on board the government steamer *Hugh Lindsay*, which traveled down the coast, and described it as a "four-sided tower of three stories constructed of bricks closely fitted together without cement."[109] There was a fort in its vicinity and "about 11/3 miles NNW from the fort stands the old Black Pagoda, which is one of the most conspicuous objects in approaching this part of the coast."[110] In spite of local objections, the Governor-in-Council approved the demolition of the Buddhist monastery on 28 August, 1867 by French Jesuits who had been expelled from Pondicherry and had wanted to construct a college in its place.

1660 இல் டச்சுப்பயணி Woulter schouten என்பவர் நாகைக்கு விஜயம் செய்து இந்த புத்த விஹாரத்தை சீன பகோட என்று குறிப்பு எழுதினார்.

1724 ல் டச்சுப் பாதிரியார் பிரான்சிஸ் வேலன்டைன் (Francois valentyn) என்பவர் இந்த விஹாரம் பற்றி குறிப்பு எழுதுகிறார்.

1846 இல் சர் W. எலியட் என்னும் ஆங்கில அறிஞர் தான் எழுதிய பயணக்குறிப்பில் இவ்விஹாரம் பற்றி குறிப்பிடுகிறார். இந்த பௌத்த விஹாரம் நான்கு பக்க கோபுரங்களுடன் மூன்று நிலை கட்டிடமாக இருந்தது. சிமெண்ட் இல்லாமல் செங்கற்களால் எடுக்கப்பட்டது.

"Foursided tower of three stories constructed bricks closely fitted together without cement."

என்று எலியட் குறிப்பிடுகிறார்.



புதுச்சேரியிலிருந்து நாகைக்கு வந்த பிரஞ்சு பாதிரியார்களின் தூண்டுதலால் .. அப்போதைய ஆங்கில அரசு 1867 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ம் நாள் சூடாமணி விஹாரத்தை இடித்தது.

இப்பகுதியில் நடந்த அகழ்வாய்வில் பல புத்தர் சிலைகள் கிடைத்தன.

தற்போது நாகையில் இருக்கும் நீதிமன்ற வளாகத்தில் சூடாமணி விஹாரம் இருந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தொடர்வோம்..

அன்புடன்

மா. மாரிராஜன்..

Reference-சோழர் செப்பேடுகள்.

க. சங்கரநாராயணன். - Epigraphy indica vol 22.



முனைவர் ப. காளீஸ்வரன்,
இளநிலை அறிவியல் அலுவலர்,
வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம்,
மதுரை.



சென்னையின் பரபரப்பில் பஞ்சத்திற்கு கொஞ்சமும் குறைவில்லாத ஓர் பரபரப்பான பகுதி. பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதி, நங்கநல்லூர், மடிப்பாக்கம், ஆதம்பாக்கம், சைதாப்பேட்டை, தரமணி, பெருங்குடி என தன்னை சுற்றி மிகவும் பரபரப்பான பகுதிகளையும், குடியிருப்பு பகுதிகளையும், தொழில்நுட்ப நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டு சென்னையின் ஓர் முக்கிய நகரமாக வேளச்சேரி இன்று இருக்கின்றது.

இந்த முக்கியமான நகருக்கு இடையில் தான் **தண்டீஸ்வரம்** எனும் திருக்கோயிலும் அமைந்துள்ளது. இந்த **தண்டீஸ்வரர்** என்னும் பெயர் இன்று கொடுக்கப்பட்டது அல்ல. இன்றைக்கு சுமார் 1060 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த திருக்கோவிலில் கிடைக்கும் பழமையான கல்வெட்டில் கூட இறைவன் **திருத்தண்டீஸ்வரத்து மகாதேவர்** என்று குறிப்பிடப்படுகிறார்.

“வேளச்சேரி”



தமிழகத்தின் பல கோவில்களும் பல புராணக் கதைகள் இடைச்செருகப்பட்டு பல இறைவன், இறைவி பெயர்கள் கல்வெட்டில் உள்ளது போல் இல்லாமலும், தேவாரப் பதிகங்களில் உள்ளது போலவும் இல்லாமல் பெயர் மாற்றம் கண்டுள்ள நிலையில் கல்வெட்டில் 1060 ஆண்டுகளுக்கு முன் என்ன பெயரில் இருந்தாரோ அதே பெயரில் இன்றுவரை இறைவன் இங்கு இருக்கிறார் என்பது உண்மையிலேயே ஓர் அதிசயத்தக்க செய்தியாகவே நாம் காண முடிகிறது.

இந்த திருக்கோவிலில் காணப்படும் மிகப் பழமையான கல்வெட்டானது சுந்தரச் சோழரின் கல்வெட்டு ஆகும். சுந்தரச் சோழரின் ஐந்தாவது ஆட்சியாண்டு அதாவது கிபி 962 ஐ சார்ந்த கல்வெட்டு பழைய கல்வெட்டாக இக்கோவிலில் காணக் கிடைக்கிறது. இக்கல்வெட்டு தொடர்பான செய்திகள் தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி 9 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மூலம் வெளியிடப்பெற்ற புத்தகத்தில் காணப்படுகிறது.

வேளச்சேரியில் **செல்லியம்மன் கோவில்** மற்றும் **நரசிம்மர் கோவிலில்** கல்வெட்டுகள் கிடைத்தாலும் **தண்டீஸ்வரர் கோவிலில் 13 கல்வெட்டுகள் காலத்தால் பிற்பட்டு காணப்படுகின்றன.**

1060 ஆண்டுகளுக்கு முன்னால் கிடைத்த முதல் கல்வெட்டு கிபி 962 ஐ சார்ந்ததாகும். அதிலிருந்து கிபி 1262 வரை ஏறத்தாழ 13 கல்வெட்டுகள் இக்கோவில் தொடர்பாக கிடைத்துள்ளன.

சுந்தர சோழன் தொட்டு கோப்பெருஞ்சிங்கன் காலம் வரை இந்த திருக்கோவிலுக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டு மன்னரின் ஆளுகையில் இருந்ததை நாம் அறிய முடிகிறது.

இக்கோவிலில் காணப்படும் 13 கல்வெட்டுகள் முறையே:

சுந்தர சோழன்

ஆட்சி ஆண்டு 5; கிபி 962
ஆட்சி ஆண்டு 7; கிபி 964

முதலாம் இராசராசன்

ஆட்சி ஆண்டு 9; கிபி 995
ஆட்சியாண்டு 10; கிபி 14

முதலாம் ராஜேந்திரன்

ஆட்சியாண்டு 3; கிபி 1015ல் இரண்டு கல்வெட்டுகள்
ஆட்சியாண்டு 6; கிபி 1018
ஆட்சி ஆண்டு 10; கிபி 1022

இரண்டாம் இராசராசன்


ஆட்சி ஆண்டு 7; கிபி 1153

மூன்றாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு 25; கிபி 1203 இரண்டு கல்வெட்டுகள்

மூன்றாம் இராசராசன்

ஆட்சி ஆண்டு 22; கிபி 1238



கோப்பெருஞ்சிங்கன்

ஆட்சி ஆண்டு 18; கிபி 1261

சுந்தரச் சோழர்:

திருக்கோயிலின் முதல் கல்வெட்டாக சுந்தர சோழரின் ஐந்தாம் ஆட்சி ஆண்டு கிபி 962 பழமையான கல்வெட்டாக இருப்பதைக் கொண்டு இந்த திருக்கோயிலானது இந்த ஆண்டில் ஏறத்தாழ கற்றளியாக மாற்றம் செய்யப்பட்டு இருப்பதை ஓரளவு யூகிக்க முடிகிறது. ஏனென்றால் இதற்கு

முன்னதாக இப்பகுதியை சுந்தரச் சோழர் காலத்திற்கு முன்னதாக பெரும்பாலும் சோழர்கள் கைப்பற்றவில்லை. போரானது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பராந்தகரின் காலத்திலே இப்பகுதியானது ஏறத்தாழ சோழர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்ததால் இக்கோயிலில் சோழர் காலத்து கல்வெட்டு முதல் கல்வெட்டாகவும் இருக்க வாய்ப்புள்ளது.

உண்ணாழிகையின் தெற்குச் சுவரில் கல்வெட்டு கிடைப்பதாக புத்தகம் மூலம் அறிய முடிகிறது.


இந்த வேளச்சேரியானது புலியூர் கோட்டத்தில் வருகிறது. ஜெயங்கொண்ட சோழமண்டலம் ஆனது பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவற்றில் புலியூர் கோட்டமானது மிகப்பெரிய கோட்டம் என்று பல ஆராய்ச்சியாளர்களும் குறிப்பிடுகிறார்கள். அவ்வகையில் வேளச்சேரியிலும் காணப்படும் கல்வெட்டு **புலியூர் கோட்டம்** என்று குறிப்பிடப்படுகிறது.

புலியூர் கோட்டத்தில் கோட்டூர் நாட்டு வெளிச்சேரி ஊராக இந்த பகுதியானது குறிப்பிடப்படுகிறது. கோட்டூர்புரம் என்னும் பகுதி தற்பொழுது சென்னையில் உள்ளது. இந்த ஊர் ஆனது வெளிச்சேரி என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது. சுவாமியின் பெயர் பெரும்பாலும் எல்லா கல்வெட்டுகளிலும் தண்டீஸ்வரர் என்று குறிப்பிடப்படுகிறது.

ஊர் நிர்வாக சபையைச் சேர்ந்த ஆளும்கணத்து உறுப்பினர் 96 ஆடுகளை தானமாக கொடுக்கிறார். கோவிலில் விளக்கு எரிய வேண்டும் என்ற எண்ணத்தை எல்லா மக்களும் கொண்டிருந்ததை பல நந்தா விளக்கு கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன. நந்தா விளக்கு கல்வெட்டுக்கள் எல்லா திருக்கோவில்களிலும் காணப்படுவதில் இருந்து எல்லா மக்களும், மன்னர்களும் கோவிலில் விளக்கு எரிவதை விரும்பி இருக்கின்றனர், அதனை ஒரு கடமையாகக் கொண்டிருந்தனர் என்பதை நாம் அறிய முடிகிறது.

முதல் கல்வெட்டில் திருதண்டீஸ்வர தேவர் என்று திருக்கோவில் இறைவன் குறிப்பிடப்படுகிறார்.

விநாயகர்:



இவரின் ஏழாவது ஆட்சியாண்டு அதாவது கிபி 964, ஏறத்தாழ முதல் கல்வெட்டிற்கும் இதற்கும் இடைப்பட்ட காலம் இரண்டு ஆண்டுகள்.

சோழ நாட்டைச் சேர்ந்த ஒரு சகோதரர்கள் இக்கோவிலுக்கு விநாயகர் வழிபாட்டிற்கு திருவமுது படைப்பதற்கும், நந்தா விளக்கு எரிப்பதற்கும் நிலத்தை விற்றுக் கொடுக்கின்றனர். இவர்கள்தான் இத்திரு கோவிலில் விநாயகர் சிலையை எடுப்பித்தனர். திருக்கோவிலில் இருக்கக்கூடிய விநாயகரும் ஏறத்தாழ 1060 ஆண்டுகள் பழமையான விநாயகர் ஆவார். சோழ நாட்டு ஆற்காட்டு கூற்றத்து பதிற்றுவேலி என்னும் ஊரைச் சேர்ந்த இந்திரன் பழனத்தடிகள் என்பவரும் இவரது தம்பி அண்ணாமலை ஆகிய இரண்டு வேளாளர்களும் வெளிச்சேரி சபையினரிடம் நிலம் ஒன்றினை வாங்கி திருக்கோயிலுக்கு தானம் அளித்துள்ளனர்.

இந்த நிலத்தின் மூலம் வரும் வருவாயைக் கொண்டு தண்டீஸ்வர மகாதேவருக்கு சந்திர ஆதித்த வரை நந்தா விளக்கு எரிப்பதற்காகவும், இவர்கள் இருவரும் சேர்ந்து இக்கோவிலில் எடுப்பித்த விநாயகருக்கு உச்சிக்கால பூஜையின் போது இரு நாழி அரிசியால் திருவமுது செய்வதற்காகவும் நிலத்தை தானமாக கொடுக்கின்றனர். இதன் மூலம் விநாயகர் திருக்கோவிலுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்துவிட்டார் என்ற செய்தியையும் அறிகிறோம்.

தண்டீஸ்வரர் கோயிலில் மேற்குச் சுவரில் காணப்படுவதாக புத்தகம் குறிப்பிடுகிறது.

முதலாம் இராசராசன்:

சுந்தரச் சோழரின் காலத்திற்கு பிறகு ஆட்சிக்கு வந்த உத்தமசோழரின் கல்வெட்டு இக்கோயிலில் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த முதலாம் இராசராசரின் கல்வெட்டுகள் இரண்டு கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

ராசராச சோழரின் பத்தாவது ஆட்சியாண்டிலும் ஒன்பதாவது ஆட்சியாண்டிலும் என இரண்டு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. ஒன்பதாவது ஆட்சியாண்டு கல்வெட்டு நந்தா விளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடுத்த செய்தியையும், பத்தாம் ஆண்டு கல்வெட்டு திருவமுதிற்க்கு நிலம் தானம் அளித்த செய்தியையும் குறிப்பிடுகிறது. ஒன்பதாவது ஆட்சி ஆண்டில் திருத்தண்டீஸ்வரத்து மகாதேவர் வேறு ஒரு பெயரில் குறிப்பிடப்படுகிறார். அதாவது திரு தண்டீஸ்வரர் திருக்கற்றளி மகாதேவர் என்று அழைக்கப்படுகிறார். இதிலிருந்து இந்த திருக்கோவில் கற்றளியாக இருந்தது என்ற செய்தியை அறிய முடிகிறது.

புலியூர் கோட்டத்தில் வெளிச்சேரி ஆளும் கணத்து சபை உறுப்பினர்களில் ஒருவரான பத்தங்கி சட்ட சதுர்வேதி பட்டன் என்பவரின் மகன் நாராயண பட்டன் என்பவர் 96 ஆடுகளை நந்தா விளக்கு எரிப்பதற்காக இத்திருக் கோவிலுக்கு தானமாக அளித்துள்ளார்.

ராசராச சோழரின் பத்தாவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒரு புது செய்தியை நமக்கு தெரிவிக்கின்றது. புலியூர் கோட்டத்தில் கோட்டூர் நாட்டு வெளிசேரியின் புற ஊர் பகுதியாக தரமணி இருந்துள்ளது. தரமணி என்ற ஊர் இன்றும் இதே பெயரில் அழைக்கப்படுகிறது. இந்த தரமணியில் ஓர் சிவன் கோவில் இருந்துள்ளது. அதனை இந்த கல்வெட்டு குறிப்பிடுகிறது. புலியூர் கோட்டத்து கோட்டூர் நாட்டு வெளிச்சேரி பிடாகை தரமணி மகாதேவருக்கு என்று குறிப்பிடுவதில் இருந்து, தரமணி பகுதியில் இருந்த சிவன் கோவிலுக்கு உச்சி கால பூசையின் பொழுது திருவமுது செய்வதற்கும், சந்தி விளக்கு எரிப்பதற்கும் சோழ நாட்டைச் சேர்ந்த ஒருவர் தரமணியில் இருந்த நிலத்தினை வாங்கி கோவிலுக்கு தானம் அளித்துள்ளார்.

சோழநாட்டு கிழார் கூற்றத்து வைகாவூர் சேரி என்ற ஊரைச் சார்ந்த அமுதன் பிச்சன் என்னும் செம்பியன் கீழாநாட்டுக்கோன் என்பவரே தரமணியில் இருந்து 400 குழிக்கும் மேற்பட்ட நிலத்தை கோவிலுக்கு தானமாக அளிக்கிறார். இக்கல்வெட்டில் பல ஊர் பெயர்களும், பல மனிதர்களின் பெயர்களும் குறிப்பிடப்படுகிறது. மேலும் தரமணியில் இருந்த மகாதேவர் கோவில் கற்றளியாக எழுப்பப்படாமல் இருப்பதால் திருக்கோவில் சார்ந்த கல்வெட்டு அருகிலே இருக்கக்கூடிய வேளச்சேரி தண்டீஸ்வரர் திருக்கோவிலில் கல்வெட்டாக எடுக்கப்பட்டிருக்கலாம். இதே போல சோழ நாட்டில் திருச்செங்காட்டங்குடியில், அருகில் இருக்கக்கூடிய ராமநதிஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு இடம்பெற்றிருக்கும்.

முதலாம் ராஜேந்திரன்:

ராசராச சோழரின் ஆட்சிக்குப் பிறகு அவருடைய மகன் முதலாம் ராஜேந்திரன் ஆட்சிக்கு வந்த பொழுது அவருடைய மூன்றாம் ஆட்சி ஆண்டிலே இரண்டு கல்வெட்டுகளும், ஆறாம் ஆட்சி ஆண்டிலேயே ஒரு கல்வெட்டும், பத்தாம் ஆட்சிஆண்டிலே ஒரு கல்வெட்டும் திருக்கோவிலில் காணப்படுகிறது. இவ்வாறு தொடர்ந்து வந்த மன்னர்களால் திருக்கோவில் பராமரிக்கப்பட்டிருப்பதை இவர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

கிபி 1015 அதாவது முதலாம் ராசேந்திர சோழரின் மூன்றாவது ஆட்சியாண்டிலே புலியூர் கோட்டத்தில் கோட்டூர் நாட்டு பிரம்மதேயம்

வெளிச்சேரி ஆளும் கணத்து உறுப்பினர்களில் ஒருவரான பத்தங்கி காளகுமார கிரமவித்தன் என்பவர் இத்திருக்கோவிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்காக 90 சாவா மூவா பேராடினை தானமாகக் கொடுக்கிறார்.

அதே ஆண்டு வேசாலி நாட்டு பிரிவை சேர்ந்த ஆற்றூர் ஊரினைச் சேர்ந்த நாராயணன் என்பவர் 90 ஆடுகளைத் தானமாகக் கொடுக்கிறார். இப்பகுதி ராஜேந்திர சோழர் காலத்தில் பிரம்ம தேயமாக மாற்றப்பட்டு இருக்கின்றது. அவருடைய இரண்டு கல்வெட்டுகளிலும் கோட்டூர் நாட்டு பிரம்மதேயம் வெளிச்சேரி தண்டீஸ்வர மகாதேவர் கோயில் என்று குறிப்பிடப்படுவதாலும், இதற்கு முன்னர் காணப்பட்ட கல்வெட்டுகளில் பிரம்மதேசம் என்ற வார்த்தை இல்லாததால் ராஜேந்திர சோழர் காலத்திலே இப்பகுதி பிரம்ம தேயமாக மாற்றப்பட்டு இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவரின் ஆறாவது ஆட்சியாண்டு கல்வெட்டிலும் பிரம்மதேயம் என்ற வார்த்தை வந்துள்ளது.



கிபி 1018 அதாவது முதலாம் ராசேந்திரரின் ஆறாவது ஆட்சி ஆண்டில் வெளிச்சேரி ஆளும் கணத்து உறுப்பினரில் ஒருவரான கண்ணபிரான் சர்வாதித்தர் என்பவருடைய மனைவி நங்கை சாணி என்னும் பிராமணப் பெண் தண்டீஸ்வரர் திருக்கோவிலுக்கு நந்தா விளக்கு எரிக்க 90 ஆடுகளை தானமாகக் கொடுத்துள்ளார் . இந்த கல்வெட்டில் முதலாம் ராசேந்திரன் சோழரின் மெய்க் கீர்த்தி இடம்பெற்றுள்ளது. இதற்கு முன்னர் இருந்த ராஜராஜ சோழன் கல்வெட்டிலும், ராஜேந்திர சோழர் கல்வெட்டிலும் இடம் பெறவில்லை.

முதலாம் ராஜேந்திர சோழரின் பத்தாவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றும் இத்திரு கோவிலில் காணப்படுகிறது. திருக்கோவிலுக்கு சொந்தமான 1500 குழி நிலத்தினை 300 காசுகள் பெற்றுக் கொண்டு இந்த ஊர் ஆளும் கணத்தாருள் ஒருவரான பத்தங்கி நரசிங்க கிராமவித்தனிடம் வரி நீக்கி விற்று உள்ளனர். இந்த நிலத்தை பெற்றுக் கொண்ட நரசிங்க கிராமவித்தன் என்பவர் கோவிலுக்கு நந்தா விளக்கு எரிக்க 23 காசுகள் கொடுத்துள்ளார். இவ்விடத்திலே நாம் இப் பகுதியில் இருக்கக்கூடிய யோக நரசிம்மர் திருக்கோவில் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். வெளிச்சேரி பகுதியைச் சார்ந்த பத்தங்கி தேவநாதப் பட்டன் என்பவரின் மனைவி நங்கை சாணி என்பவள் இப்பகுதியில் நரசிம்மருக்கு என்று ஒரு கோவிலை எழுப்பி உள்ளார். இத்திருக்கவிலை கட்டிய தச்சருக்கு, தச்சுப் பணிக்காக நிலம் விற்று கொடுத்த செய்தி அந்த திருக்கோவில் கல்வெட்டிலே காணப்படுகிறது. நரசிம்ம பெருமாள் கோயில், நரசிம்மர் என்ற பெயர் தாங்கி இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து இருப்பதிலும் இருந்து நரசிங்கப் பெருமான் பற்றிய செய்தி பொதுவாகவே புழக்கத்தில் இருந்ததை அறிய முடிகிறது.

இரண்டாம் இராஜராஜன்:

இரண்டாம் இராஜராஜ சோழரின் ஒரு கல்வெட்டு திருக்கோவிலில் காணப்படுகிறது. கிபி 1153-ஐ சேர்ந்த இவருடைய ஏழாவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஆகும். இவருடைய கல்வெட்டிலே இப்பகுதியில் இன்னொரு ஆச்சரியம் நிகழ்ந்துள்ளது . ஜெயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர் கோட்டமான குலோத்துங்க சோழ வள நாட்டு கோட்டூர் நாட்டு சீன சிந்தாமணி சதுர்வேதிமங்கலம் என்று குறிப்பிடப்படுகிறது. இவருடைய காலத்திலே இப்பகுதி சீன சிந்தாமணி சதுர்வேதிமங்கலம் என்று பெயர் மாற்றம் கண்டுள்ளது. புலியூர் கோட்டமும் குலோத்துங்க சோழ வளநாடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

சோழமண்டலத்தில் பொதுவாக கோட்டம் என்று குறிப்பிடப்படாமல் பெரிய பகுதியினை வளநாடு என்று குறிப்பிடும் வழக்கம் இருந்தது. அதனால் இப்பகுதியிலும் நிர்வாக பிரிவானது சோழமண்டலத்திலும், ஜெயங்கொண்ட சோழமண்டலத்திலும் ஒரே போல் இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக வளநாடு என்று

மாற்றுவதற்கு முனைந்திருக்கலாம். ஆயினும் காலம் காலமாக புலியூர் கோட்டம் என்று அழைக்கப்பட்டு இருப்பதாலும், பின்னால் வந்த கல்வெட்டுகளில் புலியூர் கோட்டம் என்று அழைக்கப்படுகிறது.

திருக்கோவிலுக்கு இரண்டு சந்தி விளக்குகள் எரிப்பதற்காக இவ்வூர் கரணத்தார் திருச்சிற்றம்பலம் உடையார் என்பவர் ஏற்பாடு செய்துள்ள செய்தியை இரண்டாம் இராஜராஜனின் கல்வெட்டு குறிப்பிடுகிறது. ராஜேந்திர சோழரின் காலத்தில் பிரம்ம தேயமாக இருந்த பகுதியானது இரண்டாம் இராஜராஜர் காலத்தில் சீன சிந்தாமணி சதுர்வேதிமங்கலமாக பெயர் மாற்றம் கண்டுள்ளது நாம் இங்கு உற்று நோக்க வேண்டிய செய்தி ஆகும்.

மூன்றாம் குலோத்துங்கச் சோழன்:

இவருக்கு பிறகு ஆட்சிக்கு வந்தவர்களில் மூன்றாம் குலோத்துங்கச் சோழரின் கல்வெட்டுக்கள் இரண்டு கல்வெட்டுகள் இத்திருக்கோவிலில் காணப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கசோழரின் 25 ஆவது ஆட்சியாண்டு அதாவது கிபி 1203ஐச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் ஆகும்.

புலியூர் கோட்டம் என்று பல கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்ட கோட்டமானது மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலே குலோத்துங்கச் சோழ வளநாட்டைச் சேர்ந்த திருவான்மியூர் என்று குறிப்பிடப்படுகிறது. திருநாவுக்கரசர் மடம் என்ற ஒன்று இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. குலோத்துங்க சோழ வளநாட்டு திருவான்மியூர் திருநாவுக்கரசு மடத்தினை நிர்வகிப்பதற்காக வேளச்சேரி என்னும் சீன சிந்தாமணி சதுர்வேதி மங்கலத்திலிருந்து பத்து வேலி நிலமானது மடத்திற்குத் தானமாக வழங்கப்படுகிறது. 10 வேலி நிலத்தினை வழங்கியவர் சேதிராய தேவர் ஆவார். மடத்திற்கு தானம் வழங்கப்பட்டதால் மடப்புர இறையிலியாக குறிப்பிடப்படுகிறது. பள்ள கழனி என்னும் ஒரு வார்த்தை இக் கல்வெட்டிலே பயின்று வருகிறது.



அதே ஆண்டு பத்தங்கி சட்ட பட்டன் என்பவர் இரண்டு சந்தி விளக்கு எரிப்பதற்காக இத்திருக்கோவில் சிவபிராமணர்கள் அவருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொடுத்துள்ளனர்.

மூன்றாம் இராசராசன்:

மூன்றாம் இராசராசரின் 22 ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று இத்திருக்கோவிலில் காணப்படுகிறது. கிபி 1238 ஐச் சேர்ந்த கல்வெட்டு ஆகும். இந்த ஆட்சி ஆண்டில் இத்திருக்கோவிலில் நடராச பெருமாள் திருமேனி எடுப்பிக்கப்படுகிறது. வேளச்சேரி ஊரில் உள்ள சீகரணத்தான் உத்தம பிரியன் ஆழ்வார் பிள்ளை என்பவர் இத்திரு கோவிலிலே நடராசருக்கு திருமேனி செய்து வழங்குகிறார். அந்த நடராசர் திருமேனிக்கு ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்காக ஒரு மாடை பொன் அளித்துள்ளார். அன்றைய தேதிப்படி ஒரு மாடை என்பது 450 புது காசுகள் ஆகும். பழங்காசு, புதுக் காசு என்று பெயர்கள் கல்வெட்டுகளில் பொதுவாகவே பயின்று வரும். ஆட்சி மாற்றங்களின் போது இத்தகைய வார்த்தைகளை உபயோகிப்பார்கள்.

மூன்றாம் இராசராசரின் காலத்திலேயே பல மாற்றங்களை ஜெயங்கொண்ட சோழ மண்டலமானது கண்டிருந்தது. அவ்வகையிலேயே புது காசு எனும் வார்த்தை ஓரளவு நிர்வாகத்தில் ஏற்பட்டிருந்த சில மாற்றத்தை குறிப்பிடுவதை நம்மால் அறிய முடிகிறது. மேலும் மாடை பொன் என்ற செய்தியும் இதற்கு முன்னர் வேளச்சேரியில் காணப்பட்ட சோழர்கள்வெட்டுகளில் நாம் காண இயலவில்லை. இந்த மாடை என்பது தெலுங்கு சோழர்கள் கல்வெட்டுகளில் பொதுவாகவே காண இயலும். ஆக நிர்வாக மாற்றமும், ஆட்சி குழப்பமும் மூன்றாம் இராசராசர காலத்தில் ஏற்பட்டது என்பதற்கு இதுபோன்ற சிற்றில நிர்வாக மாற்றங்களும், நமக்கு சில செய்திகளை தருகின்றன.

இத்திருகோவிலில் நடராச பெருமாள் சிலை மூன்றாம் இராசராசர் காலத்திலே எடுக்கப்பட்ட செய்தியையும், இத்திருக்கோவிலுக்கு விநாயகர் சிலை பராந்தகன் எனும் சுந்தரச் சோழர் காலத்திலேயே எடுக்கப்பட்ட செய்தியையும் இத்திருக்கோவில் கல்வெட்டுகள் நமக்கு அரிய செய்தியாக வழங்குகின்றன.

கோப்பெருஞ்சிங்கன்:



இந்த திருக்கோவிலில் காலத்தால் பிற்பட்ட கல்வெட்டாக கோப்பெருஞ்சிங்கனாரின் 18 ஆவது ஆட்சியாண்டு அதாவது கிபி 1261 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. பெரும்பாலான சந்தி விளக்கு கல்வெட்டுகளில் நேரம் விளக்கெரியும் குறிப்பிடப்படுவதில்லை. ஆனால் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் திருக்கோவிலுக்கு ஏழு நாழிகை நேரம் எரியக்கூடிய சந்தி விளக்கு ஒன்றை சோழமண்டலத்து கீரங்குடி ஊரைச் சேர்ந்த மருதுடையான் சோறன் அரியாயதணன் என்பவர் 9 பணம் கொடுத்து சந்தி விளக்கு எரியச் செய்திருக்கிறார். 7 நாழிகை நேரம் எரியக்கூடிய சந்தி விளக்கிற்கு 9 பணம் என்ற செய்தி கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. ஏழரை நாழிகை என்பது 2 மணி 48 நிமிடம் என்று நம்மால் கணக்கிடப்படுகிறது.

வேளச்சேரியானது சுந்தர சோழர் காலத்தில் இருந்து கோப்பெருஞ்சிங்கன் காலம் வரைக்கும் பல்வேறு நிவந்தங்களைப் பெற்று பல பல மாற்றங்களையும் அந்த கோவில் கண்டு இன்றும் கம்பீரமாக நாம் பார்க்கும் வகையிலே நாம் போற்றும் வகையிலே இத்திருக்கோவில் இருக்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து நிற்கும் அதிசயமாக இத்திருக்கோவில் இன்றும் நம்மிடையே உள்ளது. இதனை பாதுகாப்பதும், பராமரிப்பதும், போற்றுவதும் நம்முடைய கையில் தான் உள்ளது.









படுகளம்








பிரியதர்ஷினி D.TEd

நாட்டார் வழக்காற்றியல் ஆர்வலர்



அவரது பெயர் ஆறுமுகம், இதுவரை யாரும் அவரை பெயர் சொல்லி அழைத்ததாக நினைவில்லை. எல்லோரும், சிறியவர்கள் முதலாக எல்லோரும் அவரை தோட்டி என்று தான் அழைத்து வருகின்றனர். அதில் எல்லாம் அவருக்கு எந்த வருத்தமும் இல்லை. எப்போதும் குழந்தையைப் போல வெள்ளந்தியாக சிரித்த முகத்தோடு இருப்பார். அந்த வெள்ளந்தி முகத்தில் ஊர் பெரியசாமி கும்பிடுக்கு சாமி சாட்டும் நாளில் மட்டும் அத்தனை கொடூரம் எப்படி வருகிறது என்பது தான் பெரும் ஆச்சரியம்.

திடீரென சந்நதம் வந்து உடல் நடுங்கி, உயர்த்திப் பிடித்த அரிவாளோடு தனியே எவரும் கண் காணாத தூரம் ஓடி வீறிடல் போல உக்கிரமாக, என்ன வார்த்தை என்று புரியாத வார்த்தைகளைக் கக்கிவிட்டு வருவார். அவராகவே இல்லாமல் வேறு யாரோ போல வேடம் பூண்டு கொண்டதைப் போல இருப்பார். பதினைந்து நாட்கள் திருவிழா முடியும் வரை அவர் வேறு ஒருவராகவே இருப்பார். முக்கியமாக எட்டாம் நாளில் நடக்கும் படுகளம்!

முறுக்கேறிய உடலும் தீவிரமேறிய முகமும் வெறிக்கும் கண்களுமாக அவர் யாரோ அயலாம்.

இன்றைக்கு தான் தோட்டி. அன்று சான்றுவன். பறை அறைந்து ஊருக்கு செய்தி உரைப்பவன் ஊருக்கும் ஊர் தலைமைக்குமான செய்தி தொடர்பாளன். ஒரு பாலம் அவன்.

ஒன்பது கம்பளம் நாயக்கர் வகையில் விஜய நகரப் பகுதியை சாமியப்பா நாயக்கர் ஆட்சி செய்து வந்தார் அவரது மகள் முத்தாள். அன்னையை இழந்தவள். சிற்றன்னை பராமரிப்பில் வசைகளோடு வளர்பவள். ஒரு நாள் அவளது அப்பாவிடம் சாம்புவன் ஊர் நிலவரம் ஒப்புவித்துக் கொண்டிருக்க அதனை கூர்ந்து கொண்டிருந்தாள் முத்தாள். அதனைப் பார்த்த சிற்றன்னை அவளை பலித்து வசை பாடினாள். தன்னை ஒரு ஆணுடன் சேர்த்து கேவலமாக பேசியதை பொறுக்க மாட்டாமல் கிளர்ந்து எழுந்து மொத்த குடும்பத்தையும் எதிர்த்து விட்டு வெளியேறினாள். அச்சமயம் அவள் ஒரு சிறு பெண்.

அங்கு யாதும் புரியாது நடந்த சாம்பவனுடன் நடக்கத் துவங்கி விட்டாள். பாவம் அவனுக்கு தான் இருபுறக்கொல்லி. அவன் மணமானவன் மனைவி மக்கள் உள்ளவன். எந்த ஆடவனோடு என்னை பலித்தாயோ அவனோடே செல்கிறேன் என்று தன்னிலை முடிவுடன் வரும் முத்தாளை அவன் என்ன செய்வான்? எப்படி? எங்கு அழைத்துப் போவான்? ஊருக்கு வெளியே ஒரு குடில் அமைத்து அவளை தங்க வைத்து காவல் இருந்தான். இதனை அறிந்து கொண்ட அவனது மனைவி மக்கள் தற்கொலை செய்து கொண்டனர். குடும்பத்தை மொத்தமாகப் பறிகொடுத்த கடும் துயரில் அவன் முத்தாளை வசைப்பாடத் துவங்கி விட்டான். ஆம் அவள் தானே காரணம்! இந்த செல்வகுமாரிகளே இப்படித்தான். அவர்கள் நினைப்பதும் அவர்கள் சொல்வதும் தான் முடிவு. 'இதுவே என் கட்டளை என் கட்டளையே சாசனம்' வகை.

சாம்பவன் துயருற்று, தவிப்புற்று, ஆத்திரமுற்று அவளை ஏசிவிட்டு தானும் கழுமரம் ஏறத் தலைப்பட்டான்.

உணர்ச்சி மிகுந்த நிலையில் முத்தாள் அக்கணம் விஸ்வரூபம் எடுத்து சாம்பவனின் நான்கு பிள்ளைகளையும் உயிர் மீட்டுக் கொடுத்தாள். சாம்பவானின் குளம் தழைக்கச் செய்தாள். அன்னையானாள்.

பின்னர் நாயக்க மன்னர்கள் தமிழகம் ஆண்ட போது அவர்கள் கொற்றம் அமைத்த இடங்களில் எல்லாம் முத்தாளுக்குக் கோயில் நிறுவினார்கள். விழாக்கள் எடுத்தார்கள்.

இன்றும் நாயக்கர்கள் பெருமளவு வாழ்கின்ற ஊர்களில் முத்தாலம்மனுக்கு கோயிலும் திருவிழாக்களில் முத்தாலம்மன் வரலாறும் பிரதானம். முத்தாலம்மன் வரலாற்றில் ஊர் சாம்பவன் குடும்பமே பிரதானம்.

இப்போது ஆறுமுகமும் அவரது குடும்பமும் அதனை நிகழ்த்துகிறார்கள். அதுதான் படுகளம்!

ஊர் மையத்தில் முத்தாலம்மன் கோயில் முன்பு கழுமரம் நடப்படும். கழுமரம் என்பது கூர்மையான, மரத்தால் செய்யப்படும் ஆயுதம். அதில் வழிய வழிய எண்ணெய் தடவி, தண்டனைக்குரியவரை கயிற்றால் கட்டித் தூக்கி ஆசனக் குழாயில் கழுமரத்தின் கூர்மையான பகுதியைப் பொருத்தி அப்படியே விட்டுவிடுவார்கள். கழுமரத்தின் கூர்மையினாலும் அதில் வழியும் எண்ணெயினாலும் அந்த உடல் வழுக்கிக் கொண்டு கீழிறங்கும். கழுமரம் அந்த உடலைப் பிளந்து கொண்டு நிற்கும். எத்தனை கொடூர தண்டனை!

அந்தக் கூர்மையான கழுமரம் இப்பொழுது இல்லை. ஒரு உயரமான மரக் கம்பத்தில் எண்ணெய் தேய்த்து மெழுகி ஆழக் குழி தோண்டி ஊன்றி இருப்பார்கள்.


ஆறுமுகம் தன் வீட்டுப் பிள்ளைகளை இறந்தவர்கள் போலக் கிடத்தி வெள்ளைத் துணியால் மூடி இருப்பார். அழுது ஒப்பாரி வைப்பார். பின் கையில் அரிவாள் ஏந்தியபடி ஆத்திரத்தோடு கோயிலை நோக்கி அம்மனை ஏசுவார். பின் வாழ்வையே வெறுத்தவராக கழுமரம் நோக்கி ஓடுவார். ஏறமுடியாமல் எண்ணெயில் வழுக்கி வழுக்கி கீழே சரிவார். அப்பொழுதெல்லாம் ஆத்திரத்தோடு ஒரு ஒலி எழுப்புவார். கண்களில் கனலும் முகத்தில் தீவிரமுமாக இருப்பார்.

கிடத்தப்பட்ட குழந்தைகள் இருபத்தியோரு நாட்கள் புழால் உண்ணாமல், காலணிகள் அணியாமல் தீவிர விரதமிருந்து இந்த பாடுகளத்திற்காக தயார் செய்யப் படுவார்கள். அவர்கள் அங்கே கிடத்தப் பட்டதும் ஒருவித ஆழ்நிலை மயக்கத்திற்கு செல்வதாகக் கூறப் படுகிறது. சரியாக ஆறுமுகம் கழுமர உச்சியை அடையும் போது பிள்ளைகள் மீண்டெழுவார்கள். விரத முறைமை தவறியவர்கள் எழமுடியாமல் போகலாம் என்றும். அப்படியே எழாமல் போனவர்களும் உண்டு, முந்தைய ஏதோ ஒரு தலைமுறையில் என்றும் கூறப் படுகிறது.

இதைப் போல தீமை செய்த அரக்கனை அழித்தவள், பஞ்சம் மற்றும் கடும் வறட்சி போக்கியவள், நல்வழி காட்டியவள்என்று முத்தாலம்மனுக்கு ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு கதை சொல்லப் படுகிறது. ப உரியது.அதில் மாற்றம் இம்மண்ணிற்கு டுகளம், மயானக் கொள்ளை போன்ற நிகழ்வுகளே முத்தாலம்மன் திருவிழாக்களில் பிரதானம்.

தமிழ் நிலம் முழுக்க முத்தாலம்மன் வேறொரு நிலத்திலிருந்து வந்தவளாகவே வரலாறுகள் சொல்லப்படுகிறது. திருவிழாக்கள் தோறும் பறையர் குலமே பிரதானம். தமிழ் நிலத்தின் நாட்டார் வழிபாட்டில் பூணூல் இல்லை, சாதிய ஏற்றத்தாழ்வு இல்லை, தீண்டாமை இல்லை. எல்லாம் பின்னாட்களில் வந்தவையே.

கருத்தியல் கொள்கைகளோ, மந்திர எந்திரங்களோ ஏதுமற்ற எளிய பாமர நாட்டார் வழிபாட்டு முறையே இம்மண்ணிற்கு உரியது. அதில் மாற்றுக் கருத்தே இருக்க முடியாது.


Bala's Click
சமணமும் அமணமும்
பாகம்-3





வெ.பாலமுரளி
தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்
மதுரை



வரலாற்றின் தொடக்க காலத்தில் மனித இயல்பால் சில தவறுகள் நடந்ததென்னவோ உண்மைதான்.

ஆனால், மனித எண்ணங்கள், அறிவியல் எல்லாமே ஏகத்துக்கும் வளர்ந்து விட்ட இந்த நவீன யுகத்தில் வேண்டுமென்றே வரலாற்றை திசை திருப்பியதை தமிழர்கள் மீதும், நம் தமிழ் மீது கொண்ட வன்மம் என்று சொல்வதா, நம் தொன்மை மீது கொண்ட பொறாமை என்று சொல்வதா இல்லை குரோதம் என்று சொல்வதா, உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்த கயவாளித்தனம் என்று சொல்வதா...

புரியவில்லை...

இதில் சமீபத்தில் இறந்த நாகசாமி என்ற கேரக்டர் ஒரு வகை என்றால், அனைவராலும் மிகப் பெரிய அறிஞர் என்று தலையில் தூக்கி வைத்து கொண்டாடப்பட்ட ஐராவதம் மகாதேவன் ஐ.ஏ.எஸ் அவர்கள் வேறொரு வகை.



உதாரணத்திற்கு :

"நீடியசடையோடு ஆடாமேனிக்

குன்றுரை தவசியர் "

என்று நற்றிணையில் ஒரு பாடல் வருகிறது (பாடல் எண்: 141).

இதில் வரும் **"நீடிய சடையோடு"** அதாவது "நீண்ட சடையுடன் கூடிய" என்ற வார்த்தையை வசதியாக மறைத்து விட்டு **"ஆடாமேனி"** என்ற வார்த்தையைப் பிடித்துக் கொண்டனர்.

"ஆடாமேனி" என்றால் ஆடாமல், அசையாமல் தவம் செய்தவர் என்பதுவே பொருள். ஆனால், மேற்சொன்ன நாகசாமி , ஐராவதம் போன்ற So called **"அறிஞர்கள்"**, ஆடாமேனி என்றால் **"நீராடாதவர்கள்"** அதாவது **"குளிக்காதவர்கள்"** என்று பொருள். அதை வைத்துப் பார்க்கையில் அவர்கள் கண்டிப்பாக சமணர்கள்தான் அதாவது ஜெயினர்கள்தான் என்று அறிக்கையை சமர்ப்பித்து, அதை முறைப்படி பதிவும் செய்து விட்டனர்.

சமணர்கள் **"நீண்ட சடையோடு"** இருக்க மாட்டார்களே என்று யாரும் கேள்வி கேட்கவில்லை. (கேட்கவும் விடவில்லை என்று நினைக்கிறேன்).

இதேபோல்,

"உண்ணாமையின் உயங்கிய மருங்கின்

ஆடா படிவத்து ஆன்றோர் போல

வரைசெறி சிறுநெறி நிரையுடன் செல்லும்

கானயானை கவினழி குன்றம்"


என்று அகநானூற்றில் ஒரு பாடல் வருகிறது (பாடல் எண்: 132).


அதாவது, உண்ணா நோன்பு இருந்து, ஆடாமல் அசையாமல் தவம் செய்து உடல் மெலிந்த ஆன்றோர் போல இருந்ததாம் அங்கு பசியால் நடந்து சென்ற யானைகள்.


ஆனால், நமது "அறிஞர்கள்" இதில் வரும் **"ஆடா படிவத்து"** என்பதற்கு திரும்பவும், **"நீராடாத"** ஆன்றோர்கள், அதாவது **"குளிக்காமல்"** என்று வருவதால் கண்டிப்பாக இவர்கள் **"சமணர்கள்"** தான் (ஜெயினர்கள்தான்) என்று உறுதி பட பதிவு செய்து விட்டனர். இந்தக் கொடுமையை எங்கு போய், யாரிடம் சொல்வது என்று தெரியவில்லை.

இன்னொரு முக்கியமான அவதானிப்பு. தமிழி கல்வெட்டுக்கள் இருக்கும் இடங்களில் உள்ள சுனைகளை கவனித்தீர்களானால், அவற்றில் பெரும்பாலானவை குறைந்தது நாலைந்து மக்கள்











நன்றாக முங்கி குளிக்கும் அளவிற்கு இருக்கின்றன. வெறும் குடிப்பதற்கு மட்டும் வெட்டப்பட்டது போல் தெரியவில்லை. சில இடங்களில் குடிப்பதற்கு தனியாகவும் குளிப்பதற்கு தனியாகவும் சுனைகள் உள்ளன. உதாரணத்திற்கு மதுரை யானைமலை மற்றும் குன்றக்குடி. அதன் படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.



அதுசரி... யாரிந்த சமணர்கள் (ஜெயினர்கள்), எங்கிருந்து, எப்போது வந்து நமக்கு "தமிழைக் கற்பித்தார்கள்" என்று பார்ப்போம்.

கதை மௌரிய சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்த சந்திரகுப்த மௌரியனின் காலத்திலிருந்து தொடங்குகிறது. அதாவது கி.மு.நான்காம் நூற்றாண்டின் இறுதி அல்லது கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்க காலம். சந்திரகுப்தனின் ஆன்மீக குருவின் பெயர் பத்திரபாகு. அவர் ஒரு சமணத் துறவி. சந்திரகுப்தனும் அவர் பாதையைப் பின்பற்றி சமணத் துறவியாகி தெற்கே கர்நாடகாவில் உள்ள ஷ்ரவண பெலகுலா என்னும் இடத்திற்கு வந்து "சமண (ஜெயின) மதக் கொள்கை" படி தவமிருந்து வடக்கிருந்து உயிர் நீத்தனர் என்கிறது வரலாறு. இது நடந்தது கி.மு.297 இல்.

ஆசீவகத் துறவிகளும் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.



அப்படியென்றால் தமிழி எனப்படும் தமிழ் பிராமி எங்கிருந்து வந்தது, அது எந்தக் காலத்தைச் சார்ந்தது, கர்நாடகா என்ற குறிப்பு எந்தக் கல்வெட்டிலும் உள்ளதா, சமணம் அல்லது அமணம் போன்ற சொற்கள் எந்தக் கல்வெட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டதா என்பதை நமது சான்றோர்கள் நாகசாமி, ஐராவதம் போன்றோர் என்ன சொல்கிறார்கள் என்பதை தொடரின் அடுத்த பகுதியில் பார்ப்போம்.

-வெ.பாலமுரளி

தகவல்கள்: தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்ட " தமிழ்- பிராமி கல்வெட்டுக்கள்"

பதிப்பாசிரியர் உயர்திரு ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கு நன்றிகள் கோடி

எண்களைக் கண்டறிந்தவர்கள் யார்?




திரு.கா.பாலகிருஷ்ணன்
முதல்வர் மற்றும் தாளாளர்
பாரதி பதின்ம மேனிலைப் பள்ளி
திருச்சி-21







எண்களைக் கண்டறிந்தவர்கள் யார்?




கணிதத்திற்கு அடிப்படை எண்கள்(NUMBERS) இந்த எண்களைக் கண்டறிந்தவர்கள் யார்? இக்கேள்விக்கு பதில்காண்பதற்கு நாம் 2500 ஆண்டுகளுக்கு பின்னோக்கிச் செல்லவேண்டும். கணித வரலாற்றை வரலாற்றுக் காலத்துக்கு முன், வரலாற்றுக் காலம், நவீன காலம் என்று மூன்று கட்டங்களாக பிரிக்கலாம். இதில் கிரேக்க கணித அறிஞர் தேல்ஸ்(THALES OF MILITUS - 550 B.C) அவர்களிலிருந்து கணிதத்தின் வரலாற்றுக் காலம் ஆரம்பிக்கிறது.



அவருக்குப் பின் வந்த பிதாகரஸ்(PYTHOGORUS), யூக்லிட்(EUCLID), அப்போலினியஸ்(APPOLINIUS) முதலியவர்களின் பங்களிப்பால் கணிதம் வளர்ச்சியடைந்தது. அப்போது வடிவியல் (GEOMETRY), திரிகோணமிதி (TRIGONOMETRY) முதலிய கணிதக்கூறுகள் சிறப்பிடம் பெற்றன. நாம் இன்று பயன்படுத்திக் கொண்டிருக்கும் நவீன எண்முறையினங்கள் (MODERN NUMBER SYSTEM) அன்று அவர்களிடம் இல்லையாதலால், கணிதவளர்ச்சியில் தொய்வு ஏற்ப்பட்டது. அக்காலத்தில் அலெக்சான்டிரியா கணிதத்தின் தலைநராக விளங்கியது. ஹிப்பாசியா என்ற பெண் கணித அறிஞர் கொலை செய்யப்பட்டதிலிருந்து அலெக்சான்டிரியா அதன் பொலிவை இழந்தது.



கணிதத்தை அடுத்த நிலைக்குக் கொண்டுசேர்த்த பெருமை ஐரோப்பியர்களைச் சேரும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரெனே டெஸ்கார்ட்ஸ்(RENE DES CARDES 1596-1650 AD) என்பவர் கண்டுபிடித்த ஆயதொலை முறை(COORDINATE SYSTEM) அதுவரை மெதுவாகப் பயணித்துக் கொண்டிருந்த கணிதத்தின் வளர்ச்சியை குதிரை வேகத்தில் பயணம் செய்யவைத்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் இந்த கண்டுபிடிப்பு பகுமுறை வடிவியல்(ANALYTICAL GEOMETRY) முதலிய புதிய புதிய துறைகளின் உருவாக்கத்திற்குக் காரணமானது.



குதிரை வேகத்தில் பயணம் செய்த கணிதவளர்ச்சி திடீரென ஜெட்வேகமெடுத்தது. அதற்குக் காரணமாக இருந்தவர் நியூட்டன்(SIR ISSAC NEWTON 1642-1726 AD). இவரது கண்டுபிடிப்பான நுண்கணிதம்(CALCULUS) ஒரு புரட்சியே செய்துவிட்டிருக்கிறது. இன்று அனைத்து துறைகளும் நுண்கணிதத்தையே நம்பியிருக்கிறது என்றால் அது மிகையில்லை.


இத்தகைய கண்டுபிடிப்புகள் அனைத்தையும்விட எண்களின் கண்டுபிடிப்பே உயர்வானது.

சரி இப்போது நமது கேள்விக்கு வருவோம். யார் இந்த எண்களைக் கண்டுபிடித்தது? இதைத் தனிப்பட்ட ஒருவர் கண்டுபிடித்ததாகக் கூறினால் பொருத்தமாக இருக்காது.

இதற்குப் பதிலை நீங்கள்தான் கூறப்போகிறீர்கள்!

இந்த எண்களுக்கு பெயர் என்ன?

இக்கேள்வியை இருபது வருடங்களுக்கு முன் கேட்டால் ஒரு பள்ளி மாணவனின் பதில் "அரேபிய எண்கள்" (ARAB NUMBERS) என்பதாகத்தான் இருக்கும். ஆனால் அதே கேள்வியை இப்போதுக் கேட்டால் அதற்கு பதில் "இந்திய-அரேபிய எண்கள்" (INDO - ARAB NUMBERS). அதாவது அரேபிய எண்கள் என்றால் அரேபியர்கள் கண்டுபிடித்த எண்கள் என்று பொருள் கொள்ளும் நாம், இந்திய - அரேபிய எண்கள் என்றால் இந்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பின் அது அரேபியர்களின் பயன்பாட்டில் இருந்தது என்று எளிதாகப் பொருள்கொள்ள முடிகிறது.



இப்போது இதன் வரலாற்று பின்னணியை பார்ப்போம். வரலாற்றுக் காலத்திலிருந்தே இந்தியாவில் வழக்கத்திலிருந்தன. இங்கு வணிகம் செய்ய வந்த அரேபியர்கள் இவ்வெண்களின் பயன்பாடுகள் எளிமையாக இருப்பதைக் கண்டு அவற்றை தாங்களும் பயன்படுத்த முற்பட்டனர்.

இந்தியா வந்த அல்கோவர்ஸ்மி (AL KHWARIZMI 780-850 AD) என்ற கணிதயியலாளர் தனது புத்தகமான al-Khwārizmī's *Algebra* ல் இவ்வெண்களைப்பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறார். அதன்பிறகு 200 ஆண்டுகளில் இத்த எண்கள் அரேபியாவில் பயன்பாட்டிற்கு வருகிறது. இத்தாலியிலிருந்து அரேபியா சென்ற கணிதயியலாளர் பெபனோக்கி(FIBONACCI 1170-1250 AD) இவ்வெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதை ஐரோப்பா எடுத்துச்சென்றார்.



அங்கு அவர் எழுதிய லிபர் அபெக்கி(LIBER ABACCI) எனும் புத்தகத்தில் இவ்வெண்களைக் குறிப்பிடுகிறார். அதன் பிறகு ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காலத்திற்கு(**Renaissance Period** 14th–17th centuries) பிறகு ஐரோப்பியர்கள் உலகமெல்லாம் பரவும்போது இவ்வெண்களும்

உலகெங்கும் ஒரே முறையில் பயன்படுத்தப்படும் பொது எண்களாக(UNIVERSAL NUMBERS) மாறியது.

ஐரோப்பியர்கள் இது அரேபியாவிலிருந்து வந்ததால் இவற்றை அரேபிய எண்கள் என்று எழுதிவைத்தனர். பிற்கால ஆய்வில் அரேபியர்களுக்கு இந்தியாவிலிருந்து கிடைத்தமை தெரிந்ததனால் இவற்றை இப்போது **"இந்திய அரேபிய எண்கள்"** என்று அழைக்கிறோம்.

இப்போது சொல்லுங்கள் எண்களைக் கண்டுபிடித்தது யார்?

ஆம் நாம்தான்...

இதற்கான சான்று நமக்கு அருகிலேயே உள்ளது. திருச்சியிலிருந்து துறையூர் செல்லும் சாலையில் திருச்சியிலிருந்து வது கி.மீ தொலைவில் சாலையின் இடப்புறத்தில் திருவெள்ளறை என்ற ஊர் உள்ளது. இங்கு ஸ்வஸ்திக வடிவில் கிணறு ஒன்று உள்ளது. இதைப் இப்பகுதி மக்கள் "மாமியா மருமக கேணி" என்று கூறுவார்கள். கி.பி. 8ம் நூற்றாண்டில் வெட்டப்பட்ட இந்த கிணற்றின் படிக்கட்டுகளில் அப்போது பயன்பாட்டில் இருந்த இவ்வெண்களைக் காணலாம்.

இங்கிருக்கும் எண்கள்தான் அரேபியா வழியாக ஐரோப்பா சென்று மறுபடியும் சில





மாற்றங்களுடன் நமக்கே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

8வது நூற்றாண்டுக்குப் பிறகு இங்கேயே இருந்து வளர்ச்சியடைந்த எண்கள் க,உ,ங,ச,ரு,சா,எ,அ,கூ,ய என்றும் ஐரோப்பா சென்ற என்கள் 1,2,3,4,5,6,7,8,9,10 என்றும் மாற்றம் கண்டன. பார்ப்பதற்கு வெறுபாடாக தெரிந்தாலும் இரண்டு எண்களும் ஒன்றே.

பாரதிதாசன் அவர்கள், தந்தை பெரியார் அவர்களுக்கு, இவ்வெண்களைக் கண்டுபிடித்தவர்கள் தமிழர்கள் என்றும் அவை தமிழ் எண்களையென்றும் விளக்கியதை தனது

குயில் இதழில் 1961ம் ஆண்டு கட்டுரை எழுதியுள்ளார்.

குயில் கிழமை இதழ்

ஜன.24 , 1961 பக்கம் 2 - 4

தலையங்கம்

எழுதியவர்: பாரதிதாசன்

அராபிய எண்கள் தமிழ் எண்களே

"கல்விக்கு அராபிய எண்களே ஆலோசனைக் குழு முடிவு" என்ற தலைப்பில் விடுதலை ஏடு குறிப்பிடும் ஒரு குறிப்புக் கீழ் வருமாறு.

இந்தியாவில் கல்வி சம்பந்தமாக உலகத்தில் வழங்கி வரும் அராபிய எண்களையே பயன்படுத்துவதென்று மத்திய கல்வி ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.தமிழகக் கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் கூறிய யோசனையைக் குழு ஏற்றுக் கொண்டு இம்முடிவுக்கு வந்துள்ளதாம்.இந்த எண்கள் முதலில் இந்தியாவிலேயே தோன்றியபோதிலும் இவற்றிற்கு அராபிய எண்கள் என்று பெயர் வழங்குகின்றது.

இந்த எண்கள் அதாவது 1,2,3.. முதலிய எண்கள் முதலில் இந்தியாவிலேயே தோன்றியவை என்று அமைச்சர் சி. சுப்பிரமணியம் கல்விக் குழுவில் சொல்லாடினார் போலும்! அவர், இந்த எண்கள் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இன்று வரைக்கும் இருந்துவரும் தமிழ் எண்களே என்பதை எடுத்துக் கூறவில்லை போலும்! ஆதனால்தான் அக்குழு இந்த எண்கள் இந்தியாவிலேயே தோன்றியவை என்று பொதுவாகக் குறிப்பிட்டு முடிவு செய்தது.

இந்த எண்கள் தமிழ் எண்களே என்ற உண்மையை அமைச்சர் தெரிந்து வைக்கவில்லை என்றும் எண்ண முடியவில்லை. ஏன் எனில் சில ஆண்டுகளின் முன் விடுதலையில் இந்த உண்மை பெரியாரால் விளக்கப்பட்டிருந்தது.

பெரியாரை என் வீட்டில் கரும்பலகையின் முன் வைத்து இன்றுள்ள1,2,3,..தமிழ் எண்களே என்பதை எழுதிக்காட்டி விளக்கினேன். அதை வைத்தே நேரு, இந்த எண் இந்தியாவிலிருந்து வெளிநாடு சென்றவைகளே என்று பொதுவாகக் குறிப்பிட்டதை மறுத்து **'விடுதலை'** யில் அவை தமிழ் எண்களே என்று விரித்தெழுதினார்.

அமைச்சரே தெரிந்து கொண்டிராமற் போனாலும் தாய்மொழி பற்றிய இந்த உண்மையை அவர் விடுதலையில் படித்தறிந்து கொண்டிருக்கலாம். அவை தமிழ் எண்கள் என்பதை அவர் அறிந்திருந்தும் அதைக் கூட்டத்தில் வெளியிடாததற்குக் காரணம் என்ன? என்பதுதான் இங்கு கேள்வி. இது நிற்க.

ஜன.17என்ற நாள் இட்டு இந்த எண்கள் முதலில் இந்தியாவிலேயே தோன்றியவை என்ற குறிப்பை வெளியிட்ட விடுதலை ஆசிரியர், அந்தச் செய்தியின் கீழ் அந்த எண்கள் இந்தியாவிலேயே தோன்றியவை என்று மொத்தமாகக் குறிப்பிட்டிருந்தாலும், அவை தமிழகத்தில் முதலில் தோன்றிய தமிழ்எண்களே என்ற குறிப்பையாவது எழுதியிருக்கலாம். அப்படி எழுதாதற்குக் காரணம் என்ன? இது இரண்டாவது கேள்வி.

பெரியார் நன்கறிந்துள்ளார், இவை தமிழ் எழுத்துக்களே என்பதை, நான் தெளிவாக விளக்கினேன் பெரியாருக்கு! அவரும் உணர்ந்து கொண்டதற்கு அடையாளமாக ஒரு கட்டுரையும் எழுதினார். அவரும் இப்போது ஏன் சும்மா இருந்துவிட்டார்?

இந்த கேள்விகட்கெல்லாம் சரியான விடை வேண்டுமானால் தமிழக அமைச்சரவை, தி.க. தலைவர் ஆகியோரின் இன்றைய மனநிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழரின் தாய்நாட்டை - அதாவது தமிழ்நாட்டின் மேல் தமிழர்க்கு இருக்கும் உரிமை பறிக்கப்பட வேண்டும், அதனால் தமிழ்நாட்டைத் தமிழ்நாடு என்று சொல்லக் கூடாது சென்னை

இராச்சியம் என்று சொல்லுவதையே உறுதிப்படுத்த வேண்டும் ஒன்று.

இரண்டாவது,

இந்தியைத் தமிழரின் தாய் மொழியாக்குவதற்குத் தமிழை தொலைக்க வேண்டும், தமிழில் திருமணத்திற்கு இலக்கியமே இல்லை என்று பேச வேண்டும் தமிழில் திருமணத்திற்கு இலக்கியமே இல்லை என்று பேச வேண்டும். தமிழுக்கு இலக்கியமே இல்லை என்று பேச வேண்டும் தமிழுக்கு ஒன்றுமே இல்லை என்று பேச வேண்டும். இந்தப் பேச்சுக்கு உதவியாக ஆங்கிலத்தைத் தமிழர்க்குத் தாய்மொழியாக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். ஆங்கிலம் இல்லாவிட்டால் தமிழன் பல்லாண்டுகளின் முன்பாகவே தொலைந்து போயிருப்பான் என்று வாயடி அடிக்க வேண்டும்,தமிழர்க்கு வரலாறே இல்லை என்று அஞ்சாமல் கூற வேண்டும்.

மேலும்,

நமக்குத் தலைமையும், பதவியும் கொடுத்த தமிழ் மக்களுக்குச் சிறிதுகூட நன்றி காட்ட வேண்டியதில்லை;அந்த ஊமைத் தமிழர்கள் என்கேடு கெட்டாலும் கெடட்டும்,நமக்கு மனச்சான்று வேண்டாம். உறங்கும் பிள்ளையின் ஊட்டியை அறுப்பது போல் கண்ணை மூடிக்கொண்டிருக்கும் மக்களை மண்ணிலிட்டுப் புதைத்தாவது நம் - பதவி - கூலி ஆகியவற்றை உறுதி செய்து கொண்டாற்போதும்.

இதுதான் இன்றைய அரசியல் தலைவர் மக்கள் தலைவர் மனநிலை!

இவர்கள் அராபி எண் என்பது தமிழகத்தினின்று சென்றதான தமிழ் எண்ணே என்பதை வெளியில் எடுத்துச் சொல்லுவார்களா?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ், வரிவடிவம் எப்படி இருந்தது என்பதை அரசினர் ஆராய்ச்சித் துறையின் சுவடியில் காண்க. கண்டால் இன்றைய 1 2 3 4 5 6 7 8 9 10 ஆகியவை. தமிழ் எழுத்துக்களே என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தத் தமிழ் எண்களை இங்கு வணிகத் தொடர்புடைய அரபியர் கொண்டு போயினர் அவர்களிடமிருந்து மேல் நாட்டினர் கற்றுக் கொண்டனர். ஒரு மற்றமும் செய்யாமல் அவர்கள் அப்படியே எடுத்தாண்டனர். அவர்கட்குக் கிடைத்த அன்றைய உருவமே இன்றைய உருவம். ஆனால் தமிழகத்தில் அந்த உருவம் நாளடையில் மாற்றத்திற்கு உள்ளாயிற்று! இது இயற்கைதான். இந்த அறுபதாண்டில் **'த்த'** என்ற இரண்டெழுத்தும் ஒரே எழுத்தாகவே எழுதப்படவில்லையா?

இடையின ர கரத்திற்கு மேலே இருந்த ஒரு கோடு நீக்கப்பட்டதான மாற்றம் சென்ற இரு நூற்றாண்டில் ஏற்பட்டதல்லவா?

நிற்க.

தமிழர்கள் விழிக்க! தலைவர்களின் வஞ்சகத்தை ஊன்றி நோக்குக.

- பாரதிதாசன்

தொகுப்பும் பதிப்பும்: *முனைவர் இரா.இளவரசு*

அன்றைய அரசியல் சூழலை நாம் கருத்தில் கொள்ளாமல் , அராபிய எண்கள் தழிழ் எண்களே என பாரதிதாசன் கூறியதை மட்டும் நோக்கவும்.

-பாலா





கோட்டுக்கல் குடைவரைகள்



"சிவத்தமிழ்ச் செல்வர்"
பி.திருச்சிற்றம்பலம்
M.Sc.,M.A.,DIAE.,DCT.,
திருவாவடுதுறை ஆதீனப்பேராசிரியர்,
சென்னை – 69



வரலாற்றில் கோட்டுக்கல்:

கோட்டுக்கல் என்ற பெயர் *"**கொத்திய கல்**"* அல்லது ***செதுக்கப்பட்ட பாறை*** என்ற தமிழ் வழக்கின் திரிபாகும். வயலின் நடுவே இயற்கையாய் அமைந்துள்ள பாறையைக் குடைந்தும் செதுக்கியும் உருவாக்கப்பெற்ற இக்குடைவரையின் பெயராலேயே இப்பகுதி ***'கோட்டுக்கல்'*** என்று வழங்கப்பெறுகிறது.

கோட்டுக்கல் கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் உள்ள சடையமங்கலத்திலிருந்து 7 கி.மீ. தொலைவிலும்; மாவட்டத் தலைநகர் கொல்லத்திலிருந்து 44 கி.மீ. தொலைவிலும்; மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்திலிருந்து 49 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

இப்பகுதி கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஆய் மன்னர்களின் ஆட்சிக்குரிய நிலப்பரப்பாக சங்க காலம் தொட்டு திகழ்ந்துள்ளது. இதனைப் பறைசாற்றும் விதமாக ஆய்க்குல சிற்றரசையும் ஆய் நாட்டையும் நினைவுபடுத்தும் விதமாக இன்றளவும் அருகிலுள்ள ஊருக்கு ***"ஆயூர்"*** (ஆய் +ஊர்) என்றே பெயர். பின்னாளில் ஆய் மன்னர்களை வீழ்த்தி இப்பகுதி முழுவதையும் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தவர் பாண்டிய மன்னன் *"**ஜடில பராந்தக நெடுஞ்செழியன்**"* ஆவார். இவரது பட்டப்பெயரான ***"சடையவர்மன்"*** என்னும் பெயர்கொண்டே அருகில் உள்ள நகரம் ***'சடையமங்கலம்'*** என இன்றளவும் அழைக்கப்படுகிறது.

*(தற்காலத்தே அவ்வூரின் மலையுச்சியில் **ஜடாயு பறவையின்** பெரிய சிலையினை வடித்து **ஜடாயுபரா** என்று பிரபலப்படுத்தி வருகின்றனர்.)*

இப்பகுதி ஆய் மன்னர்கள் வேணாட்டரசர்கள் சேரர்கள் பாண்டியர் சோழர் திருவிதாங்கூர் அரச மரபினர் எனப் பல்வேறு அரசுகள் அடுத்தடுத்து அரசு செலுத்திய பகுதியாகும்.

கோட்டுக்கல்லும் குடைவரைகளும் :

கோட்டுக்கல்லில் படுத்திருக்கும் யானையைப் போலக் காட்சியளிக்கும் பாறையில் சிவனுக்கான இரண்டு குடவரைகள் குடையப்பட்டுள்ளன.

இக்குடைவரைகள் இரண்டும் சீரற்ற அளவில் சிறிதும் பெரிதுமாக கிழக்கு நோக்கி அமைந்துள்ளன.

படுத்திருக்கும் யானையைப் போன்ற தோற்றத்தில்





முகப்பு மண்டபத்துடன் கூடிய முதல் குடைவரை



முகப்பு மண்டபம் இல்லாத இரண்டாம் குடைவரை


அளவில் சற்று பெரிதான குடைவரை சதுர வடிவிலான கருவறையையும் செவ்வக வடிவ முகமண்டபத்தையும் பெற்றுள்ளது. குடைவரையின் முகப்பில் நான்கு தூண்களில் இரண்டு முழுத் தூண்களாகவும் இரண்டு பாதியளவிலும் காணப்படுகின்றன. தூண்களின் மேல்புறம் மற்றும் கீழ்புறம் நான்கு பக்கங்களையுடைய சதுர வடிவிலும் இடைப்பகுதி எண்பட்டை வடிவிலும் திகழ்கின்றன. தூண்களின் மீதுள்ள போதிகைகள் உத்திரத்தை தாங்கும்படியாகக் காட்டப்பட்டுள்ளது. முக மண்டபத்தில் வடக்கு நோக்கிய நிலையில் விநாயகரின் புடைப்புச்சிற்பமும் வடதிசையில் தூணின் அருகே செதுக்கப்பட்டு பாதியில் விடப்பட்டுள்ள நிலையில் சிறிய சிவலிங்கம் ஒன்றும் உள்ளன.

அளவில் சற்று சிறியதான குடைவரை நீள்வட்டமான கருவறையைப் பெற்றுள்ளது. இக்குடைவரையில் முகமண்டபம் காணப்படவில்லை.

தாய்ப்பாறையில் ஆன சிவலிங்கங்களும் நந்திகளும்







இரண்டு குடைவரைகளிலும் வட்டவடிவிலான தாய்ப்பாறையில் ஆன சிவலிங்கள் காட்சியளிப்பதோடு முகப்பில் இடம்பெற்றுள்ள இடபமும் (நந்தி) தாய்ப்பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ளன. இது இக்குடைவரையின் சிறப்பு அம்சமாகும்.. சிறிய குடைவரையின் கருவறை வாயிலில் குரங்கு முகமும் மனித உடலுடன் கூடிய புடைப்புச்சிற்பம் ஒன்று வலக்கையில் திரிசூலம் ஏந்திய நிலையில் காணப்படுகிறது. இதனை அனுமனின் சிற்பம் என்று அடையாளப்படுத்துகின்றனர் . ஆனால் இச்சிலையில் அனுமனுக்கான வாலோ கதையோ ஏனைய அடையாளங்களோ இல்லை. இச்சிற்பத்தை ஆய்வறிஞர்கள் மறு ஆய்வு செய்யவேண்டும். பெரிய குடைவரையில் உள்ளதைப் போல் நந்தியம்பெருமான் இங்கு சிவனுக்கு நேராக இல்லாமல் இக்குடவரையில் இச்சிற்பத்தை ஒட்டியவாறே இருக்கிறார்.


இந்த இரண்டு குடைவரைகளுக்கும் இடையில் உள்ள பாறையில் செவ்வக வடிவில் செதுக்கப்பட்ட கோட்டத்தில் புடைப்புச் சிற்பமாக ஆனைமுகன் காட்சி தருகிறார். மேலும் இங்கு காணப்படும் விநாயகரின் இரண்டு சிற்பங்களும் நான்கு கரங்களோடு தும்பிக்கை வலஞ்சுழித்த நிலையில் உள்ளன. சேரநாடும் ஆய் நாடும் ஆனைகளுக்குப் பெயர் பெற்ற நாடுகளாயிற்றே ஆதலால் ஆனைமுகனின் வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

விநாயகரின் புடைப்புச் சிற்பங்கள்





அனுமன் என்னும் குரங்கு முகமுடைய சிலை



குடவரையின் காலம்:


வரலாற்று ஆய்வாளர்களின் கூற்றுப்படி இக்குடைவரை கி.பி 8ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாய் கருதப்படுகிறது. அருகிலுள்ள நகரமான சடையமங்கலம் பாண்டிய மன்னன் ஜெடில பராந்தக நெடுஞ்சடையனின் பெயரால் இன்றளவும் வழங்கப்படுவதை கருத்தில் கொண்டு பார்க்கும் போது இக்குடைவரை அம்மன்னராலேயே எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர்.

பரம வைணவனாகத் திகழ்ந்து புகழ் பெற்ற இம்மன்னனை வேள்விக்குடி, சீவரமங்கலம் செப்பேடுகளும், ஆனைமலை, திருப்பரங்குன்றம்

ஆகிய குடைவரைக் கோயிற் கல்வெட்டுக்களும் இவனது புகழை எடுத்துரைக்கின்றன. இவனது அலுவலரான மாறங்காரி என்பான் மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலையில் திருமாலுக்கெனக் குடைவரைக் கோயிலொன்றினைத் தோற்றுவித்தான். மற்றொரு அலுவலரான சாத்தன் கணபதி என்பானும் அவனது மனைவி நக்கன் கொற்றி என்பாளும் திருப்பரங்குன்றத்துக் குடைவரைக் கோயில்களைத் தோற்றுவித்தனர்.

இக்குடவரை தற்போது தொல்லியல் துறை மற்றும் திருவிதாங்கூர் தேவசம் போர்டு நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

தீப்பாய்ந்தவர்கள்



ச.பாலமுருகன்
அலுவலக மேலாளர்(பொது)
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
திருவண்ணாமலை



இப்போதெல்லாம் உடலில் சிறு சிராய்ப்பு ஏற்பட்டாலே பதறும் காலம் இது. உடன் மருத்துவரைப் பார்த்து மருந்து எடுத்து குணப்படுத்தும் காலத்திலிருந்து சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து 100 ஆண்டுகள் வரை இந்த சமூகத்தில் உயிரை துச்சமென நினைத்து தானே முன்வந்து உயிர் கொடை தரும் தற்பலிகள், தன் தலைவன் இறந்ததினால் உடன் இறந்த சேவகர்கள், கணவன் இறந்தினால் உடன் இறந்த சதி செய்யப்பட்ட பெண்கள் என வரலாற்று நெடுக பலவிதமான மனித பலிகளைப் பார்க்க முடிகிறது. தொறு பூசலில் இறந்து போகும் மனிதர்களையும் ஊர் காக்கும் தொழிலில் ஈடுபட்டு இறந்து போகும் மனிதர்களையும் போரில் வீரமரணம் அடையும் மனிதர்களையும் நாம் அறிவோம். அதே நேரம் கட்டாயத்தின் பெயரில் தன் உயிரை மாய்த்துக்கொள்கிற நிகழ்வுகள் பலவாறாக வரலாற்றில் தென்படுகின்றன.

அவ்வாறு திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் நம்மை திடுக்கிடச் செய்கின்றன.

திருவண்ணாமலையை அடுத்த சொரகுளத்தூர் ஏரியில் ஒரு கொற்றவையும் அருகில் ஒரு கல்வெட்டு உள்ளது. இந்த கல்வெட்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பிற்கால சோழர்கள் காலத்தில் வெட்டப்பட்டுள்ளது. இதில் ஸ்ரீபிருதிகங்ர் மகன் சோழகோனின் பணி வீரன் குடை அழகியான் என்பவர் அவரின் தலைவன் (குறுநிலமன்னன்- சோமாண்ட நாயனார்) இறந்து போனபிறகு தானும் உயிரோடு இருக்கமாட்டேன் உறுதி கூறுகிறார். எவ்வாறு எனில், ஒருவேளை உயிரோடு இருந்தால் தன் தாய்க்கு தானே கணவன் என்ற துர்நிலையை எய்தும் கடுஞ்சொல்லுக்கு ஆளாவேன் என்ற அளவிற்கு பழிச்சொல் வரும் என எண்ணி தற்கொலை செய்துகொண்டுள்ளார். அதற்கு ஆதாரமே இந்த கல்வெட்டு, அருகில் கொற்றவை சிலை இருப்பதால் அதன் முன்பு தன் தலையை வெட்டி தற்பலி செய்துகொண்டிருக்கலாம். பலியான விவரம் கல்வெட்டில் இல்லை என்றாலும் அதன் பொருள் எளிதாக அறியலாம்.

கடலாடியில் செய்யாற்றின் கரையில் அமைந்துள்ள கரைகண்ட ஈஸ்வரர் கோயிலுக்கு





அருகில் பழமை மாறாத ஒரு வேடிப்பன் கோயில் உள்ளது. இந்த வேடியப்பன் கோயிலில் உள்ள ஒரு நடுகல் கல்வெட்டு ஏற்கனவே பதிவானது. அதன்


அருகில் உள்ள மற்றொரு சிற்பம் அண்மையில் ஆய்வு நடுவத்தினரால் ஆவணப்படுத்தப்பட்டது. முன்புறம் தீயில் உட்கார்ந்த நிலையில் ஆணின் சிற்பமும் அதன்பின்புறம் 8 வரிக்கல்வெட்டும் உள்ளது. இதில் **அத்திமல்லனாகிய கன்னரதேவப் பிரிதியர் வேங்கை நாடுத் துஞ்சி இறந்ததை யடுத்த கடலாடியாளும் பாறை படை வள தேவன்** என்பவன் தீயில் பாய்ந்து இறந்து போன செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பலகையில் உள்ள சிற்பம் நெஞ்சம் பதைபதைக்கும் நிலையில் தீ சுவாலையின் நடுவில் ஒருவர் அமர்ந்திருப்பது போன்ற சிற்பம். தன் தலைவன் இறந்ததினால் தானும் இறந்து போனான்.



தீப்பாய்ந்தவர்களைப் போலவே உடன் துஞ்சியவர்கள் பற்றிய குறிப்பு தாமரைப்பாக்கம் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறுநில மன்னன் கூத்தாடும்தேவர் பிரிதிகங்கர் என்பவர் இறந்த போது அவருடன் உயிர் நீத்தவர்களாக ஆடும் ஆழ்வார்கள், சதுரநடைப் பெருமாள், நிறைதவம் செய்தார் ஆகிய 3 பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் உடன் பள்ளிகொண்டதாக அதாவது புதைக்கப்பட்டாக பொருள் கொள்ளலாம். ஏன் இந்த நிலை?

இந்த மூன்று கல்வெட்டுகளும் பங்கள நாட்டு பிரிதிவி கங்கர் வம்சத்தைச் சேர்ந்த குறு நில மன்னர்கள் இறந்த போது உடன் இறந்தவர்கள் பற்றியே அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதையும் இன்னும் நுட்பமாக ஆய்வு செய்யவேண்டும்.

செங்கம் வட்டம் விண்ணவனூர் கிராமத்தில் நிலத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று ஸ்ரீ தீபாஞ்சாம்ன் பாலகோத்திரார் கொல தெய்வம் – என்று எழுதப்பட்டுள்ளது. இது 17 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு அது வரை தீப்பாய்ந்த நிகழ்வுகள் நடந்துள்ளன.



இவையெல்லாவற்றையும் விட சுமார் 200 ஆண்டுகளுக்கு முந்தைய பிரிட்டிஷார் வரைபடத்தில் திருவண்ணாமலை – போளூர் சாலையில் ஒரு இடத்தில் 40 பெண்கள் தங்களைத் தாமே தீயிட்டுக் கொளுத்திக்கொண்டுள்ளனர். *(Mount of the 40 women who burnt themselves)* இவற்றிற்கான காரணங்களோ, அதன் மற்ற தகவல்களோ அறியமுடியவில்லை. ஆனால் வரைபடத்தில் இந்த இடம் மேடு என்று குறிக்கப்பட்டுள்ளது. இதன் காரணம் எந்த கதையிலோ வாய்வழியாகவோ இருக்கிறதா என்று தெரியவில்லை. தேடித்தான் பார்க்கனும்....



இம்மாவட்டத்தில் பல இடங்களில் தீப்பாய்ந்த சிற்பங்கள் உள்ளன. ஒரு தூண் போன்ற சிற்பத்தில் ஒரு பெண் உருவம் அல்லது பெண்ணுடன் குழந்தை உருவம் மேற்பகுதியில் தீ சுவாலையுடன் இருக்கும். இது போன்ற சிற்பங்கள் பரவலாக வட தமிழ்நாட்டில் காணக்கிடைக்கிறது.


இந்த கல்வெட்டுகள், சிற்பங்கள் வழியே நம் மூதாதையின் வாழ்க்கை நிலையையும் அவர்கள் பண்பாட்டையும் அறிய முடிகிறது. ஆனால் இவை ஏன் அந்த காலத்தில் கட்டாயமாக இருந்தன. ஏன் மக்கள் வாழ்வுக்கு அஞ்சியும், சமூகத்திற்கு அஞ்சியும் துச்சமென தன் உயிரை விட்டனர் என்பது வீரம் செறிந்த தமிழர் வரலாற்றில் ஒரு முரணாகவே பார்க்கவேண்டியுள்ளது. இந்தியாவில் அதிகம் தற்கொலைகள் செய்து கொள்ளும் ஒரு மாநிலமாக தமிழகம் இருப்பதற்கும் இது போன்ற வரலாற்றுச் செய்திகளுக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். இன்னும் தமிழ்ச் சமூகம் தற்பலி போன்ற நிகழ்வுகளிலிருந்து மீண்டு வரவேண்டும்.

இன்னும் பார்க்கலாம்...

ஆதாரம் – தாமரைப்பாக்கம் கல்வெட்டு, நடுகற்கள், ச.கி.

நன்றி- வசந்த்பிரபு

வீட்ல விஷேசங்க..



மூசா @ மு.ச.சதீஷ்குமார்
தலைமைச்செயலக அலுவலர்
சென்னை

திருநின்றவூர்

கல்யாண மாசம் வந்தாலே, ஏகபட்ட விஷேசங்கள் வந்துரும்.. நெருங்கின சொந்தகாரங்க, ஒரே நேரத்துல நிகழ்ச்சிய வச்சா... யார் வீட்டுக்கு போறது?..

அதுக்கும் ஓர் ஐடியா கண்டுபுடிச்சிருக்கோம்.

கணவன் ஒரு வீட்டுக்கும், மனைவி ஒரு வீட்டுக்கும் போறது...இந்த உத்திய கி.பி.ஏழாம் நூற்றாண்டுல கண்டுபிடிக்கல போல..

சிவாலயங்களுக்கு எல்லாத்துக்கும் முன்மாதிரி **காஞ்சி கைலாயநாதர் கோயில்.** இராஜசிம்ம பல்லவன் கட்டியது.

இராஜசிம்மன் இந்த கோயிலை கட்டிக்கொண்டிருந்த நேரம், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான, திருநின்றவூரில் பிறந்தவரான **பூசலார்** என்கிற சிவனடித் தொண்டருக்கு ஒரு வருத்தம்...

அவன் என்னப்பா.. ராஜா.. வரி வாங்கறான். போருக்கு போறான். கொள்ளை அடிக்கறான். கப்பம் வாங்கறான். பணம் இருக்கு...கோயில் கட்றான். நம்மகிட்ட நாலு மொழத்துண்டு கூட இல்லயே.. சரி. மனசு இருக்குல்ல? மனசை உருக்கி, கண்ணீர பாய்ச்சி பேஸ்மென்ட் போட்டு விர்சுவல் கோயில் கட்றார் மனசுக்குள்ள..

"காடவர் கோமான் கச்சிக்

கற்றளி எடுத்து முற்ற

மாடெல்லாம் சிவனுக்காகப்

பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்

நாடமா லறியா தாரைத்

தாபிக்கும் அன்னாள் முன்னாள்

ஏடலார் கொன்றை வேய்ந்தார்

இரவிடை கனவில் எய்தி.."

சேக்கிழார் இப்படி பாடுகிறார்.

"அடி முதல் உபானம் ஆதி

ஆகிய படிகள் எல்லாம்

வடிவுறு தொழில்கள் முற்ற

மனதினால் வகுத்துமான

முடிவுறு சிகரம் தானும்

முன்னிய முழத்திற் கொண்டு

நெடிது நாள் கூடக்கோயில்

திறம்பட நினைவால் செய்தார்"

இரண்டு கோயில்களும் கட்டி முடிக்கப்படுகின்றன. இருவரும் ஒரே நாளில் கும்பாபிஷேகத்தை அறிவிக்கின்றனர். சிவபெருமான் திணறிப்போறார். யார் வீட்டு விஷேசத்துக்கு போறது? இங்க போனா அவன் கோச்சுக்குவான்.. அங்க போனா இவன் கோச்சுக்குவான்... ஒரு முடிவு பண்ணி, இராஜசிம்மன் கனவுல போய், "இங்க பாரு பல்லவ ராஜா.. நீ.. பன்னீர் அபிஷேகம் பண்ணுவ. அங்க ஒருத்தன், கண்ணீர்ல அபிஷேகம் பண்ணுவேன்னு நிக்கறான். கோச்சுக்காத.. நான் நாளைக்கு வர்றேன். இன்னக்கி திண்ணனூர்க்கு போறேன்.." ன்னு கிளம்பிட்டார்.

இராஜசிம்மனுக்கு ஒரே வருத்தம். என்னடா இது பல்லவ பரம்பரைக்கு வந்த சோதனை... நாம ஸ்ரீவிஜயம் கடாரம் சீனம்னு தூதுக்குழு அனுப்பி, வணிகம் பண்ணி... கலர் கலரா அபிஷேகம் பண்ண திரை கடலோடி திரவியம் சேத்து வச்சா.. இந்த சுடுகாட்டு மண்டையோட்டான் திண்ணனூர்க்கு போறேன்னு போய்ட்டானே.. நாம கட்டின கோயிலை விடப் பெருசா? ஒரு ரவுண்டு பாத்துட்டு வந்துருவோம்னு கிளம்பினான்.

திண்ணனூர்க்கு போயி பாத்தா.. வடிவேலுவோட கிணத்த காணோம்ங்ற கணக்கா, தேடி தேடிப் பாத்தும் கோயிலைக் காணோம். அப்புறம், அப்பா.. ராசா.. அது மனசுல கட்டின

கோயிலுன்னு சொல்லப்போயி.. புஸ்ஸுன்னு ஆகிடுச்சு ராஜசிம்மனுக்கு.

ஆனால், திருநின்றவூரில்... **ஹிருதயாலேஸவரர் கோயில்** இருக்கு. இந்த கோயில் யாரால் எப்போது கட்டப்பட்டது என்று அறிய இயலவில்லை. ஒரு வேளை இராஜசிம்மனே பாவம், காசில்லாத மனுசன்னு வட்டிக்கு பணம் கொடுத்து பூசலாரையே கட்ட வச்சுருக்கலாம். அம்பாள் மரகதாம்பிகை. கருவறை லிங்கத்துக்கு பக்கத்திலேயே பூசலாரின் செப்பு விக்கிரகம் வைக்கப்படுள்ளது.

இக்கோயிலுக்கு அருகிலேயே, திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற பக்தவச்சலர் கோயில் உள்ளது. தமிழில் பாராவிப் பெருமாள் என்று அழைக்கப்படுகிறார். அம்பாள் என்னைப் பெற்ற தாயார். வடமொழியில், ஸ்ரீமத்ஸவித்ரி நாயகி. பூவுலகிற்கு வந்த லட்சுமி, நீண்ட காலமாக இந்த ஊரில் தங்கிவிட்டமையால், இந்த ஊர் திரு நின்றவூர் என்றழைக்கப்படுகிறது.

திருமங்கையாழ்வார் கண்ணமங்கை பாசுரத்தில், **"நின்றவூர் நின்ற நித்திலத்தொளை.."** எனப் பாடுகிறார். பெருமாள் இங்கு நின்ற கோலத்தில் காணப்படுகிறார். அதனாலும், **திரு நின்றவூர்** என பெயர்க்காரணம் வந்திருக்கலாம்.

இவ்வூரில் வசித்த **காளத்திவாணர்** என்கிற புலவர்,

"நீளத் திரிந்து உழல்கின்றாய்

நீங்கா நிழல்போல நாளைக்கு இருப்பாயோ?

நல்குரவே - காளத்தி நின்றைக்கே சென்றக்கால்

நீ எங்கே? நான் எங்கே? இன்றைக்கே சற்று இரு"

என பாடியுள்ளார். இந்த பாடலின் தலைவன் சிவனாக இருக்கவே வாய்ப்புகள் அதிகம். இதன் மூலமும் ஊர் பெயர் அமைந்திருக்கலாம்.

அடுத்து, **பக்தவச்சலார் கோயிலில்** ஒரு கல்வெட்டு கிடைக்குதுங்க..சோழர் வரலாற தூக்கி நிறுத்தின கல்வெட்டு. இந்தியா ஈஸ் எ லார்ஜெர்ஸ்ட டெமாக்ரட்டிக் கன்ட்ரினு மார்தட்டிக்க வைக்கிற கல்வெட்டு.

குடவோலை முறைல ஊர்த் தலைவரை, வாரிய உறுப்பினர்கள தேர்ந்தெடுக்கிற கல்வெட்டு... ஒத்தாருக்கு வேண்டிய தகுதிகள், ஐந்து வருடம் பதவில இருந்தா அவங்களுக்கு அடுத்து பதவி கிடையாது, ஒரே குடும்பத்துல அடுத்தடுத்த வருசத்துல பதவில இருக்க இருக்க முடியாது. அப்பா மகன் சித்தப்பா னு எத்தன வருசத்து இடைவெளில பதவிக்கு வர முடியும்.. இப்படி ஏகப்பட்ட நிபந்தனைகளுடன் கூடிய மக்களாட்சி சாசனம்.

இப்படி நீண்ட நெடும் வரலாறைக் கொண்ட திருநின்றவூர், மாநகரமயமாக்கலில் தன்னை அஞ்ஞாத வாசத்திற்கு உட்படுத்திக்கொண்டிருக்கிறது.

பத்தோடு பதினொன்றென, ஓர் இரயில் நிலையமாய் தனக்கான பக்தர்களை எதிர்நோக்கியபடி காத்துக்கொண்டிருக்கின்றன அதன் நடைமேடைகள்.

-மூசா

பெருநற்கிள்ளிச் சோழ பெரும்பள்ளி...!





நா. நாராயண மூர்த்தி,
உதவிப் பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
கீரனூர்,
புதுக்கோட்டை மாவட்டம்.




புதுக்கோட்டை மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்நிலையான **கவிநாடு கண்மாய்**, புதுக்கோட்டை நகரத்தின் மேற்கு எல்லையில் அமைந்துள்ளது. 1200 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இந்த கண்மாயின் பெரியமடை குமிழியை முற்கால பாண்டிய அரசனான **மாறன் சடையனின் 7 வது ஆட்சி ஆண்டில் (அதாவது கி.பி 772 ல்) வல்லநாட்டு கவிர்பால் மூதாண்டி பெருந்திணை வெண்கன் என்பவர் நிறுவி இருக்கிறார். (*பு.வ.க - 226)**

புதுக்கோட்டை மாவட்டத்தின் பழைமையான குடைவரை கோவில்களில் ஒன்றான **திருக்கோகர்ண மகாதேவர் கோவில் (பிரகதாம்பாள் என்னும் அரைக்காசு அம்மன் கோவில்) இந்த கண்மாயின் வடகிழக்கில் அமைந்துள்ளது. இக்கோயில் கல்வெட்டுகள் வாயிலாக கி.பி 8 ம் நூற்றாண்டு முதலே, இப்பகுதியானது வல்லநாட்டு கவிர்பால் எனவும் தென்கவிர்நாடு எனவும் கடந்த காலங்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.**

இந்த திருக்கோகர்ணம் குடைவரைக் கோவில் குன்றுக்கும், திருச்சிராப்பள்ளி சாலைக்கும் மேற்கே அமைந்துள்ள மற்றொரு **குன்றானது சடையாம்பாறை அல்லது சடையார்மலை** என்று அழைக்கப்படுகிறது. இந்த குன்றின் வடபுற சரிவில் குன்னவயல் என்னும் சிறிய கிராமம் உள்ளது. தமிழ்நாட்டில் கல்குவாரிகளுக்காக மிக மோசமாக சுரண்டப்பட்ட பல்வேறு சிறு குன்றுகளில் இந்த குன்னவயல் சடையார்மலையும் ஒன்று.





சடையார்மலையின் உச்சியில் வெட்டவெளியில் முனீஸ்வரர் கோவில் ஒன்று அமைந்துள்ளது. அங்குள்ள மூனீஸ்வரர் உள்ளூர் மக்களால் **சடையா முனி** என்று அழைக்கப்படுகிறார். **தலைக்கு மேல் முக்குடையும், அதன் கீழ் ஐந்து தலை நாகத்துடன் யோக நிலையில் அமர்ந்திருக்கும் அவர் சமண சமயத்தின் 23 ம் தீர்த்தங்கரரான பார்சவநாதராக இருக்கலாம்.**

இந்த தீர்த்தங்கரர் சிலைக்கு தென்புறம் பாறை சரிவில் *27* **வரிகளில் கல்வெட்டு ஒன்று** ***(*P.S.I-530)*** **காணப்படுகிறது. ஸ்வஸ்தி ஸ்ரீ கோனரிமைகொண்டான்** என தொடங்கும் இந்த கல்வெட்டில், தென்கவிர் நாட்டு கல்லாற்றுப்பள்ளியின் **பெருநற்கிளிச் சோழ பெரும்பள்ளி ஆழ்வாருக்கும்**, சடையார்மலை மேல் உள்ள தென்கவிர்நாட்டு பெரும்பள்ளி ஆழ்வாருக்கும் தினசரி வழிபாட்டு பணிகளுக்காக பள்ளிசந்தமாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு பிற்கால பாண்டிய அரசனான சுந்தரபாண்டியனின் 24ம் ஆட்சியாண்டில் இருந்து வரிகள் நீக்கபட்டதற்கான செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.



கி.பி 13 ம் நுற்றாண்டினை சேர்ந்ததாக கருதப்படும் இந்த கல்வெட்டு கூறிப்பிடும் இரண்டு சமண பள்ளிகளில், தென்கவிர்நாட்டு பெரும்பள்ளி என்பது சடையார்மலை கோவிலை குறிக்கிறது. எனில் கல்வெட்டு குறிப்பிடும் மற்றொரு சமணப் பள்ளி அதுவும் சங்ககால சோழ அரசனின் பெயரில் அமைந்த பெருநற்கிளிச் சோழபெரும்பள்ளி, இந்த தென்கவிர் நாட்டில் எங்கு உள்ளது என்கிற கேள்வி எழுந்தது.

மேற்கண்ட கேள்விக்கு பதிலாக கடந்த 2013ம் ஆண்டு அக்டோபர் மாதம் கவிநாடு கண்மாயில் நடுமடைக்கு அருகே, கைகள் மற்றும் தலை உடைந்த நிலையில் 3.5 அடி உயர தீர்த்தங்கரர் சிலை ஒன்றையும், சிதிலமடைந்த கோவிலின் பாகங்களையும் புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வு

530. ஆலங்குடி தாலுகா, திருக்கோகர்ணம், சடையபாறையில் ஓர் ஜைனவிக்கிரகத்தின் பக்கத்திலுள்ள சாஸனம்,—

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] கோனேரின்மெகொண்டான் தென்கவிர்நாட்டா-
2 ர்க்கு தங்கள் நாட்டுக்கல்லாற்றுப்பள்ளிப்பெருநற்கிளிச்சோ-
3 ழப்பெரும்பள்ளியாழ்வா(ா)ர்க்கு திருப்படிமாற்றுள்ளிட்டு வெண்-
4 டும் நிமந்தங்களுக்கு இவ்வூர்ப்பள்ளி உடையார்கள் காணியான .
5 ணி ஒ[2] [ஞ்சு] [|[1]] [இக்]கிலம் முக்காலும் இவாழ்வார்க்கு சுந்தர-
பாண்டியதே-
6 (வ)ர்க்கு யா]ண்டு உ [வ*]து முதல் கடமை அந்தராயம் விநியோ-
கம் தருவ-
7 தான அச்சு காரிய ஆராட்சி வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி சந்து[விக்ரு ம]பெ-
8 று மற்றும் எப்பேற்பட்ட[வு]ம் இடப்பெ . ற[3]வெனுப்பெற்று ஆழ்
. . . . .
9 ழ்வார் பா . . . கு சோ[4] . . யில்[1] . . .[5] சந்தம் இறை-
யிலியாப் இவ[ர்ழ்]-
10 வார்க்கு இறுப்பதாகச்சந்திராதித்தவற் குடுத்தோம் இவ்வூட்டுச்சடை-
11 யார்மலைமேல் தென்கவிர்நாட்டு[ப்]பெரும்பள்ளி ஆழ்வார்க்கு இவூர் பா-
12 . . . . . . [க்கு] காணியான பி . . . .
13 ன வயலும் சிறுநாவற்ப்பள்ளமும் . . . ன்னகுடிக்காடும் [இ]க்[க]ல்லா-

1. Rest defaced.
2. ஒ- is an abbreviation for நிலம்.
3. Read பெற.
4. Read சொன்னமையில்.
5. Restore பள்ளி.
6. ஃ stands below the line.

96

14 க வயலும் ஆ[சு கு]ளம் ஆறுக்கும் கிழ்பாற்கெல்லை தெவதானம் புன்செய்-
15 க்கு[ம்] பெரிய[கு]டியிலார் புன்செய்க்கு மேற்கும் [*] தென்பாற்கெல்லை
கண்-
16 ண க . . குளத்துக்கும் ச . . . குளத்துக்கு வடக்கும் [
மெல்பாற்கெல்லை சடையார் புன்-
17 செய்க்கு[ம்] . . காற்றன் புன்செய்[க்]கு கிழக்கும் [|*] வடபாற்-
கெல்லை [ப]ரை-
18 ப்பற்றுக்கும் தெ[வதானப்பு]ன்செய்க்கு தெற்கு . . . . சந்தி
பெருநா-
19 ன்கெ[ல்] . [2]க்கு[ள்]பட்ட புன்செய்களும் [தி]ர்நிலத்துக்[கும்] . டமை[3]
அந்தராய-
20 ம் விநி[யோகம்] தருவதான அச்சு காரிய ஆராட்சி வெட்டிப்பாட்டம் பஞ்சு-
[பீலி வ]-
21 [க்தளிக்கூட]ப்பெற மற்றும் எப்பெற்பட்டவையும் இவாழ்வார்க்கு திருப்படி-
மாற்று-
22 ள்ளிட்டு வெண்டுமிர[ங்*]தங்களுக்கு [பள்ளிச்சந்தம்] இறையிலியா[ய்*]
இவாழ்வார்க்கு [ச]-
23 [ந்]திராதி[த்தவற்] குடுத்தோம் [||*] இப்படிக்கு இவை சுந்தரபாண்டிய
கன் . . . . .
24 . . . . வர்கா . . [இப்படிக்கு] இவை வபாரதராயன்
எழுத்து [||*] இப்-
25 [படிக்கு இவை] வில்லவராய[ன்] . . . . ஞ்-
செய்தரு .
26 . . முவெ[ங்] . . . . ங்குடையான் [ஆச்ச]தே-
27 வன் [க்]கு வான[வன]முடையான் எழு[த்து] [||*]

கழகத்தினர் மரபுநடையின் போது கண்டுபிடித்தனர். முதலில் புத்தர் என கருதப்பட்ட இந்த சிலையானது பின்னர் ஆய்வாளர்களால் சமண தீர்த்தங்கரர் சிலை என உறுதி செய்யப்பட்டு, உடைந்த தலைப்பகுதி புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் ஒப்படைக்கப்பட்டது.



*கவிநாட்டு கண்மாயில் வடபுறம் பெரிய கலிங்கு மடை ஒன்றும், தென்புறம் இரண்டு மறுகால் கலிங்கு மடைகளும் அமைந்துள்ளன. இந்த கலிங்கு மடைகள் கட்டுமானத்தில், பிற்காலத்தில் சிதிலமடைந்த கோவில் பாகங்களும் பயன்படுத்த பட்டிருக்க வேண்டும். ஏனெனில் தென்புறம் முதல் கலிங்குமடையின் வெளிப்புற சுவற்றில் வைத்து கட்டப்பட்டுள்ள கல்பலகை ஒன்றில் மேற்கண்ட சமணப் பள்ளியை குறிக்கும் கல்வெட்டு ஒன்று நான்கு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. (*ஆவ - 15,*



ப - 84)

கி.பி 13 ம் நூற்றாண்டை சேர்ந்ததாக கருதப்படும் இந்த கல்வெட்டில்

"கவிநாட்டுப் பெருநற்கிளிச்
சோழபெரும்பள்ளியான

அரசகண்ட ராமப்

பெரும்பள்ளி இத்தன்மம்"

என எழுதப்பட்டுள்ளது. மேலும் கல்வெட்டின் அடியில் மங்கல சின்னங்களான இருபுறம் குத்துவிளக்குகளுடன் கூடிய பூரண கும்பம் பொறிக்கப்பட்டுள்ளது.



இந்த கல்வெட்டுப்படி பெருநற்கிளிச் சோழ பெரும்பள்ளி பிற்கால பாண்டியர்கள் காலத்தில் அரசகண்ட ராமப் பெரும்பள்ளி என பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கலாம். அரசகண்ட ராமன் என்பது பிற்கால பாண்டிய அரசனான சடையவர்மன் சுந்தரபாண்டியனின் பட்டங்களில் ஒன்றாகும்.





சமண பள்ளிக்கு மட்டுமின்றி, இந்த தென்கவிர்நாட்டு நாட்டார்களும் பெருநற்கிள்ளிச் சோழனின் பெயரை கொண்டு இருந்துள்ளார்கள். திருகோகர்ணம் குடைவரைக் கோவிலில் பொறிக்கப்பட்டுள்ள **விசயநகரப் பேரரசு காலத்திய கல்வெட்டுக்கள் இரண்டில்** ***(*P.S.I - 682, 691)*** **பெருநற்கிள்ளிச் சோழ வேளான்** என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது


மேற்கண்ட கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெருநற்கிளிச் சோழன் யாரென்று தேடுகையில், தமிழ் சங்க இலக்கியங்கள் நான்கு பெருநற்கிள்ளி சோழர்களை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றன. அவர்கள்

1. **இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி**
2. **போர்வைக் கோப் பெருநற்கிள்ளி**
3. **வேல்பல் தடகைப் பெருநற்கிள்ளி**
4. **முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி**

இந்த கல்வெட்டுகள் குறிப்பிடும் பெருநற்கிள்ளி மேற்கண்ட சங்ககால சோழ அரசர்களில் ஒருவராக இருக்க வாய்ப்பு உள்ளதா? இல்லை விசயலாயன் தொடங்கி பின்வந்த சோழர்கள் எவரும் இந்த பட்டத்தை பெற்றிருந்தனரா? என குறிப்புகளை தேடிக்கொண்டிருந்த வேளையில் மேலும் ஒரு சுவாரஸ்யமான தகவல் முகநூல் வாயிலாக கிடைக்க பெற்றது.

திரு.ராஜகோபால் ஐயா அவர்கள் கடந்த மார்ச் - 30 அன்று தனது முகநூல் பக்கத்தில் மடை கல்வெட்டு ஒன்று பற்றிய செய்தியை பகிர்ந்திருந்தார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகா தேனேரிப் பட்டி கிராம குளத்து மடைத்தூணில் பொறிக்கப்பட்டுள்ள அந்த





கல்வெட்டு, மீசெங்கிளிநாட்டு பனைங்குடியை சேர்ந்த வரகுண துருட்டி மகனான துருட்டி என்பவர் இந்த குமிழி மடையை அமைத்த செய்தியை தெரிவிக்கிறது.

எழுத்தமைதியை கொண்டு கி.பி 9ம் நூற்றாண்டை சேர்ந்ததாக கருதப்படும் இந்த கல்வெட்டானது பெருநற்கிளிச் சோழனின் 6வது ஆட்சியாண்டில் பெறிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கல்வெட்டு கூறுகிற பெருநற்கிளி சோழன் முற்கால சோழ அரசரான முதலாம் ஆதித்தனாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

எனில் தென்கவிர்நாட்டின் பெருநற்கிளிச் சோழன் முதலாம் ஆதித்தனாக இருக்க வாய்ப்புள்ளதா? இல்லை அவர் சங்ககால சோழ அரசர்களில் ஒருவரா? இல்லை முத்தரையர்கள் போல் ஏதும் உள்ளூர் அரசரா? என்பது குறித்து நண்பர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

கருத்துக்களை எதிர்நோக்கி.....!!

அன்புடன்,

நா. நாராயண மூர்த்தி.

பு.வ.க - புதுக்கோட்டை வட்டார கல்வெட்டுகள், திரு. கரு. ராசேந்திரன் – 2017

P.S.I - Inscriptions (texts) of the Pudukkottai State.
ஆவ - ஆவணம் இதழ் - 15, 2004.

நன்றிகள்:
திரு. ராஜகோபால் ஐயா




"அசுணம் என்னும் சங்க காலத்தில் வாழ்ந்த அதிசய விலங்கு"



நெடுங்கேணி சானுஜன்

BA(Hons) in History (spl), MAடி

இலங்கை




அசுணம் என்பது சங்க இலக்கியங்களில் அரிதாக குறிக்கப்படும் ஒரு இசையறி விலங்காகும். இது கற்பனை விலங்காகக் கூட இருக்கலாம். அசுணம் என்பது பறவையா? அல்லது விலங்கா? என்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஒரு குறிப்பிட்ட டெசிபல் அளவு ஒலிக்கு மேல் ஒலி அளவு இருந்தால் அது இரைச்சலாக மாறி விடும். ஒலி மாசை உண்டு பண்ணிவிடும்.

அசுணம் இனிய இசையை ரசிக்கும். அதே நேரத்தில் கொடிய இசையைக் கேட்க நேரிட்டால் உடனே உயிரை விட்டு விடும்.

சங்கத் தமிழ் இலக்கியத்தில் ஒரு அதிசய விடயம் இருக்கிறது. அசுணம் என்னும் ஒரு அதிசய மிருகம் பற்றிய தகவலே அது. கற்பனை ஓவியங்களில் மட்டுமே காணக்கிடைக்கும் அழிந்து போன விலங்குகள் எவ்வளவோ உள்ளன. தொல்விலங்கியல் *(Paleontology or Paleo zoology)* என்னும் துறை இது போன்ற விலங்குகளின் எலும்புக்கூடுகள், படிம அச்சுக்கள் *(Fossils)* ஆகியவற்றை சேகரித்து வைத்துள்ளன. ஆனால் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அசுணம் பற்றிய எந்தவொரு தடயமும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

இதனை பற்றி சங்க இலக்கியங்களில் **ஈழத்துப் புலவர் பூதந்தேவனாரும்** தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார். இதோ அந்த அதிசய அசுணம் பற்றி சங்க இலக்கியங்கள் கூறும் விபரங்கள்:



பூதந்தேவனார் எழுதிய பாடல்:

"இரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுள்மலிபு இழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப, யாழ்செத்து,
இருங்கல் விடர் அலை அசுணம் ஓர்க்கும்
காம்புஅமல் இறும்பில் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிரல் உளியம் கெண்டும்
வடுஆழ் புற்றின வழக்குஅரு நெறியே?"

யார் பூதந்தேவனார் ? ? ? !

மேலே உள்ள பாடலானது அகநானூறு களிற்றியானை நிரை -88 ஆகும். இதை எழுதியவர் பூதந்தேவனார். இவரைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது என்கிறீர்களா? சங்க இலக்கியத்தில் ஈழக் கவிஞர்களின் பாடல்கள் இடம்பெற்றிருக்கிறது என்றால் அது இவருடைய பாடல்கள் மட்டும்தான் என்பது சிறப்பு.

மதுரைக் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவரான பூதந்தேவனார் ஈழ நாட்டிலிருந்து பாண்டியநாடு சென்று மதுரைச் சங்கத்தில் புலவராய் நிலவினார். இவர் தனது தந்தை பூதனோடு மதுரை சென்று கற்று புலவரானார் என்று கூறப்படுகின்றது. ஈழத்து பூதந்தேவனார் என்று இவரின் பெயர் நற்றிணையிலும், குறுந்தொகையிலும் செய்யுள் முகப்பில் வரையப்பட்டுள்ளது. சங்க நூல்களில் இவர் எழுதிய ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவரது பாடல்கள் அகநானூறு 88, 231, 307, குறுந்தொகை 189, 343, 360, நற்றிணை 366 ஆகியனவாகும்.

இப்பொழுது அவரின் பாடலின் பொருளை பார்ப்போம். "**புலியை கொல்லும் பெரிய கையுடைய யானையின் கண்களில் இருந்து வடியும் மத நீரை வண்டுகளில் கூட்டம் மொய்க்கும். அதன் ரீங்காரத்தை யாழின் ஒலிதான் என்று எண்ணி பெரிய குகைகளில் வாழும் அசுணப் பறவைகள் உற்றுக் கேட்கும். அத்தகைய காட்டில் பாம்புகள் இறந்து போகும் அளவுக்கு கரடிகள் புற்றுகளைத் தோண்டும். இப்படிப்பட்ட கடினமான பாதை வழியேதான் என் காதலன் சென்றானோ?**" என்று காதலனின் வரவை எண்ணி வாடுகிறாள் காதலி.

அசுணம் என்றால் என்ன ? ? ? ?

அகநானூறு பாடலில் வரும் அசுணம் எனும் விலங்கை அல்லது பறவையைச் சங்ககாலப் பாடல்களின் பல இடங்கிங்களில் "**அசுணமா**" என்றே அறியப்படுகின்து. இசையை அறியக்கூடிய அல்லது கேட்ககூடிய ஒரு உயிரினமாம் இந்த அசுணமா. இந்த விலங்கினம் அடர்ந்த காடுகளில் வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகின்றது. இதன் சிறப்பம்சம், இசையை உணர வல்லது. இசைக்கு மயங்கும் தன்மை கொண்டது. ஆனால் மிகவும் பலமானது. எனவே இதை எதிர்த்து நின்று வேட்டையாடுவது என்பது கடினம்.

இதை உணர்ந்த வேடுவர்கள் இந்த விலங்கை வேட்டையாட, மனதை மயக்கும் அழகிய இசையை, இசைகருவிகள் கொண்டு மீட்டுவர். அந்த இசைக்கு மயங்கி, அசுணமா இசை கேட்கும் திசை நோக்கி நகர்ந்து வரும். இசை மயக்கத்தில் அருகில் நெருங்கி வந்ததும், காதைக் கிழிக்கும் அளவுக்கு சத்தமான ஒலியை பறை போன்ற இசைக்கருவிகளால் ஏற்படுத்துவர். அந்த சத்தத்தைக் கேட்டுத் தாங்க முடியாது காதுகளில் வலிவந்து மிரண்டுவிடும் சூழ்நிலையில் ஆயுதங்களால் தாக்கி கொன்றுவிடுவர். அழகான இசை மீட்டி ஏமாற்றி வரவழைத்து, மிக அதிகமான சத்தம் உண்டாக்கி துடிக்கவிட்டு அசந்த நேரம் பார்த்து ஆயுதங்களால் தாக்கி வஞ்சகமாகக் கொன்றுவிடுவர் என்று சொல்கிறார்கள்.

இலக்கியங்களில் அசுணம் இடம்பெற்ற பாடல் வரிகள்

1.நற்றிணைப் பாடல் 304 – பாடியவர் மாறோக்கத்து நப்பசலையார்

"மணிமிடை பொன்னின் மாமை சாய, என்
அணிநலம் சிதைக்குமார் பசலை; அதனால்
அசுணம் கொல்பவர் கைபோல், நன்றும்"

இதன் பொருள் – குளிர்ந்த மணம் கமழும் மாலை அணிந்த என் காதலனின் மார்பு அசுணம் என்னும் விலங்கைக் கொல்பவர் கை போன்றது.

அதாவது இன்பம் தந்து பின்னர் துன்பத்தைக் கொடுக்கும் என அசுணத்தின் இயல்புக்கு உவமிக்கிறார்.

2. நான்மணிக்கடிகை பிற்கால பதினென் கீழ்க்கணக்கு இலக்கியத்தில்

"பறைபட வாழா அசுணமா..."

–இதன் பொருள் பறையின் ஒலி செவியில் விழுந்தால் 'அசுணமா' க்கள் உயிர் வாழாது.

3.மாதர் வண்டின் நயவரும் தீங்குரல்

மணம்நாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும் ....

-நற். 244

4. கடாம் இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப யாழ்செத்து

இருங்கல் விடரளை அசுணம் ஓர்க்கும் ...

-அகம். 88

5.இன் அளி கேட்ட அசுணமா அன்னளாய் மகிழ்வு..

- சிந்தா. 1402

சரி இந்த உயிரினம் உண்மையில் இருந்ததா அல்லது கற்பனையா என்பது குறித்த விரிவான விளக்கங்கள் எங்கும் காணோம். ஆனாலும் வரலாற்றில் கற்பனை உயிரினங்கள் பல இருக்கின்றன. உதாரணத்திற்கு பீனிக்ஸ் பறவை, சீனாவின் ட்ரகன், கொம்புள்ள குதிரை, ஐந்து தலை நாய், இருதலைப்புள் (கண்டபேருண்டப் பறவை), கோழிப்பாம்பு, இசுபிங்சு, கடற்கன்னி, கிறிப்பன், யாளி, டைனோசர், ஐந்து தலை நாகம் என்று இன்னும் பல..

இந்த வரிசையில் வரும் அசுணமாவின் விசேடம் என்னவென்றால் அது எமது தமிழ் இலக்கியத்தோடு சேர்ந்திருப்பதுதான்.

மாசுணம் தான் அசுணமா ? ?

சங்க இலக்கியத்தில் மலைப்பாம்பை **'மாசுணம்'** என்று சங்கப்புலவர்கள் பெயரிடுகின்றனர். அசுணமா தொடர்பான வடிவங்களும், செய்திகளும் 'மாசுணம்' என்னும் மலைப்பாம்பைக் குறிப்பதாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மலைப்பாம்பின் இயல்பு நீளமாக இருத்தல், வளைந்து செல்லுதல், உடலில் அழகிய வடிவமிருத்தல், பெரிய வடிவில் இருத்தல் ஆகியனவாகும். அசுணமாவை வளைந்து செல்லும், நீளமான அழகிய தேமலை உடைய பெரிய உயிரினமாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந்த மாசுணமானது மிகவும் பெரிய பாம்புகளைக் குறிக்கின்றது. நாம் இப்போது வியக்கும் அனகொண்டா பாம்புகளை விடவும் பெரிய மலைப்பாம்புகளை மாசுணம் என்று அழைக்கின்றார்.

அசுணம், மாசுணம் எனவரும் இரு சொற்களும் சொல், பொருள் என இரு நிலைகளிலும் ஒன்றென்பது இக்கருத்துக்களால் புலனாகிறது. பாம்புகளுக்கு கேட்கும் திறன் இல்லை என்கின்றது விஞ்ஞானம். ஆனால் உணரும் திறன் இருக்கின்றதாம். பாம்பாட்டி ஊதும் மகுடிக்கு ஆடுவதைவிட பாம்பாட்டி காலை தட்டித் தட்டி எழும்பும் அதிர்வுக்கு ஆடுவதுதான் பாம்பாட்டம் என்றும் சொல்லப்படுகின்றது. அந்தவகையில் பார்த்தாலும் ஒலியை இந்த உயிரினம் உணரலாம் என்றும் எடுத்துக்கொள்ள முடியும்.

ஆக இது அசுணமா? மாசுணமா? விலங்கினமா? பறவையினமா? பாம்பினமா? இப்படி ஒன்று இருந்ததா? அல்லது கற்பனையா என்றெல்லாம் ஒரு முடிவுக்கு இந்தக் கட்டுரையினால் வந்துவிட முடியாது. ஆனால் இப்படியொரு உயிரனத்தைப் பற்றிய குறிப்புகள் தமிழ் சங்க இலக்கியங்களில் உள்ளன. அதனை ஈழத்து கவிஞர்களும்

உரைத்திருக்கிறார்கள் என்பதுதான் இதன் சிறப்பேயாகும்.

-நெடுங்கேணி சானுஜன்

#References

Balasubramanian, K, V., (2004) Nattrinai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Balasundaram, S., (2012) Tholkappiyam Sollathikaram, Periyar University, Salem, India.

Kadhiraiver Pillai, N., (1981) Tamil Mozhi Agarathi, Asian Educational Services, Delhi, India.

Madhaiyan, P., (2007) Sanga Ilakkiyac Sollataivu, Tamil University, Thanjavur, India.

Narayanaswamy, (1967) Natrinai Nanuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Natchinarkkiniyar, (1943) Kalithogai Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Singaravelu Mudaliyar, A., (1981) Abithana Sinthamani, Asian Educational Services, Delhi, India.

Thomas Lehmann And Thomas Malten, (1993) A Word Index for Cankam Literature, Institute of Asian Studies, Chemmancherry, Chennai, India.

Venkatasamy Nattar, N, M., Venkatachalam Pillai, R., (1961) Agananooru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Viswanathan, A., (2004) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.



வே.பார்த்திபன்
ஆற்றுப்படை
திருச்சிராப்பள்ளி



மீம்ஸ் வடிவில் இலக்கியம்









இந்திர கோபப்பூச்சி:



ஆற்றுப்படை நூல்களான திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை **'கோபம்'** என்று இப்பூச்சிகளை பற்றி குறிப்பிடுகின்றன. இந்திரனின் பூப்போன்ற ஆடை நிறம் ஊட்டப்படாமல் கோபப் புழுக்களைப் போன்று இயல்பான சிவப்பில் இருந்தது,

"கோபத் தன்ன தோயாப் பூந்துகில்"

என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

"கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்"

என சிறுபாணாற்றுப் படை கூறுகிறது.

அடை மழைக்காலம் வருவதை உணர்த்தும் அறிகுறிகளாகவே இப்பூச்சிகளை சங்ககால மக்கள் கண்டிருக்கிறார்கள்.

கம்பராமாயணம், கொவ்வைப் பழம் போன்ற பெண்களின் இதழ்களைத் தங்கள் உணவான இந்திரக்கோபங்களோ என்று மயில்கள் கருதின என பெண்களின் சிவந்த இதழ்களை

"கொவ்வை நோக்கிய வாய்களை
இந்திரக்கோபம்
கவ்வி நோக்கின காட்டுஇன மயில்கள்"

என கம்பர் கவிநயமாய் பாடுகிறார்.


இப்பூச்சிக்கு மூதாப்பூச்சி என்ற ஒரு சொல்வழக்கும் அன்று இருந்துள்ளது.

தலைவனும் தலைவியும் களவு மணம் புரிவதற்காக வீட்டை விட்டு வெளியேறி காட்டு வழி சென்று கொண்டிருக்கின்றனர். கார்காலம் தொடங்கி முதல் மழையும் பெய்கின்றது. குளிர்ந்த மழை மேகங்கள் சூழ்ந்த அழகு மிக்க காடு. அங்கு அகன்ற இடமெல்லாம் காணப்படும், விரைந்து ஓடும் சிவந்த மூதாய்ப்பூச்சிகளைப் பார்த்தும், பிடித்தும் நீ சிறிது நேரம் விளையாடுவாய் என்று களைப்புற்ற அப்பெண்ணிடம் அந்த ஆண்மகன் கூறுகின்றான்,

"தலைநாட் கெதிரிய தண்பெயல் எழிலி
அணிமிகு கானத்து அகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டும் கொண்டும்
நீ விளை யாடுக சிறிதே"

என இந்நிகழ்ச்சியை நற்றிணை கூறுகின்றது.

முதற் இந்திரவிழா பற்றிய குறிப்பு:



சங்க காலத்தில் ***மருத நில மக்கள் இந்திரனுக்கு ஆண்டு தோறும் விழா எடுத்து போற்றினர். அதனை இந்திரவிழா என்று அழைத்தனர்.***

ஐங்குறுநூறில் மருத த் திணையைப் பாடும் ஓரம்போகியார், சங்க காலத்தில் இந்திரவிழா தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட செய்தியைப் பதிவுசெய்கிறார். தலைவி கூற்றாக இடம்பெறும் அப்பாடல் இதோ!

இந்திர விழவில் பூவின் அன்ன

....

இவ்வூர் மங்கையர்த் தொகுத்து இனி

எவ்வூர் நின்றன்று மகிழ்ந நின் தேரே?

அதாவது, இந்திரவிழா நடத்துவதற்கு மங்கையரைத் தொகுத்தனை, நின் தேர் இனி எவ்வூரில் நிற்கும்? என்று வினவுகிறாள் தலைவி,

சங்க கால மக்களின் விழாவாக இந்திர விழா எடுக்கப்பட்டது என்கிற முதல் குறிப்பு இடம்பெறும் பாடலாக இதனைச் சுட்டலாம். பின்னாளில் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளால் புகாரில் நடந்த இந்திர விழா பெரிதும் சிறப்பித்துப் பாடப்பெற்றது,அதன்பின் கல்வெட்டு ரீதியாய் ஆதித்தன் பள்ளிப்படையில் இத்தகவல் இடம்பெறுகிறது.

ஒள்எரிமாடம்:


சங்ககால நம் முன்னோர்கள் பொருளீட்டும் முயற்சியில்,கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். அவர்கள் தலைசிறந்த கடலாடிகள் என்பதைச் சங்ககாலப் பதிவுகள் பல எடுத்துரைக்கின்றன. வத்தை, வல்லம், நாவாய், திமில், அம்பி என பலவகைக் கலங்கள் செய்து, காற்றை அடக்கி, திசையறிந்து, கடலை ஆண்டு வணிகம் செய்துள்ளனர் என்பதற்குச் சங்ககாலக் புலவர்கள் தம் பாடல்கள்வழி வரலாற்றுச் செய்திகள் பலவற்றைப் பகர்கின்றார்கள்.

மதுரை நாகனார் அகநானூற்று பாடலில் கலங்கரைவிளக்கம் பற்றிச் செய்தி பகர்கின்றார்.

"உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்

புலவுத்திரைப் பெருங்கடல் நீர் இடைப் போழ

இரவும் எல்லையும் அசைவின்று ஆகி,



விரைசெலல் இயற்கௌ வங்கூழ் ஆட்டக்

கோடு உயர் திணிமணல் அகன்துறை, நீகான்

மாட ஒள் எரி மருங்கு அறிந்து ஒய்ய"

விளக்கம்: உலகம் புடைபெயர்ந்தது போன்று அச்சம் விளைவிக்கும் நாவாய்கள், புலால் மணமுடைய அலைகள் கொண்ட பெரிய கடலின் நீரிடையிலே நீரைப் பிளந்து கொண்டுசெல்லும் இரவும், பகலும் தங்கியிருத்தல் ஏதும் இல்லாதபடியாக விரைந்து செல்லும் இயற்கையினதாகிய காற்றானது, அவற்றை அசைந்து செல்லுமாறு செய்ய, நாவாய் ஓட்டுபவன் கரை உயர்ந்த மணல் செறிந்த துறையினிடத்தே இருக்கும் மாடத்து மீதுள்ள ஒளிவிளக்கால் திசையறிந்து அவற்றைச் செலுத்த என்பதாம்.

அன்றைய தமிழகக் கடல்வணிகத்தில் மிகப் பிரமாண்டமான, அச்சம் தரக்கூடிய நாவாய்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. அவை நீரைப் பிளந்து கொண்டு செல்லும் பேராற்றல் திறன் படைத்திருந்தன என்பதும் பாடல்வழி அறியும் செய்தியாகும். மேலும், கலங்களுக்குத் திசைகாட்டுவதற்குக் கலங்கரை விளக்கங்கள் கடற்கரைப் பகுதிகளில் ஆங்காங்கே இருந்துள்ளன என்பதும் பாடல்வழி புலப்படும் வரலாற்றுத் தரவாகும்.

படத்திலுள்ள கட்டிடடப்பகுதியின் எச்சமானது முற்காலசோழர்கால கலங்கரைவிளக்கத்தின் எஞ்சிய ஒரு பகுதியாகும்.கல்கியின் பொன்னியின் செல்வனில் இக்கலங்கரை விளக்கத்திற்கும் முக்கிய இடம் உண்டு.

பாலைக்கலியில் காமரசம்:

சேரமான் பெருங்கடுக்கோ பாடிய பாலைக்கலியில் சில பாடல்கள், வள்ளுவரின் மூன்றாம் பாலினை சற்று தூக்கி சாப்பிடுவதாய் உள்ளது.

இதில் அவர் பாடிய 35 பாடல்களில் நாலாம் பாடலில் வரிகளின் சில உரைகள்:

*தலைவன் தலைவியின் முத்தாரம் எனும் அணிகலனை தாண்டி மேலெழும்பும் இளமுலைதனை இடைவிடாது அவன் தழுவிக் கொண்டிருந்தாலும், அவளது கலைந்த கூந்தலை அழகுபடுத்துவான்.


*அவளது முலைப்பல்லிலிருந்து அமிழ்துபோல் ஊறிவரும் இனிய நீர் கள்ளைவிட அதிக போதை தருமாம். அப்படி அருந்தினாலும் அவன் அவன் கவனம் சிதறாமல் அவளின் கலைந்த கேசத்தினை சீர்செய்வானாம்.

*மாந்தளிர் போன்ற நிறம் கொண்ட சுணங்கு போன்ற மைதடவிய அவளது மார்பினை நேருக்குநேர் தலைவன் கண்டாலும், அவளது நெற்றியில் அரும்பிய வியர்வையை துடைப்பானாம்.



இவற்றை பார்க்கும்போது தற்போதைய Instagramல் Trend ஆகி வரும் "அந்தரங்க உறுப்பில் பச்சை குத்தும்" காணொளியில் பச்சை குத்தும் வாலிபர்,கவனம் சிதறாது தனது கருத்தில் கொண்ட வேலையை செய்வது நினைவூட்டுகிறது.

பேய்கள்:



இன்றைய திகில் படங்களில் பேய்கள் கொடூரமுகம்,மற்றும் அச்சுறுத்தும் தன்மை கொண்டதாய் காட்டுகின்றனர்.

நம் சங்க இலக்கியத்தில் தமிழர்களிடையே பேய்கள் குறித்த நம்பிக்கை நிறைந்து இருந்ததை காட்டுகிறது,அவற்றின் இருப்பிடம், உருவம், உணவு, செயல் முதலானனைபற்றிப் பல வாறு கற்பனை செய்திருந்தனர் எனத் தெரிகிறது.

போர்க்களம், சுடுகாடு, பொதுமன்றங்கள், மரங்கள் முத லான இடங்களில் பேய்கள் வாழ்ந்ததாகவும்,நள்ளிரவில் நடுத் தெருக்களிலும் அவை திரியுமென்றும், பிளவுபட்ட காலடி, கொடிய கண், ஆட்டுக்குட்டிகளை அணியாகப் பூண்டிருக்கும் காது, அகன்ற வாய், பன்றிக் கொம்பு போன்றும் யானை நகம் போன்றும் உள்ள பற்கள், நெருப்புத் தொங்குவது போன்ற நாக்கு, குருதியைப் பூசிச் செம்பட்டையான தலை மயிர், முருங்கைக்காய் போன்ற விரல் புவவு நாற்றம் வீசும்

உடல் முதலான தோற்றத்தை அவை கொண்டிருக்குமென்றும், பிணத்தின் புண்ணைத் தோண்டிக்கொண்டும் அதன் குடலைச் சுற்றிக்கொண்டும், பிணத்தைத் தழுவிக்கொண்டும் கைகளை விலாப்பகுதியில் அடித்துக்கொண்டும் மகிழ்ச்சியோடு போர்க் களத்தில் அவை கூத்தாடுமென்றும், குருதியைக்கொண்டு கூழ் காய்ச்சி வீரர் வாயில் ஊற்றி மகிழுமென்றும், தாமே உயிர்களைக் கொன்று தின்னாமல் பிறர் கொன்று தமக்குப் பலியாகத் தந்த பிணப் பலிகளையே அவை தின்னுமென்றும், பேய்,கழுது, பூதம் முதலான பெயர்களால் கோரக் காட்சிகளை அவர்கள் கற்பனை செய்து நம்பினர்.

போரில் இறந்த வீரர்களின் மனைவியர் தங்கள் கணவன்மார் உடலைப் பெண்பேய் தழுவக்கூடாது என்று எண்ணிப் பாதுகாத்த நிலையும் உண்டு.வேப்பந்தழையைச் செருகுதல், வெண்சிறு கடுகையோ அகிலையோ புகைத்தல், ஆம்பல் குழலை ஊதுதல், மணி ஓசை காஞ்சிப்பண் பாடல் முதலான செயல்களால் பேயை நெருங்கவொட்டாமல் தடுக்கலாம் என்றுஅவர்கள் நம்பினார் கள்.இன்றும் கூட இந்த வழக்கம் நம்மிடையே உண்டு, பெண்கள் காதல் நோயால் துன்புறும்போது அதை உண ராமல், அவர்கட்குப் பேய் பிடித்ததாக எண்ணி அப்பேயை ஓட்டுமாறு வேலனை ஆடு வெட்டி வழிபடுவதும் அன்று உண்டு.

புறநானூறு – 25. கூந்தலும் வேலும்!

பாடியவர்: கல்லாடனார்.

பாடப்பட்டோன்: தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

திணை: வாகை.

துறை: அரசவாகை

மீன்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல
ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅ
துரவுச்சினந் திருகிய வுருகெழு ஞாயிறு
நிலவுத்திகழ் மதியமொடு நிலஞ்சேர்ந் தாஅங்
குடலருந் துப்பி னொன்றுமொழி வேந்தரை

அணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணி
பிணியுறு முரசங் கொண்ட காலை
நிலைதிரி பெறியத் திண்மடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றோ நின்வேல் செழிய
முலைபொலி யாக முருப்ப நூறி

மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
அவிரறல் கடுக்கு மம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே.



(இந்தப் பாடலில் புலவர் நீ இரு பெரும் மன்னர்களை போரில் வென்று நிற்கிறாய். போர்க்களத்தில் திங்களும், ஞாயிறும் மறைவதுப் போல சேரன், சோழன் ஆகிய இரு பெரும் அரசர்களை நீ வீழ்த்தியபோது, அவர்களின் மனைவிமார்கள் தலைவிரி கோலத்துடன் தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு அழுவதைக் கண்டு நீ உன் போரை நிறுத்திக்கொண்டதால் உன் வேல் தப்பித்தது. என பாண்டியனின் வீரத்தை சிறப்பாய் குறிப்பிடுகிறார்)

இப்பாண்டிய மன்னன் பெற்ற வெற்றியைச் சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. பத்துப்பாட்டில் அமைந்து இருக்கும் மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய பாட்டுகளுக்குப் பாட்டுடைத் தலைவனாக இம்மன்னன் இருக்கின்றான்.



வீரபாண்டியன் கோட்டை



விஜய் பாண்டியன்

Lawyer & Histoarchivist



ஜேம்ஸ் ஃபோர்ப்ஸ் என்பவர் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த ஓவியர், சிறந்த எழுத்தாளரும் ஆவார். பதினெட்டாம் நூற்றாண்டில், இந்தியாவில் 17 வருடங்கள் வாழ்ந்த போது, கேரளத்தின் **அஞ்சுதெங்கு கோட்டையில்** தங்கி இருந்தார். அக்காலத்தில் நடந்த நிகழ்வுகளை எல்லாம் தொகுப்பாக **"ஓரியண்டல் மெமரீஸ்"** என்ற ஓவியங்களுடன் கூடிய நூலாக எழுதியுள்ளார்.

அந்நூலில், கேரளத்தை ஒட்டி இருந்த தென்பாண்டி மண்ணின் குறுநில மன்னர் மற்றும் ராணியை குறித்து அவர் எழுதியது மிகவும் நெகிழ்ச்சிக்கொள்ளச் செய்வதாக உள்ளது. மண்ணையும் மக்களையும், அவர்கள் செய்த தியாகத்தையும் அறிந்து கொள்ள உதவிய அவரது புத்தகத்தில் இருந்து, தென்பாண்டி சீமையின் அரசி ஒருவரின் உயிர்தியாகத்தை மண்ணும் மக்களும் வழியாக பதிவு செய்கிறேன்.

பதினெட்டாம் நூற்றாண்டில், ஓவியர் ஜேம்ஸ் ஃபோர்ப்ஸ் அன்றைய மலபார் தேசத்தில் அஞ்சுதெங்கு கோட்டையில் வசிக்கும் போது, தினமும் அவர் பார்த்து வியந்ததை, கேள்விப்பட்டதை எழுதுவது வழக்கம். மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஒரு குறுநில பகுதியை ஆங்கிலேயர் முற்றுகை செய்து கைப்பற்றிய போது அங்கு நடந்த சம்பவங்களை கேள்விப்பட்டு வியந்தார்.

இந்த தீபகற்பத்தின் தெற்குப் பகுதியில், தென்பாண்டி சீமையில் வசிக்கும் தென்பாண்டி நாட்டு வீரர்கள் ஆங்கிலேயர்களுடன் கடுமையாக போரிட்டனர்.

அவர்களுக்கு எதிராக மெட்ராஸில் இருந்து கணிசமான படைகள் அனுப்பப்பட்டது . எதிரிகள் எளிதில் ஊடுருவ முடியாத வனப்பகுதியாக போர்க்களம் இருந்ததால், தென்பாண்டி நாட்டு வீரர்களை இப்போரில் ஆங்கிலேயர்கள் மிகவும் சிரமப்பட்டு தான் வெற்றியைப் பெற்றனர்.

அடர்ந்த காடுகள் மற்றும் சதுப்பு நிலங்களுக்கு மத்தியிலும், கிட்டத்தட்ட அணுக முடியாத குன்றுகளிலும் அமைந்த கோட்டை அது அதற்கு **வீரபாண்டியன் கோட்டை** என்பது பெயர் அங்கிருந்து தென்பாண்டி நாட்டு வீரர்கள் போரிட்டனர். போரின் முடிவில், அப்பகுதியின் மன்னர் போரிட்ட களைப்பில் சோர்ந்திருந்த போதிலும், அவர் தனது மனைவியுடன் பல அரிய பொக்கிஷங்கள் நிறைந்த தனது கோட்டையைப் பாதுகாப்பதற்காக விடாது போரிட்டார்.

பீரங்கிகளும் துப்பாக்கிகளும் இடைவிடாது தொடர்ந்து முழங்கியது அவ்வனப்பகுதி முழுக்க எதிரொலித்தது. இரத்த காயங்களுடன் கோட்டைக்குள் பதுங்கியிருந்த மன்னர், தன்னைத் தாங்கிக் கொண்டிருந்த அவரது ராணியின் கரங்களில் காலமானார். அந்த கோட்டை கொஞ்சம் கொஞ்சமாக எதிரிகள் வசமாகி கொண்டிருந்தது. மண்ணை காக்கும் முயற்சியில், தனது மடியிலேயே விழுந்து உயிரை விட்ட தனது கணவரின் மரணம் அந்த ராணியை மேலும் உலுக்கியது.

கணவரின் வீரமரணத்திற்குத் தாம் தக்க மதிப்பை அளிக்க வேண்டும் என அவர் எண்ணினார். உடனடியாகத் தனது மெய் காவலர்களில் ஒருவனை அழைத்து, "இந்தக் கோட்டைச் எதிரிகள் வசமாவதற்கு முன்பே உன் வாளைக் கொண்டு என் நெஞ்சில் குத்தி விடு" என கண்ணீர் மல்க கட்டளையிட்டார். அவருக்கு கீழ்படிந்த அவ்வீரனும்

தனது ராணியின் உத்தரவை கனத்த மனதுடன் நிறைவேற்றினான்.

அந்த மண்ணின் வழக்கங்களின் படி, அந்த ராணி தனது உயிரை விடத் தீர்மானித்திருந்தார். கோட்டைக்குள் நுழைந்த ஆங்கிலேயர்கள், துரதிர்ஷ்டவசமான இந்த நிகழ்வினையும் கண்டு வியந்தனர். ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு இணைந்தே இறந்து கிடந்ததைக் கண்டனர். எதிரியாக இருந்த போதிலும், அந்த ராணியின் தியாகமிக்க இந்தச் செயலுக்கு மரியாதை அளிக்கும் விதமாக, அவர்கள் வழக்கப்படி, சவக்குவியல்களுக்கு மத்தியில், ஆங்கிலேய அதிகாரிகள் முன்னிலையில், அந்த மதிப்பு மிக்க ஜோடியினர் ஒன்றாக வைத்து எரியூட்டப் பெற்றனர்.

இவ்வாறு திரு. ஜேம்ஸ் ஃபோர்ப்ஸ் தனது குறிப்புகளில் எழுதி இருக்கிறார். இந்த போரில் ஈடுபட்ட ராஜாவும் அந்த ராணியும் யார் என்பதை



இப்போது இங்கே ஆராய்ந்து பார்ப்போம். இந்நிகழ்வு நடக்கும்போது, அஞ்சுதெங்கு கோட்டையில் தங்கியிருந்த ஜேம்ஸ் ஃபோர்ப்ஸ், லண்டனில் ஸ்காட்ஸ் குடும்பத்தில் பிறந்தவர். 1765 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் எழுத்தாளராக இந்தியாவிற்குப் பயணம் செய்து, 1784 வரை இங்கேயே தங்கியிருந்தார். சிறந்த எழுத்தாளர் மற்றும் ஓவியக்கலைஞரான அவர், 52,000 பக்கங்களில் இந்திய வாழ்க்கை, அதன் வனவிலங்குகள், தாவரங்கள் மற்றும் கட்டிடக்கலை ஆகிய அனைத்து அம்சங்களையும், அதனைப் பற்றிய குறிப்புகள் மற்றும் தனது ஓவியங்களை தன் நூல்களில் பதிவு செய்துள்ளார்.

இதன்படி பார்த்தால், அவரின் காலத்தில் கேரளத்தை ஒட்டிய பகுதிகளில் ஆங்கிலேயருடன் போர் செய்து இறந்த குறுநில மன்னர் யார் என ஆராயும் பொழுது, நம்பித் தலைவன் பட்டயத்தைத் தனது தலைமையிடமாகக் கொண்ட திருக்குறுங்குடி சிவராமத் தலைவராக இருக்க கூடும் என அறிய முடிகிறது.

இவரைப் பற்றிய குறிப்புகள் திருநெல்வேலி வரலாற்றில் மிகவும் சுருக்கமாகத் பதிவாகி இருக்கிறது. ஆற்காட்டு நவாப் மற்றும் கிழக்கிந்திய கம்பெனியின் சார்பாக திருநெல்வேலி பகுதியில், டிசம்பர் 8, 1781ல் புதிதாக ஆங்கிலேய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அந்த நேரத்தில், திருக்குறுங்குடியிலும் களக்காடு முதலிய பகுதிகளிலும் கோட்டைகள் அமைத்து ஆண்டு வந்த சிவராமத் தலைவனார், ஆங்கிலேய அதிகாரத்திற்குக் கட்டுப்படாமல் சுயாட்சி செய்து வந்தார்.

அவரை அடக்க, வெள்ளையர் அரசாங்கம் 1782ல் கேப்டன் எடிங்டன் மற்றும் லெப்டினன்ட் கர்னல் நிக்சன் ஆகியோருக்குத் தேவையான இராணுவ உதவியை வழங்குமாறு உத்தரவிட்டது. அவர்களுடன் போரிட்ட சிவராமத் தலைவனார், போரிலேயே இறக்கிறார். திருநெல்வேலி வரலாறு இவரை 'மிகவும் சக்திவாய்ந்த தலைவர்' என கூறுகிறது.



போரில் இவரது கோட்டைகள் தரைமட்டம் ஆக்கப்பட்டன. இன்றும் சிவராமத் தலைவனார் சிலை, ஒரு இடிந்த கோட்டையின் சுவர்களுக்கு நடுவில்தான் உள்ளது. இச்சிலை, அவரின் தியாகத்தின் காரணமாகவே எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இந்த சிவராமத் தலைவனாரின் கட்டளைக்கு நான்குநேரிப் பகுதியின் புரட்சிகாரர்கள் கட்டுப்பட்டு நடந்துள்ளனர். ஃபோர்ப்ஸின் குறிப்புகளின் படி, மேற்கு தொடர்ச்சிமலை பகுதியில் இருந்த ராஜ்ஜியம் இவருடையது என்பதால், அது களக்காடு பகுதியாக இருக்க வேண்டும்.

கேரளத்தை ஒட்டிய பகுதி என்பதால், செய்தியை விரைவில் அஞ்செங்கோ கோட்டை அறியக் கூடிய தூரம் இதுவே ஆகும். ஃபோர்ப்ஸ் இருந்த காலத்தில் நடந்த தென்பாண்டி சீமை வீரர்களுக்கும், ஆங்கிலேயப் படைகள் மோதிய போரும் இதுதான். மன்னர் ஒருவர் இறந்ததும் இந்த காலத்தில்தான். ஃபோர்ப்ஸ் தனது நூலில் தலைப்பாக "A MARAWAR HEROINE" என கூறியிருப்பதால், அவர் குறித்துள்ள ராணியின் கணவர் போரில் வீரமரணம் அடைந்த சிவராமத் தலைவராகவே இருக்க முடியும்.

இவரைத் தவிர வேறு எந்த குறுநில தலைவரும் அந்த காலகட்டத்தில் போரில் இறந்ததாகச் செய்திகள் கிடைக்கவில்லை. கணவனுக்காக தன்னை மாய்த்துக் கொண்டு, எதிரிகளான ஆங்கிலேயர்களே போற்றிப் புகழ்ந்த இம்மண்ணின் வீரமிகு ஒரு பெண்ணின் உயிர்த்தியாகம், தமிழர் வரலாற்றில் போற்றப்பட வேண்டும்.

கன்னல் சுவை சங்கத்தமிழ்

பாகம்-6





பௌசியா இக்பால்
ஆசிரியர்
சத்தியமங்கலம்





மென்புலம்

வணக்கம் அனைவருக்கும்!

கடந்த மாதக்கட்டுரையில் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள வேளாண் நிலங்கள் தொடர்பான சங்கப்பாடலைப் பற்றித் தெரிந்துகொண்டோம். இன்றும் அதன் தொடர்ச்சியாக **மென்புலம்** பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ள சங்கப்பாடலைப் பார்க்கலாம்.

இன்றைய பதிவிற்கு எடுத்துக்கொண்டது, **புறநானூற்றில்** இருந்து ஒரு பாடலை. இப்பாடலின் வரிகள் மற்றும் பொருளை தெரிந்து கொள்வதற்கு முன், இப்பாடல் உருவான சூழலைப் பற்றித் தெரிந்துகொள்வோம். இப்பாடலைப் பாடியவர் **பெருந்தலைச் சாத்தனார்** எனும் புலவர். இவருடைய ஆறு பாடல்கள் புறநானூற்று தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்த ஆறுபாடல்களில் ஐந்து பாடல்கள் தான் பரிசில் வேண்டிச் சென்ற அரசர்களை பற்றிக் கூறுவதாகவே அமைந்துள்ளது. மேலும் இப்பாடல்களின் வாயிலாக இப்புலவர் மதியாத இடத்தில் எதையும் பெற விரும்பாதவராகவும், அத்தகைய அரசர்களுக்கு தக்க பதில் தந்து திரும்பும் குணமும், சினமும் கொண்டவர் என்பதும் நன்கு தெரியவருகின்றது.

இப்புலவர் **மூவன்** என்ற குறுநில மன்னரின் கொடைத்தன்மையை அறிந்து அவரைப் புகழ்ந்து பாடி பரிசில் பெற்றுவரலாம் என்று அவருடைய நாட்டை நோக்கிச் செல்கின்றார். இனி, நம் புலவர் அரசர் மூவனைப் புகழ்ந்து எவ்வாறு பாடினார்? புலவருக்கு பரிசில் கிடைத்ததா என்பதைப் பாடலின் வரிகளை வாசித்தபின் அறிந்துகொள்வோம்.

புறநானூறு பாடல் : 209

பாடியவர் : பெருந்தலை சாத்தனார்

பாடப்பட்டோன் : மூவன்

பொய்கை நாரை போர்வில் சேக்கும்

நெய்தல்அம் கழனி நெல்அரி தொழுவர்

கூம்புவிடு மென்பிணி அவிழ்ந்த ஆம்பல்

அகல் அடை அரியல் மாந்தித் தெண்கடல்

படுதிரை இன்சீர்ப் பாணி தூங்கும்

மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந!

பல்கனி நசைஇ அல்கு விசும்பு உகந்து

பெருமலை விடர்அகம் சிலம்ப முன்னிப்

பழனுடைப் பெருமரம் தீர்ந்தெனக் கையற்றுப்

பெறாது பெயரும் புள்ளினம் போல, நின்

நசைதர வந்து நின்இசை நுவல் பரிசிலேன்

வறுவியேன் பெயர்கோ? வாள்மேம் படுந!

ஈயாய் ஆயினும் இரங்குவென் அல்லேன்;

நோயிலை ஆகுமதி; பெரும, நம்முள்

குறுநணி காண்குவ தாக; நாளும்

நறும்பல் ஒலிவரும் கதுப்பின் தேமொழித்

தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்

பெருவரை அன்ன மார்பின்

செருவெம் சேஎய் நின் மகிழ்இரு க்கையே.

பாடல் விளக்கம் :

பாடலின் ஆரம்பத்தில் இம்மன்னன் ஆட்சி செய்யும் நாட்டில் வாழும் மக்களின் இயல்பு வாழ்வை இயற்கையோடு இணைத்து புகழ்ந்து பாடுகின்றார் புலவர். குளங்களில் மேய்ந்த நாரைகள் அங்கிருக்கும் வைக்கோற்போரின் மீது படுத்து இளைப்பாறியதாம். நாரைகள் படுத்து இளைப்பாறும் அளவிற்கு, அளவிற்கு அதிகமாக வைக்கோற்போர்கள் உருவாகும் அளவிற்கு தங்கள் நிலங்களில் நெல்லை அறுவடை செய்தனராம் உழவர்கள். நெல் அறுவடை முடிந்து நிறைந்த விளைச்சலையும் பெற்ற மகிழ்வில் தங்களின் உடல்சோர்வு நீங்க, அங்கே மலர்ந்திருக்கும் ஆம்பல் மலர்களின் இலைகளில் மதுவை ஊற்றிக் குடித்து, தங்கள் வயல்களுக்கு அருகில் இருந்த கடற்கரையில் தோன்றிய அலைகளின் ஓசைக்கு ஏற்றவாறு ஆடி மகிழ்ந்தார்களாம்.

“இத்தகைய செழிப்பான ஊர்களையும், வளமான வாழ்வு வாழும் குடிகளையும் ஆளும் தலைவனே! உன்னுடைய புகழ் பலநாடுகளிலும் பாடப்படுகின்றது. அதனை நானும் செவியுற்றேன். உடனடியாக உன்னைப் பாடி பரிசில் பெற உன்னை நாடி வந்தேன். நான் எவ்வாறு உன்னை நாடி வந்தேன் என்று உனக்குத் தெரியுமா? இதோ கூறுகின்றேன், அதையும் தெரிந்துகொள்.”

“மலையின் உச்சியில் குகைகளும் பாறைகளும் நிறைந்திருக்கும் இடத்தில், வானை எட்டிவிடும் முயற்சியில் வளர்ந்து நிற்கும் செழிப்பான மரங்களில் சுவைமிகுந்த கனிகள் பழுத்து நிறைந்து இருந்துள்ளது. அப்போது அங்கிருந்த பறவைகள் அம்மரத்தின் பழங்களை சுவைத்தனவாம். பழங்களைச் சுவைத்த பறவைகள் தாங்கள் சுவைத்து மகிழ்ந்த பழங்களின் சிறப்பை மற்ற பறவைகளுக்கும் கூற, அதனை கவனித்துக் கேட்டதாம் ஒரு பறவை. சுவைத்தவர்கள் கூறிய அனுபவத்தைக் கேட்டதும், பெருத்த மரத்தில் பழுத்திருக்கும் அக்கனிகளை தானும் சுவைத்திட விரும்பியதாம். எனவே காலம் தாழ்த்தாமல் தன்னால் முடிந்த அளவிற்கு வானில் உயரப் பறந்து, மலைகளின் இடையே புகுந்து, இறுதியில் அம்மரத்தையும் கண்டுகொண்டதாம். ஆனால், பாவம் அப்பறவை…” என்ற புலவர் மேலும் தொடர்கின்றார்.

“பறவை வந்த நேரம் கனிகள் கிடைக்கும் காலம் கடந்துவிட்டிருந்த காரணத்தினால், பறவையின் விருப்பம் நிறைவேறாமல் போய்விட்டது. இதற்காக பறவை வருத்தப்பட்டு ஒரு பயனும் இல்லை. குறித்த பருவத்தில் வந்திருந்தால் மற்றப் பறவைகளைப் போல பழங்களை சுவைத்திருக்கலாம். பருவம் தவறி வந்தது பறவையின் தவறேயன்றி மரத்தின் தவறல்ல” என்று கூறுகின்றார்.

இக்குறிப்பில் இருந்து, புலவர் வந்த நேரத்தில் அந்த அரசன் வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பது நம்மால் புரிந்துகொள்ள முடிக்கின்றது. இருப்பினும் அதற்கும் புலவர் விளக்கம் தருகின்றார்.

“எத்தகைய ஆபரணமும் அணியாவிட்டாலும் அழகிய நீண்ட கருங்கூந்தலைப் பெற்ற பெண்கள் அழகானவர்கள். ஆனாலும், இவர்கள் கலைநயம் மிகுந்த ஆபரணங்களை அணிந்து தங்கள் அழகுக்கு மேலும்

அழகு சேர்த்து தங்களை அலங்காரப்படுத்திக் கொண்டு உனக்காக காத்துக்கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் நீயோ! அவ்வழகிய பெண்களை அணைத்து இன்பத்தோடு வாழாமல், முருகனைப் போல போர் முனைக்குச் செல்லவே விரும்புகின்றவனாக, வீரத்திற்கு முன்னுரிமை தருபவனாக இருக்கின்றாயே! வாள் வீரனே!!

உன்னை நாடி வந்தேன், நான் வந்த நேரமோ நீ உன் மகிழ்வைக் கூடப் புறந்தள்ளிவிட்டு உனது பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளாய். இந்நிலையில் நான், உன்னைப் பாடி பரிசில் பெறவில்லை என்பதனை, உன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரிவிக்க விரும்பவில்லை. உனக்கும், உன்னை நெருங்கியவருக்கும் தவிர வேறு யாருக்கும் இந்த நிகழ்வு தெரிந்திட வேண்டாம். மேலும், எனக்கு பரிசில் கிடைக்கவில்லை என்பதற்காக நான் உன்னைத் தூற்றமாட்டேன். மாறாக உன் மக்களை காக்கும் உன்னத பணியில் ஈடுபட்டிருக்கும் நீ, நோய்நொடிகள் இல்லாமல் மகிழ்வுடன் நீண்ட காலம் வாழ வேண்டும் என்றே உன்னை வாழ்த்துவேன்." என்று கூறுகின்றார் புலவர்.

பாடலிலுள்ள சொற்களுக்கான பொருள் :

பொய்கை = குளம்;

போர்வு = வைக்கோற் போர்;

சேத்தல் = கிடத்தல், தங்கியிருத்தல்.

கழனி = வயல்;

தொழுவர் = உழவர்.

பிணி = அரும்பு;

ஆம்பல் = அல்லி.

அடை = இலை;

அரியல் = மது;

மாந்துதல் = குடித்தல்.

சீர் = தாளவொத்து;

பாணி = இசை;

பாணி தூங்குதல் = தாளத்திற்கேற்ப ஆடுதல்.

மென்புலம் = மருதமும் நெய்தலும்.

அல்கல் = தங்குதல்;

விசும்பு = ஆகாயம்;

உகந்து = உயர்ந்து.

விடர் = மலைப்பிளவு, குகை;

சிலம்பு = ஒலி;

முன்னுதல் = முற்படுதல், எதிர்ப்படுதல்.

கையறுதல் = செயலறுதல்.

நசை = விருப்பம்;

நுவலுதல் = கூறுதல்.

வறுவியேன் = வறுமையுடையவன்

குறு நணி = மிகுந்த நெருக்கம்

நறும்பல் = நறுமணம் மிகுந்த;

ஒலித்தல் = தழைத்தல்;

கதுப்பு = பெண்களின் கூந்தல்.

தெரியிழை=ஆராய்ந்த ஆபரணம் (ஆராய்ந்த ஆபரணங்களைத் தரித்த பெண்);

பாணி = காலம், சமயம்.

வரை = மலை.


சேய் = முருகன்;

செரு = போர்;

மகிழிருக்கை=அரசவை, நாள் ஓலக்கம் (அரசன் நாட்பொழுதில் வீற்றிருந்து அரசாட்சி செய்யும் இடம்)



மகேந்திரர் குடைவரையும் மௌலா அலி தர்காவும்



முனைவர். ம. செல்வபாண்டியன்
சமண பௌத்தவியல் ஆய்வாளர்,
பெரம்பலூர்.



ஒரு காலத்தில் சென்னையில் புறநகர்ப்பகுதியாகவும் தற்போது இரைச்சலும் பரபரப்பும் மிகுந்த பகுதியாகவும் பல்லவபுரம் எனும் பெயர் கொண்ட பல்லாவரம் திகழ்கிறது. இவ்வூரில் உள்ள குன்றினை ஊர்மக்கள் பஞ்சபாண்டவர் மலை என அழைக்கின்றனர். ஊருக்குக் கிழக்கே உள்ள குன்றின் தென்பகுதிச் சரிவில் பல்லாவரம் குடைவரை அமைந்துள்ளது. முதலாம் மகேந்திர வர்மரால் அமைக்கப்பட்ட இக்குடைவரை தற்போது இஸ்லாமியர்கள் வழிபடும் தர்காவாக மாற்றப்பட்டுவிட்டது. மேலும் தமிழ்நாட்டில் உள்ள குடைவரைகளில் தர்காவாக மாற்றப்பட்டு விட்ட ஒரே குடைவரையும் இதுவே ஆகும்.

குடைவரைகள்:

மலைச்சரிவுகளில் அமைந்துள்ள பெரும்பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயில்கள் குடைவரைக் கோயில்கள் (சுழஉம ஊரவ வுநஅிடநள) எனப்படுகின்றன. பாண்டியர், பல்லவர், அதியர், முத்தரையர் மன்னர்களால் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னர் மகேந்திர வர்மரின் மண்டகப்பட்டு குடைவரைக் கோவிலையே தமிழகத்தின் முதல் குடைவரைக் கோயில் என வரலாற்று அறிஞர்கள் பலர் சுட்டுகின்றனர். ஆனால் பாண்டிய மன்னர் செழியன் சேந்தன் கட்டிய பிள்ளையார்பட்டி மற்றும் மலையடிக்குறிச்சி குடைவரைகளே முதல் குடைவரைக் கோயில்கள் எனச் சில வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே இது தொடர்பாக வரலாற்று ஆய்வாளர்களிடம் ஒத்து கருத்துக்கள் இல்லையெனலாம்.

மகேந்திரர் குடைவரைகள்

பல்லவ அரசரான மகேந்திரவர்மர் மாபெருங் கலைஞர் எனில் அது மிகையில்லை. குடைவரைகளில் அவர் செய்த புதுமைகளும் அவற்றில் வெளிப்படும் நுட்பங்களும் எண்ணி வியக்கத்தக்கவையாகும்.

தமிழகக் கோவில் கலை வரலாற்றில் மகேந்திரரின் படைப்புகள் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தன. மண்டகப்பட்டு குடைவரையின் முகப்பிலுள்ள மேற்கு அரைத் தூணின் மேற்சதுர வடமுகத்தில் வெட்டப்பட்டுள்ள பின்வரும் பல்லவ கிரந்தக் கல்வெட்டு,

1. ஏத த₂நிஷ்டக மத்ரும மலோ
2. ஹ மசு₄தம் விசித்ர சித்தேந
3. நிர்ம்மாபித ந்ருபேண ப்₄ரஹ்ம
4. ச₀வரவிஷ்ணு லக்ஷிதாயதநம்

என அமைந்துள்ளது (நுஐ 17இ P. 14-17) செங்கல், மரம், உலோகம் சுதை முதலிய கட்டுமானப் பொருட்கள் இன்றி, பிரம்மன், ஈசுவரன், விஷ்ணு ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் விசித்திர சித்தன் எனும் அரசரால் இலக்ஷிதாயனம் எனும் கோவில் எடுப்பிக்கப்பட்டது என்பதே இதன் பொருளாகும். கோவில் கட்டுமானத்திற்கு வழங்கமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த நான்கு வகைப் பொருட்களையும் தவிர்த்துப் புதிதாகப் புதிதாக ஒன்றில் கோயில் அமைந்ததாக மகேந்திரர் அறிவிக்கிறார்.

கி.பி.590 முதல் கி.பி.630 வரை ஆட்சிபுரிந்த மகேந்திரர் ஏழு குடைவரைக் கோவில்களை அமைத்துள்ளார். இலக்ஷிதாயனம் (மண்டகப்பட்டு ∴ விழுப்புரம் மாவட்டம்), பல்லாவரம் குடைவரை (சென்னை), மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள்

(திருவண்ணாமலை மாவட்டம்), மகேந்திர விஷ்ணு கிரகம் (மகேந்திரவாடி ∴ வேலூர் மாவட்டம்), அவனிபாஜன பல்லவேசுவரம் (சீயமங்கலம் ∴ திருவண்ணாமலை மாவட்டம்), சத்ரு மல்லேசுவராலயம் (தளவானூர் ∴ விழுப்புரம் மாவட்டம்) இலளிதாங்குர பல்லவேசுவர கிருகம் (மலைக்கோட்டை ∴ திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய குடைவரைகள் அப்பெருமகனாரால் உருவாக்கப்பட்டவை ஆகும். வல்லம் குடைவரைகள் (செங்கல்பட்டு மாவட்டம்) குரங்கணில் முட்டம் கல் மண்டகத்து ஆழ்வார் குடைவரை (திருவண்ணாமலை மாவட்டம்) சிகாரி பல்லவேசுவரம் (மேலைச்சேரி ∴ விழுப்புரம் மாவட்டம்) ஆகியன மகேந்திரர் காலக் குடைவரைகளாகும்.

மகேந்திரரின் அடியாரான வயந்தப் பிரியரசரின் மகனான கந்தசேனன் என்பார், வல்லம் குடைவரைகளைச் செய்தவர் எனக் கல்வெட்டுகளின் வழி அறிய முடிகிறது. முதற் குடைவரையில் உள்ள நான்கு கல்வெட்டுகளில், முதற் கல்வெட்டில் மகேந்திரரின் விருதுப்பெயர்கள் இடம் பெற்றுள்ளன. சிகாரி பல்லவேசுவரத்தின் முகப்பு தென்முழுத்தூணில் காணப்படும் பல்லவ கிரந்தக் கல்வெட்டு, இக்குடைவரையை சர்வநாதனான அரசர் சந்திராதித்யர் அமைத்ததாகக் குறிப்பிடுகிறது.

மகேந்திரர் குடைவரைகளின் பொதுத்தன்மைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். □... அவை மண்டப வகை திருக்கோயில்களாக அமைந்து காணப்படும். மகேந்திரன் அமைத்த குகைக் கோயில்களில் அவனுடைய விருதுப் பெயர்களின் வரிசையாகவோ, அர்ப்பணமாக அமையும் எளிய கவிதைகளாகவோ அவனால் சான்றளிக்கப்பட்ட கல்வெட்டுகள் இருக்கும்□. (கே.ஆர்.சீனிவாசன், 2004:40)

பல்லாவரம் குடைவரை

குன்றில் தெற்கு நோக்கி அமைந்த பல்லாவரம் குடைவரை, மலைச்சரிவின் இடைப்பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. இக்குடைவரை படிகளும் பிடிச்சுவரும் கொண்டு அமைந்துள்ளது. குடைவரையின் முகப்பு பாறையோடு இணைந்த இரு அரைத்தூண்கள் மற்றும் முழுத்தூண்கள் என ஆறு முதல் வரிசைத் தூண்களால் ஐந்து அங்கணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் பின் சுவரில் வெட்டப்பட்டுள்ள ஐந்து கருவறைகளில் மையத்திலுள்ள கருவறை மட்டும் மண்டபத்துக்குள் முன்னிழுக்கப்பட்டுள்ளது. □கருவறைகளின் பின்சுவரையொட்டி அவற்றின் கீழ்ப்புறத்தே செவ்வக மேடைகள் வெட்டப்பட்டுள்ளன. இம்மேடைகளின் நடுவில் சதுரக் குழிகள் உள்ளன. இக்குழிகள் இக்கருவறைகளில் இருத்தப்பட்டிருந்த இறைத் திருமேனிகளுக்கான பிடிமானங்கள் ஆகும்□ (இரா.கலைக்கோவன், 2004 : 28) மகேந்திரரின் பிற குடைவரைகளில் இருப்பதைப் போன்ற காவலர்கள், பல்லாவரம் குடைவரையில் அமைக்கப்பெறவில்லை. இக்கருவறைகளில் இருந்த இறைமூர்த்திகள் எவையென அறியக்கூடவில்லை.

□இக்குகைக்கோயிலில் உள்ள ஐந்து உள் அறைகளை மகேந்திரன் காலத்துச் சிலைகள் இங்கு இல்லாத பிற்காலத்திற் கண்ட பல்லவபுர மக்கள் உண்மை அறியாது இக்கோயிலுக்குப் □பஞ்சபாண்டவர் கோயில்கள்□ என்று பெயரிட்டனர். (மா.இராசமாணிக்கனார். 2000 :94).

கல்வெட்டுகள்

பல்லாவரம் குடைவரையில் இருவரிசைத் தூண்களின் உத்திரப்பகுதிகளில் மகேந்திர வர்மரின் விருதுப் பெயர்கள் பல்லவ கிரந்தத்தில் வெட்டப்பட்டுள்ளன. இவை வடமொழி, தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் அமைந்துள்ளன. இக்குடைவரையில் வேறு கல்வெட்டுகள் எதுவும் இல்லாத நிலையில் மகேந்திரரின் விருதுப் பெயர்கள் மட்டுமே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். □...இதில் அவன் தன்னை, சங்கீரண சாதி□ என்று

குறிப்பிட்டுள்ளான். சதுரஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீரணம் என்ற ஐந்து தாள வகைகளுள் சங்கீரணம் என்பதை அவன் புதிதாகக் கண்டுபிடித்து, அதன் வகைகளையும் ஒழுங்குகளையும் அமைத்தான் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சங்கீரணம் என்ற தாள வகையைக் கண்டு பிடித்தமையால்தான் இவன் தன்னை, சங்கீரண சாதி என்று அழைத்துக் கொண்டான் (தி.இராசமாணிக்கம், 1989 : 8) பல்லாவரம் குடைவரை இஸ்லாமியரின் வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டுவிட்டு பல்வேலு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டதால் பிற கல்வெட்டுகள் மறைக்கப்பட்டிருக்கக்கூடும்.


கல்வெட்டுப் பாடம்

1. ஸ்ரீ மஹேந்திரவிக்ரமன், மத்தவிலாஸன், சேத்தகாரீ, விசித்ரசித்தன், சிளுந்து, செறுளுச்செம்பூரு, ஆலுப்தகாமன், விடேமாயன், தர்ப்யவிஷஹ, வோகவச்யன், த்வாக்நி, கலஹப்ரியன், லளிதாங்குரன், மயமக்கு, சித்ரகாரப்புலி, நிவம்பு, நில்வுலேநேயம்பு,வம்பு, வுகா, வங்கஹம்பு, காத்யு, கதும்பு, கடும்கடாயு,விலேயாள. பலபாடி, வெந்துலவித்து, அலர்வலே, ஆஸிட்டி, அர்க்கபாஸும்பு, தண்டிகல்ல, வாயிவெண்டி, யமுகு, ஸங்கீர்ண்ணஜாதி, ஏத்யு.
2. இடுகளி, பிஸுகு, பிடுவிரே, பேரிந்தி, ப்ரகாரணன், ப்ரவ்ருத்தமாத்ரன், புகாபிடுகு, பஸரம்பு, அநந்யன், பவிது, பகளி, பாகு, புஜ்ஜநகந்து, ப்ராந்தன், ஒத்து, ஓத, உத்ததி, உபமானன், உம்மாம்கும்டு, காமார்ஜ்வன், கடும்க்ராகன், கடுந்தேரம்பு, குணபரன், தெப்பு, தாள்வி, ததுதண்ட, தநும்புநோமி, துகாநு, தோத்யு, தோட, தெய்ய, ஸ்ரீத்ருடபக்தி, துநுவார்ய்ய, உடுகாஸிட்டி... தர்மபாலக.
3. ஸத்யசந்தன், லக்ஷிதன், தஷ்டதுஷ்டப்ருஷ்டசரிதன், நைஹிகாமுத், ரிகா, நயம்பு, நது்கு, மஹாமேகன், மந்பராவு, மது, மாத, விதிர்சுயோ, மூகவர்ஜ்ஜன், மொக்கர, சோளசுளி, சுர்ம்பு, படுஸித்த, சளிஸப்புருட்டு, வேஸாறு, புநாத, வம்பரன், வாவேறடி... வம்கிளு, வ்ளாபு, விரஸன், வ்யவஸ்திதன், வ்யவஸாயன், அநித்யராகன், அவநிபாஜனன், அநுமாநன், அபிமுகன், ஆகாரி, ஆஹார்யபுத்தி, ஆயதி...

தற்போதைய நிலை

குடைவரைக்குச் செல்லும் படிகளும் பிடிச்சுவரும் கட்டுமானத்தால் வெளித் தெரியவில்லை. இது தற்போது இஸ்லாமியர்களின் வழிபாட்டுத்தலமாக (இஸ்லாமியத் துறவிகள் ∴ வலிமார்களின் சமாதியின் மீது எழுப்பப்படும் வழிபாட்டுத்தலம்) மாற்றப்பட்டுள்ளது. முகப்புத் தூண்களில் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. வாயில்கள் இசுலாமிய கலைப்பாணிக்கு மாற்றப்பட்டுவிட்டன. அர்த்த மண்டபப் பின்சுவர் மற்றும் படிகளில் பளிங்குக் கற்களும், நடுக்கருவறைச் சுவரில் கண்ணாடிச் சில்லுகளும் பதிக்கப்பட்டுள்ளன.


இக்குடைவரை எப்பொழுது முதல் தர்காவாக மாற்றப்பட்டது என்பதற்கான சான்றுகள் இல்லை. வழிபாட்டுத்தலத்தின் பொறுப்பாளர் கூறும் வாய்மொழிக் கதையின்படி சற்றொப்ப 400 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் பெருங்காடு இருந்தது. இங்கு இருந்த சிங்கம் ஒன்று மக்களைத் தாக்க வந்தது. மக்கள் அதனை விரட்டியும், இங்கிருந்து செல்லாததால் இராணுவம் வந்து துப்பாக்கியால் சுட்டது. அதன் தடயங்கள் இன்னும் உள்ளன. அப்போது இப்பகுதிக்கு வந்த ஹஜ்ரத் மௌலா அலி எனும் இஸ்லாமியத் துறவி அச்சிங்கத்தைக் கட்டுப்படுத்தினார். இங்கு தங்கி மக்களுக்கு நல்லறத்தை போதித்து வந்த அவர் மறைந்ததும் அவருக்கு தர்கா அமைத்து வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



இந்த தர்கா அவருடைய பெயரால் ஆஸ்தான ஏ மௌலா அலி தர்கா என அழைக்கப்படுகிறது. இந்த தர்காவில் முகப்பில் பிறையிலிருந்து எழும் கை சின்னம் (அபய ஹஸ்தம்) அமைக்கப்பட்டுள்ளது. கை என்பது மௌலாவின் அடையாளம் என்பதால் அவர்கள் அதனை வழிபடுகின்றனர். நபிகளின் கைகளில் உள்ள வாளையும் அவர்கள் தங்களது அடையாளமாக தர்காவின் வாயிலில் வைத்துள்ளனர் (காவிரி நியூஸ் காணொளி). அமைதியான சூழல் நிலவும் இந்த தர்காவிற்கு எப்போதாவது சிலர் வழிபட வருகின்றனர்.

மகேந்திரர் கலைமுறை

பல்லவர் கலைமரபின் முத்திரைகளாகக் கருதப்படும் புடைப்புச் சிற்பங்கள், தரங்கப் போதிகைகள், பதக்கங்கள், முழு வளர்ச்சியுள்ள தூண்கள், கூரையுறுப்புகள், சுவர்ச் சிற்பங்கள், மகர தோரணங்கள், முன்றில் என அனைத்துமே அவர்தம் தொடக்க நிலைப் படைப்புகளான மகேந்திரர்





குடைவரைகளிலேயே பரிணமித்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. குடைவரை உறுப்புகளின் வளர்நிலைகளையும் அவற்றின் கலைச் சிறப்புகளையும் கருத்தில் கொண்டால், மகேந்திரர் குடைவரைகளை, இலஷிதாயனம், பல்லாவரம் குடைவரை, மாமண்டூர் முதற்குடைவரை, மகேந்திர விஷ்ணு கிருகம், அவனி பாஜனம், சத்ரு மல்லேசுவராலயம், இலளிதாங்குரம் எனக் கால வரிசைப்படுத்தலாம். இக் குடைவரைகளில் காணப்படும் கலைக் கூறுகளை மகேந்திரக் கலைமுறை என அழைப்பதும் பொருத்தமாகவே அமையும்□ (இரா.கலைக்கோவன். 2004:212).

இத்தகு சிறப்புகளைப் பெற்ற மகேந்திரர் குடைவரைகளுள் ஒன்றான பல்லாவரம் குடைவரை, இஸ்லாமிய சமய வழிபாட்டுத்தலமாக மாற்றப்பட்ட காரணத்தால் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து தன் தனித்தன்மையை இழந்து நிற்கிறது. குடைவரையின் அமைப்பும் மகேந்திரர் விருதுப் பெயர்களின் பொறிப்பும் மட்டுமே அதன் பழமையை உணர்த்தி நிற்கின்றன. இங்கு சென்று காணவும், ஆய்வு மேற்கொள்ளவும், ஒளிப்படம் எடுக்கவும் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

துணை நூல்கள்

1. இராசமாணிக்கனார்.மா.டாக்டர் , - பல்லவர் வரலாறு கழக வெளியீடு, சென்னை -18, 2000.
2. இராசமாணிக்கனார் தி, தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை - 18, 1989.
3. கலைக்கோவன்.இரா.முனைவர் மற்றும் நளினி மு.முனைவர் மகேந்திரர் குடைவரைகள் அலமு பதிப்பகம், சென்னை -14, 2001.
4. சாலி .ஜே.எம், தமிழகத்து தர்காக்கள், சமநிலைச் சமுதாயம், சென்னை -6, 2009.
5. சீனிவாசன் கே.அர், தென்னிந்தியக் கோயில்கள், நேஷனல் புக் டிரஸ்ட், புது தில்லி -16, 2004. (இரண்டாம் பதிப்பு).
6. பல்லாவரம் தர்கா குறித்த காவேரி நியூஸ் காணொளி.

நாட்டு ரக மீன்கள்

அறிமுகம்





இராமமூர்த்தி நாகராஜன்
வீரமரசன் பேட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.

#சல்லிப்பொடி.

#புள்ளிக்கெண்டைப் பொடி.

#இரட்டைப் புள்ளி சல்லிப்பொடி.

#Two spot barb

#Ticto barb

#Puntius ticto

#Pethia ticto.

இந்திய துணைக்கண்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட அளவில் மிகச் சிறிய நன்னீர் மீன் இனம் ஆகும்.

நீளமும் எடையும்:

எடை 1 கிராம் முதல் அதிகபட்சமாக 15 கிராம் மட்டுமே இருக்கும். நீளம் அதிகபட்சமாக 8 செமீ வரை இருக்கின்றன.

தோற்றம் மற்றும் அடையாளப்படுத்தல்:

சிறு மீன்களை அடையாளப்படுத்துதலில் அதில் உள்ள சிறு புள்ளிகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

இம்மீனின் தலைக்கு அருகில் ஒரு மச்சமும், வாலுக்கு அருகில் ஒரு மச்சமும் என இரண்டு மச்சங்கள் உள்ளன. இதன் காரணமாகவே இம்மீன் புள்ளிக்கெண்டைப் பொடி என அழைக்கப்படுகிறது.

வாழிடம்:

ஆறு, சிறு வாய்க்கால்கள், குளம், குட்டை என நன்னீர் நிலைகளில் வாழும் இயல்புடையது.

இம்மீனின் உணவுகள்:

தாவர மிதவை உயிரிகள், சிறு ஓடுடைய உயிரிகள், சிறு பூச்சி புழுக்களே இம்மீனின் உணவாகக் காணப்படுகின்றன.

முட்டையிடும் திறன்:

இம்மீனின் முட்டையிடும் திறன் (Fecundity rate) 1611 to 4130 என்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



பொருளாதார முக்கியத்துவம்:

இவை மிகச் சிறிய மீனாக இருப்பதால் உணவுக்கு பெரிதாக பயன்படுவதில்லை. ஆனால் பங்களாதேஷ் நாட்டில் இம்மீன் உணவாகப் பயன்படுகின்றது.

ஆனால் தற்போது இம்மீன் அலங்கார மீன் வளர்ப்பில் முக்கிய இடம் பிடித்திருப்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கூட்டம் கூட்டமாக வாழும் இயல்புடையது இம்மீன். இப்பண்பே இம்மீனை அலங்கார மீன் வளர்ப்பில் முக்கியமாக மாற்றி உள்ளது.



காவிரியில் இம்மீனின் நிலை:

நாட்டு ரக மீன்கள் என் இத்தொடருக்குப் பெயர் வைத்திருந்தாலும் உண்மையில் இம்மீன்கள் அனைத்தும் காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளில் இருந்தே எனக்குக் கிடைக்கின்றன. இத்தொடருக்கு #காவிரி ஆற்று மீன்கள் என்று பெயர் வைத்தாலும் மிகப் பொருத்தமே. தமிழ்நாட்டில் இம்மீனின் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே உள்ளது. *Puntius sophore* என்னும் வட்டசல்லிப் பொடியே பெரிதும் இருக்கிறது.

நன்றி!

குறிப்புதவி:

1.Age and growth of ticto barb Puntius ticto (Hamilton 1822) in the river Old Brahmaputra, Bangladesh

*SAYMUNA TARIN LUPA, REZWANA SHARMIN, ZOARDER FARUQUE AHMED AND MST KANIZ FATEMA**

Bangladesh J. Fish. (2019) 31(1) : 65-75.

2.Relationships between Body Size, Weight, Condition and Fecundity of the Threatened Fish Puntius ticto (Hamilton, 1822) in the Ganges River,Northwestern Bangladesh.

Md. Yeamin Hossain, Md. Mosaddequr Rahman & Elgorban M. Abdallah.*

Sains Malaysiana 41(7)(2012): 803–814 .

- இன்னும் நீந்துவோம்...

எழுத்தும் புகைப்படங்களும்....

இராமமூர்த்தி நாகராஜன்
வீரமரசன் பேட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.

மே மாத புதிய தொல்லியல் கண்டுபிடிப்புகள்

11.05.2024

அரிட்டாபட்டியில் பாண்டியர் காலக்கல்வெட்டு

கருப்பாயூரணி, மே 11–

'மேலூர் அரிட்டாப்பட்டியில் கி.பி. 13ம் நூற்றாண்டை சேர்ந்த பாண்டியர்கள் காலக் கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது' என வரலாற்று ஆய்வாளர் தேவி, தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம் தெரிவித்தனர்.

அவர்கள் கூறியதாவது: அரிட்டாப்பட்டி தமிழகத்தின் முதல் பல்லுயிரிய பாரம்பரிய தலம். இங்கு 2200 ஆண்டுகள் தொன்மையான தமிழி கல்வெட்டு, கி.பி. 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்கால பாண்டியர்களின் குடைவரை கோயில், கி.பி. 9ம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்து கல்வெட்டு, 13ம் நூற்றாண்டை சேர்ந்த பாண்டியர்கள் கல்வெட்டுகள் கொண்ட சிதைந்த நிலையில் இருக்கும் சிவன் கோயில், கி.பி. 7ம் நூற்றாண்டை சேர்ந்த அரிதான லகுலீசர், வலம்புரி கணபதியின் சிற்பங்கள் உள்ளன.



அரிட்டாப்பட்டியில் கண்டறியப்பட்ட கல்வெட்டு

தற்போது இங்கு மேலும் ஒரு கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது. இது 13ம் நூற்றாண்டை சேர்ந்த பிற்கால பாண்டியர் கல்வெட்டு. 7 அடி உயரம், அரை அடி நீள, அகலம் கொண்ட கல்லில் 13 வரிகள் கொண்ட தமிழ்க் கல்வெட்டு இது.

இதில் ஐந்நூற்றுவப் பெருந்தெரு என்று கல்வெட்டில் அழைக்கப்படும் அரிட்டாப்பட்டியில் தொண்டைமான் திருச்சிற்றம்பல முடையான் பெயரில் மாணிக்கம் என்பவர் தர்மம் செய்துள்ளதை கல்வெட்டு தெரிவிக்கிறது.

ஆய்வின் போது தொல்லியல் ஆய்வாளர் அறிவுசெல்வம், வரலாற்று ஆய்வாளர் சபரிராஜன் உடனிருந்தனர்.

Dinamalar

Inscriptions in a temple submerged by Bhavanisagar dam reveal a trade route

According to the inscriptions found at Sri Madhava Perumal Temple, which has largely remained submerged in the water spread area of the dam in Erode district, there was a trunk road in the area, and traders crossed River Bhavani and River Moyar to reach Wayanad in Kerala and various places in Karnataka

S.P. Saravanan

A major trade route connecting the Kongu region in western Tamil Nadu with southern Karnataka and Kerala had existed over a 1,000 years ago, according to the inscriptions found at the Sri Madhava Perumal Temple. This temple has largely remained submerged in the water spread area of the Bhavanisagar dam in Erode district.


The temple, in a dilapidated state, is currently visible following the depletion of water level in the dam to less than 46 feet, as against the full reservoir level of 105 feet. A team from Yaakkai Heritage Trust, which is into research, documentation and creation of awareness of heritage, recently studied inscriptions in and around the temple.

A village discovered

According to Kumaravel Ramasamy, a member of the trust, 10 to 15 inscriptions, each dating back to various periods, were found. They revealed a village, named Thuravalur, which existed there over 1,000 years ago with a temple for Thondreeshwaramudiayar (Lord Shiva). The area served as *peruvali* (a trunk road), and traders crossed River Bhavani and River Moyar to reach Wayanad in Kerala and various places in Karnataka. Inscriptions with the names of many traders reveal they were dealing in oil, clothes, cattle, and handicrafts, and they could have travelled on foot and used donkeys or horses for transport, he adds.

Under Hoysala rule

The area came under the Hoysala rulers. King Veera Ballala III (1292-1342), the last great king of the Hoysala Empire, ruled the area. The king asked Madhava Perumal Dhandanayaka, who was the general of the army, to rule the region. Then, he constructed the Dhandanayaka Fort along the river at a strategic point. Over a period of time, the name of the fort became Danaikan Fort. "The fort, constructed 680 years ago, was completely destroyed," says Mr. Kumaravel. "Only the damaged temple is visible now and not the destroyed fort," he clarifies.



A peek into the past: A team from Yaakkai Heritage Trust recently studied inscriptions in and around the dilapidated Madhava Perumal Temple, which is now visible as the water level in the dam has dipped. M. GOVARTHAN

Madhava Perumal Dhandanayaka's son Veera Siddha Keththaya Dhandanayaka constructed the Sri Madhava Perumal Temple inside the fort. An inscription found on a stone describes it as "Nilagiri Sadaranan Kottai", and villages along the fort were called "Oduvanganadu". While the pillars of the temple were intact, a portion of the roof and the outer wall collapsed as the temple had once remained submerged for 68 years. The damaged pillars with inscriptions and carvings can be seen scattered around the temple.

Historians believe that the fort could have been constructed in 1338 when Madhava Perumal Dhandanayaka was ruling The Nilgiris and Wayanad. They say many temples, constructed during various periods, still remain submerged and will be visible if the water level drops further.

The area was later ruled by the Vijayanagara Empire, Ummattur chiefs and Tipu Sultan. The Battle of Sathyamangalam, fought between September 13 and 15, 1790, during the Third Anglo-Mysore War from 1790 to 1792, also took place near the fort, which Tipu Sultan guarded. Later, the British brought the area under their control and the Nilgiris, which was part of the Mysore Province, was merged with the Madras Province.

Idols shifted to new temples

The construction of the Bhavanisagar dam, the first major irrigation project in Tamil Nadu after Independence, began in 1948 and was completed in 1955. People who were living near the fort and the temple were relocated outside the water spread area and settled in the villages of Vadavalli, Pudhubeerkadavu and a few other villages in Bannari. The idols in the temple were shifted to new temples in 1953.

> The Dhandanayaka Fort, constructed 680 years ago along the river at a strategic point, was completely destroyed. Only the damaged temple is visible now and not the destroyed fort.
>
> KUMARAVEL RAMASAMY, Yaakkai Heritage Trust

Velusamy, 75, a fisherman of Kanrayanmokkai, a habitation along the water spread area of the dam, says the temple was last visible in 2018. He says that only the Madhava Perumal Temple is visible after six years now, *while two other temples, the cannon base, and the fort walls will come out if the water level drops further.* Mr. Velusamy, who has been riding coracle since the age of 17, says the dam turned completely dry only once in his lifetime, and the temple stands strong, braving all calamities in all these years.

Excavations sought

Mr. Kumaravel says temples were constructed on the river beds and villages flourished for over 1,000 years in the area because of the easy terrain. "Temples were constructed even before 1,200 years in the area," he says, demanding excavations to bring out more facts. Enthusiasts believe that more stones with inscriptions may remain submerged in the water spread area.

With people in large numbers visiting the temple in coracles, the Bhavanisagar Dam Division of the Water Resources Department has placed banners in villages around the dam prohibiting entry of visitors to the temple. Since the dam is a protected area and given the drop in the inflow, coracle operators have been directed not to transport people to the temple area.

இந்து தமிழ் திசை 6 புதன், மே 8, 2024 ஊர்வலம்

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே


வயல்வெளியில் புதைந்து கிடந்த சோழர் கால நந்தி, விஷ்ணு கற்சிற்பங்கள்

பல்லவர் கால கல்வெட்டும் கண்டெடுப்பு

தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே வயல்வெளியில் புதைந்து கிடந்த சோழர் கால நந்தி, விஷ்ணு கற்சிற்பங்களும், பல்லவர் கால கல்வெட்டும் கண்டெடுக்கப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே சித்திரக்குடியைச் சேர்ந்த பேராசிரியை சத்தியா என்பவரின் வயலில் நந்தி ஒன்று பாதி புதைந்த நிலையில் இருந்ததாக கிடைத்த தகவலின் அடிப்படையில், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தின் தமிழ்ப் பண்டிதரும், வரலாற்று ஆய்வாளருமான மணி.மாறன், பொந்தியாகுளம் அரசு தொடக்கப் பள்ளி தலைமையாசிரியரும், வரலாற்று ஆய்வாளருமான தில்லை. கோவிந்தராஜன், ஆசிரியர் ஜெயலட்சுமி ஆகியோர் அங்கு சென்று ஆய்வு செய்து கற்சிற்பங்களையும், கல்வெட்டுகளையும் கண்டறிந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே சித்திரக்குடியில் வயல்வெளியில் புதைந்து கிடந்த சோழர் கால நந்தி, விஷ்ணு கற்சிற்பங்கள்.

இதுகுறித்து மணி.மாறன் கூறியதாவது: சித்திரக்குடி, கச்சமங்கலம், மாரனேரி, வெண்டயம்பட்டி போன்ற ஊர்களில் பல்லவர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

கி.பி.7-ம் நூற்றாண்டில் பல்லவர்களுக்கு உட்பட்ட முத்தரையர் ஆட்சி செந்தலை எனும் ஊரைத் தலைமையிடமாக கொண்டு நடந்துள்ளது. பிறகு சோழர்கள் ஆட்சிக் காலத்தில் சித்திரக்குடி, லிங்கத்தடி மேடு என அழைக்கப்பட்டது.

இப்பகுதியில் வயல்வெளியில் பாதி பூமிக்குள் மறைந்த நிலையில் ஒரு நந்தி உள்ளது. இந்த நந்தியானது கி.பி 9- 10-ம் நூற்றாண்டின் சோழர் காலத்தை சேர்ந்ததாக உள்ளது. இந்த நந்தியின் கழுத்தில் மணிமாலை சிறப்பாக வடிவமைக்கப் பெற்றுள்ளது.

மேலும், ஆனந்த காவேரி வாய்க்காலின் உட்புற தென்கரையை ஒட்டியவாறு தலை மற்றும் ஒரு கை உடைந்த நிலையில், இடுப்புக்கு கீழாக வாய்க்கால் கரையில் பாதி புதைந்த நிலையில் சுமார் மூன்றடி உயரமுள்ள விஷ்ணு சிற்பம் கண்டறியப்பட்டது. இப்பகுதியில் பெரிய சிவன் கோயில் இருந்து முற்றிலுமாக அழிந்து போயிருக்கக்கூடும்.

பிற்காலத்தில் அந்தப் பகுதியில் புதியதாக கோயில் ஒன்று அமைக்கப்பட்ட நிலையில், கி.பி 8-ம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் கால நந்தி ஒன்று உள்ளது.

இந்த நந்தியின் அடி பீடத்தில் பல்லவர் கல்வெட்டு இரண்டு வரி உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்லவர் கால எழுத்துப்பொறிப்புடன் முதன்முதலாக இவை கண்டறிய பெற்றுள்ளது சிறப்பாகும்.

இக்கோயில் வளாகத்தில் அச்சுதப்ப நாயக்கர் கால கல்வெட்டு ஒன்றும், பிற்காலத்தியகல்வெட்டு ஒன்றும் உள்ளது. சித்திரக்குடி, சோழர்கள் காலத்தில் சிறந்து விளங்கியது. சோழர்களுக்கு முன் ஆட்சி செய்த பல்லவர்கள் காலத்திலும் முக்கியப் பகுதியாக இருந்துள்ளதாக தெரிகிறது என்றார்.


www.aatrupadai.com